July 1954
Vol. 1
No. 8

90

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஜய வருஷ ஆனி–ஆடி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - JUL 1954
MADRAS

இந்த இதழில்

★ நேரு பிரிட்டனின் பிரதம வைரி!
★ மண்டலத்தை ஆளும் மதி
★ இன்ஷ்யூரன்ஸ் கொள்ளைக்காரர்கள்
★ மருமகனை விரட்டும் மாமியார்
★ பாலே இல்லாமல் வெண்ணெய்
★ மேதைகளும் பைத்தியங்களும் நெருங்கிய உறவினர்கள்
★ விவாகரத்து விவேகமற்றது

இன்னும் பல அரசியல், சமூக, சுகாதார ஆராய்ச்சிக் கட்டுரைகள், உண்மைக் கதைகள்.

128 பக்கங்கள்

90. 3-54
ஜ
2911,853TK
N54.1.8
198749

8

SAMSONS DRESSES

ஸாம்ஸன்ஸ் ரெடிமேட் ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன:

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

திரட்டு

பொருளடக்கம்

ஜூலை 1954

நேரு, பிரிட்டனின் பிரதம வைரி ! 3

அமெரிக்கரின் உத்தம நண்பர் நேரு 9

ஈரானியக் கவியின் அறிவுப் பூஞ்சோலை 14

இருள் தரும் ஒளி 16

அவதியளிக்கும் உதவி 17

மேல் நாட்டிலும் குடுமியுண்டு 19

வீட்டைத் தேடிவரும் ஏடு 20

மணிகள் 23

உலகத்தின் கூரை 25

சதையினால் சாவு 26

டோக்கியோவின் அதிசய புத்த ஆலயம் 27

காது மந்தம் ஏற்படுவதேன் ? 29

காகிதம் 30

திருடர்களை ஏமாற்றிய தந்திரசாலி 32

மண்டலத்தை ஆளும் மதி 33

இரண்டாவது குழந்தை 36

ரப்பர் 40

மேதைகளும் பைத்தியங்களும் நெருங்கிய உறவினர்கள் 41

இனாம் கொடுக்காமல் முடியாது 44

செய் நன்றி கொன்றார்க்கு உய்வில்லை 45

விவாகரத்து விவேகமற்றது 46

மருமகனை விரட்டும் மாமியார் 49

பிராணன் அளிக்கும் பிளாஸ்மா 52

நான் யார் ? 54

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - JUL 1954
MADRAS

கோடம்பாக்கம் சிவன் கோயில்	57
தொழிலாளிகள் சாதனையின் சிகரம்	58
விலங்குகளுக்கு அபயம்	60
துடைப்பத்தின் எச்சரிக்கை	61
இன்ஷ்யூரன்ஸ் கொள்ளைக்காரர்கள்	62
உயர்ந்த பொருள்	66
பாலே இல்லாமல் வெண்ணெய்	69
தீய்க்கும் திங்கள்	71
லண்டன் தமிழன்	76
நீர் என்னும் அற்புதம்	81
கர்லம் கெட்டுக்கிடக்கிறது	84
மரியாதை மறைந்தது	88
இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கும் வழி	92
டிக்கட்டு அனுப்பியவர்	96
லண்டன் நகரத்துப்பகல் திருடிகள்	97
ஒற்றைக் கண்ணன்	100
ஞான சம்பத்து	102
அச்சமும் கவலையும் தவிர்	105
மூன்று பெண்டாட்டிக்காரர்கள்	108
நீதித்துறையும் நீண்ட ஆயுளும்	111
மிருகங்களுக்கும் மரணச் சடங்குகள்	112
பைத்தியக்காரர்களுக்கு ஒரு சுவர்க்கம்	113
ஜல—தோஷங்கள்	115
பழிக்குப் பழி	120
பாம்பு ஆடுவது ஏன் ?	126
உங்களுக்குத் தெரியுமா ?	127

" THIRATTU " Tamil Monthly Digest. Vol. 1. No. 8

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரை பொக்கிஷம்

ஜூலை 1954

அரைப் பங்குக்குமேல் ஐரோப்பியர் என்று புகழ்பெற்றவரும் மவுண்ட்பேட்டன் குடும்பத்துக்கு நெருங்கிய நண்பருமான பிரதமர் நேருவைப் பற்றி ஒரு பிரிட்டிஷ் பத்திரிகை வெளியிட்டுள்ள அபிப்பிராயம்.

நேரு, பிரிட்டனின் பிரதம வைரி!

●

சென்ற இந்தியப் பொதுத் தேர்தலில் ஜவஹர்லால் நேருவை கறுப்புதுரை என்று எதிரிகள் ஏளனஞ் செய்தார்களாம்.

இதற்குக் காரணமில்லாமலில்லை. நேரு, காந்தி குல்லாவை எப்போதும் தரித்துக் கொண்டபோதிலும், இவர் மேனாட்டு முறைகளில் கல்வி கற்றவர். அதனால் சிந்தனையிலும் செயலிலும் மேல் நாட்டு வாசனை குடிகொண்டிருக்கும். இப்போதும், தன்னுடன் இங்கிலாந்தில் படித்த கலாசாலை நண்பர்களுடன் அடிக்கடி விருந்துகளுக்குச் சென்று இங்கிலாந்து தேசத்து நினைவுகளை ஞாபகமூட்டிக்கொள்வதுண்டு.

நேருவின் குணவிசேஷங்களாலும் இந்தியாவின் நிர்வாகத்துறையில் பிரிட்டிஷ் ஆட்சி காலந்தொட்டே உள்ள இந்திய அதிகாரிகளாலும் தான் இந்தியாவில் அராஜகம் தலைகாட்டாமலிருக்கிறது.

1947-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் 'காமன்வெல்த்'தி லிருந்து இந்தியா பிரிந்து போகாமலிருந்தது பிரிட்டி ஷாரின் அதிருஷ்டமென்று அல்ப சந்தோஷிகளான பிரிட்டிஷ் மக்கள் கருதுகிறார்கள்.

பிரிட்டனின் பரம வைரியாயிருந்த ஜவஹர்லால் நேரு இப்பொழுது பிரிட்டனின் சிறந்த நண்பனாக மாறிவிட்டா ரென்பதைப் பற்றியும் பிரிட்டிஷ் மக்கள் மகிழ்ச்சியடைகின் றனர்.

பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் நிலவியுள்ள ஆட் சிக்கு இன்னும் பரம வைரி நேருவேயாகும். விசேஷமாக தென் ஆப்பிரிக்காவில் இப்போது தாண்டவமாடிக் கொண்டிருக்கும் குழப்பங்களுக்கும் கலகங்களுக்கும் நேரு வும் அவரைத் தெய்வமாகக் கொண்டாடும் தென் ஆப் பிரிக்க இந்தியர்களுமே காரணமாவார்கள்.

குடியேற்ற நாடுகள் சிதறுண்டால் அதனால் முதலில் பாதிக்கப்படுபவர்கள் இந்தியாவிலும் வெளி நாடுகளிலு முள்ள இந்தியர்கள் தான். இது நன்கு தெரிந்திருந்தும் தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையர்கள் கைக்கொள்ளும் ஆட்சி முறைகளை எப்போதும் நேரு எதிர்க்கிறார்.

தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர்களை எதிர்க்கும் மக்களை இவர் எப்போதும் பாராட்டுகிறார். வெள்ளையர் களை ஈவிரக்கமின்றி வதைத்துக் கொண்டிருக்கும் 'மௌ மௌ' கட்சியினரை பிரிட்டிஷார் தாக்குவதாக குற்றஞ் சாட்டுகிறார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட் டத்தில் கென்யாவில் பிரிட்டிஷார் கைப்பற்றியுள்ள வழி களைத் தீவிரமாகக் கண்டித்திருக்கிறார். கீழ் நாட்டாரின்

மனத்தில் தோன்றுவதை மேல் நாட்டார் எப்போதுமே கிரஹிக்கமுடியாது. ஏனென்றால் கீழ் நாட்டாருக்குக் கபடம் அதிகம். ஒன்றை நினைத்துக்கொண்டு மற்றொன்றைப் பேசுவார்கள். தாங்கள் வேதாந்தத்தில் கற்றறிந்த மாயையினால் உலகத்துக் கண்களையே மூடுவரர்கள். காஷ்மீரப் பிரச்னையில் நேரு கையாளும் முறைகளைப் பாருங்கள்.

நேரு, காஷ்மீர் மக்கள்மீது ஏகாதிபத்திய ஆட்சி செய்ய விரும்புகிறார் என்பது வெட்டவெளிச்சமாயிருக்கிறது. ஹைதராபாத் சமஸ்தானத்தின்மீது இந்திய சர்க்கார் எடுத்த நடவடிக்கை ஏகாதிபத்திய கொள்கையைத் தானே குறிக்கிறது?

கென்யாவில் இப்போது நடக்கும் 'மௌ மௌ' கிளர்ச்சிக்கு அங்குள்ள ஹிந்துக்களின் ஆதரவு பூரணமாக இருக்கிறதென்று தெரிகிறது. இவர்கள் பணத்தாலும் தங்கள் உழைப்பாலும் 'மௌ மௌ' கட்சிக்கு உதவிபுரிகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் போலீஸ்காரனிடம் அகப்பட்டுக்கொண்ட ஒரு 'மௌமௌ'கட்சியின் அங்கத்தினர்போலீஸ் ஸ்டேஷனுக்கு வருவதற்கு முன்பே அவருக்காக வாதாடுவதற்கு ஒரு ஹிந்து வக்கீல் வந்துவிட்டாராம்!

'மௌ மௌ' இயக்கத்திற்கும் காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கத்திற்கும் ஒற்றுமையிருக்கிறது. ஐரோப்பிய நிர்வாகத்திலுள்ள பஸ்களை பகிஷ்கரிப்பது, ஐரோப்பிய மக்களின் ஆடைகளை அணிய மறுப்பது, புகை பிடிப்பது, மதுபானம் முதலியவற்றை ஒழிக்க முயற்சிப்பது முதலிய நடவடிக்கைகள் ஒரு ஹிந்துவைத் தவிர மற்றெவரால் சிந்திக்கமுடியும்?

இரு விஷயங்கள் நன்கு தெளிவாயிருக்கின்றன. ஒன்று கென்யாவில் குடியேறியுள்ள ஆசிய மக்கள் பெரும்பாலோர் 'மௌ மௌ' இயக்கத் தகவல்களை நன்கு அறிவார்கள். இரண்டாவது, காந்திஜியின் கொள்கைகளை

ஆப்பிரிக்காவிலும் பரவச்செய்து அங்கு இப்போது ஆட்சி செலுத்தும் வெள்ளையர்களைத் துரத்துவதே நேரு சர்க்காரின் லட்சியமும் கொள்கையுமாகும்.

வெளி நாடுகளின் அரசியல் விஷயங்களில் தான் தலையிட விரும்புவதேயில்லை யென்று அடிக்கடி நேரு அறிவிக்கிறார். ஆனால் நடைமுறையில் காண்பதோ வேறு. வெளி நாடுகளிலுள்ள ஹிந்துத் தலைவர்களெல்லோரையும் இந்தியாவிற்கு அழைத்து அந்தந்த நாடுகளில் கைக்கொள்ளவேண்டிய கொள்கைகளைப் பற்றி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியோடு ஆலோசித்தார். ஆப்பிரிக்காவில் உள்ள பிரபல கிளர்ச்சித் தலைவர்கள் அநேகருக்கு டில்லி சர்க்கார் அமோக வரவேற்பளித்துள்ளார்கள். ஆப்பிரிக்காவில் உள்ள இந்திய சர்க்காரின் பிரதிநிதிகள் எல்லோரும் ஆப்பிரிக்கரிடம் காந்திஜியின் சத்தியாக்கிரக இயக்கத்தை, ஐரோப்பியரை எதிர்க்கும் ஒரு ஆயுதமாக உபயோகியுங்கள் என்று தீவிரப் பிரசாரஞ் செய்கின்றனர்.

ஆப்பிரிக்காவிலிருக்கும் அநாகரிக மக்களுக்கு சட்டத்தை மதித்து நடக்கும் வழக்கமே கிடையாது. அவர்களிடையே இந்தியர்களும் இந்திய சர்க்காரும் செய்யும் பிரசாரங்களின் பலன்கள் தான் 'மௌ மௌ' இயக்கமும், ஆப்பிரிக்காவில் சமீபத்தில் நடந்த வேறு கலகங்களும் ஆகும். தாங்கள் செய்யும் பிரசாரங்கள்மூலம் தங்களுக்கே ஆபத்து நேரிட்டாலும் இந்தியர்கள் தங்களுக்கு நேரிடும் அனுபவங்களிலிருந்து ஒரு பாடமும் கற்றுக்கொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கின்றனர்.

1949-ஆம் ஆண்டில் டர்பனில் நடந்த கலகங்களினால் 25,000 இந்தியர்கள் தங்கள் வீடுகளைவிட்டு ஓட நேரிட்டது. ஆயிரக்கணக்கான இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் படுகாயங்களடைந்தனர். ஆப்பிரிக்கர்களிடையே கிளர்ச்சி செய்தால் இம்மாதிரி நடக்குமென்று தெரிந்திருந்தும்

இந்திய சர்க்காரும் தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களும் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

சிந்தனை சக்தியும் அரசியல் ஞானமும் படைத்த மேல்நாட்டான் காந்திஜியின் கீதத்திற்கு ஆடமாட்டான். நேற்று பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்துச் சுதந்திரம்பெற்ற இந்தியரின் தோற்றம், பேச்சு, நடவடிக்கை யெல்லாம் ஆப்பிரிக்கர்களை மயக்கி அவர்களை அசாதாரண துணிவுள்ளவர்களாய்ச் செய்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்ப்பதினால் ஏற்படும் தண்டனைக்காளாகிறவர்கள் வெளிநாடுகளிலுள்ள இந்தியர்களே. ஒரு ஆப்பிரிக்கச் சங்கத் தலைவரை சமீபத்தில் சந்தித்தேன். இவர்சம்பாஷணையிலிருந்து இவருக்கும் இவர் இனத்தாருக்கும் ஹிந்துக்கள்மீதுள்ள விரோதத்திற்கு அளவேயில்லையென்று எனக்குத் தோன்றியது. தன்னால் முடியுமானால் தன் நகரத்திலுள்ள 90,000 இந்தியர்களை மூட்டைக்கட்டி இந்தியாவிற்கே அனுப்பிவிடத் தயாராய் இருப்பதாக அந்த ஆப்பிரிக்கத் தலைவர் கூறினார்.

பிரிட்டிஷ் கயானாவைக் கவனியுங்கள், மோரீஷ் தீவுகளைக் கவனியுங்கள், பீஜித்தீவுகள், மலேயா, டாங்கனிகா, உகாண்டா-எங்கும் ஒரே தலைவலிதான். இந்த நாடுகளிலெல்லாமுள்ள இந்தியர்கள் [பெரும்பாலும் ஹிந்துக்கள்] ஒரே லட்சியத்தைக் கைக்கொண்டு தீவிரமாக உழைக்கிறார்கள். அந்த லட்சியமென்னவென்றால் இந்த தேசங்கள் எல்லாவற்றிலும் நிலவியுள்ள பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்து அதற்குப் பதிலாகத் தங்கள் ஆட்சியை நிலைநாட்ட வேண்டுமென்பதுதான்.

ஒருவேளை நேருவின் மனத்தில் மட்டும் பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக இந்தியரின் ஆட்சியை இந்த வெளிநாடுகளில் நிலைநாட்டவேண்டுமென்ற அபிப்பிராயமில்லாமலிருக்கலாம். ஆனால் நேருவிற்குப் பின் இந்தி

யர்களின் தலைவராய் வருபவர்கள் இம்மாதிரி அபிப்பிரா யங் கொள்ளாமலிருப்பார்களா? இந்தியாவிலோ தீராத பஞ்சம். ஜனத்தொகை, அதிகரித்து வருவதைத் தடுக்க ஒரு பூகம்பத்தாலோ அல்லது வெள்ளத்தாலோதான் சாத்தியமாகும். இது இரண்டும் நேரிடாவிட்டால் ஜன நெருக்கத்தை தவிர்க்க வெளிநாடுகளில் குடியேறச் செய் வதுதானே வழி?

இதெல்லாம் எப்படியிருப்பினும் வெளிநாடுகளில் குடியேறியிருக்கும் ஹிந்துக்கள் அந்தந்த நாடுகளில் நிலவி யுள்ள ஆட்சிக்குப் ஆதரவாயில்லாவிடில் அதனுல் ஏற்படும் விளைவுகள் இவர்களையும், இந்தியாவையும், நேருவையும் தான் பாதிக்கும். பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துத் தகர்க்க முயற்சிப்பவர்களை ஆதரிக்காமலிருப் பதுதான் வெளிநாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்கள் அனுஷ்டிக்கவேண்டிய முறையாகும்.

'காமன்வெல்த்' அங்கத்தினர்களிடையே பரஸ்பர நம்பிக்கையும் நேச மனப்பான்மையும் நிலவவேண்டும். 1947-ம் ஆண்டில் இந்தியாவிற்கு சுதந்திரமளித்த பின்பு பிரிட்டிஷார் இந்தியர்களுக்குத் தீங்கு ஏதாவது செய் திருக்கிறுர்களா? இந்த நேச மனப்பான்மைக்கு நேருவும் அவர் தலைமையின் கீழ் உள்ள இந்தியர்களும் நன்றி செலுத்துவதுதான் மனித தர்மமாகும்.

—Everybody's Weekly, London

நேருவைப் பற்றி பிரிட்டிஷ் அபிப்பிராயத்தைப் படித்தவர்களுக்கு கீழ்க்காணும் அமெரிக்க அபிப்பிராயம் மிகவும் ருசிகரமாயிருக்கும்.

அமெரிக்கரின் உத்தம நண்பர் நேரு

●

இந்தியாவின் பிரதம மந்திரியும் 35 கோடி மக்களின் தலைவருமான பண்டித ஜவஹர்லால் நேருவைப் பற்றி அமெரிக்கப் பொதுமக்கள் கேட்கும் கேள்விகளுக்கு அளவேயில்லை.

நேரு எப்படிப்பட்ட மனிதர்? உலக விவகாரங்களில் இவ்வளவு மகோன்னத ஸ்தானம் வகிக்கும் இம் மனிதர் எப்படிப்பட்டவர்?

உலகத்திலுள்ள தேசங்கள், இரு கட்சிகளாய்ப் பிரிந்தால் இவர் எந்தக் கட்சியில் சேருவார்?

இந்தியாவில் சில தினங்கள் தங்கி சமீபத்தில் அமெரிக்காவிற்கு திரும்பிவந்த என்னிடம் அமெரிக்க மக்கள் கேட்ட கேள்விகளிலிருந்து இரு விஷயங்கள் தெளிவாகின்றன. நேருவைப் பற்றி லட்சோப லட்சம் அமெரிக்கர்கள் அறிய விரும்புகின்றனர். அவரைப் பற்றி ஏற்கனவே இருக்கும் தவருன அபிப்பிராயங்களுக்கும் கணக்கே இல்லை. நேருவைப் பற்றிச் சரியான தகவல்களைக்கொடுப்பதற்கும் தவருன அபிப்பிராயங்களைத் தவிர்ப்பதற்கும்

சுலபமான வழி கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பதே யாகு மென்பது என் அபிப்பிராயம்.

கேள்வி :

இந்தியாவின் பிரதமர் ஒரு கம்யூனிஸ்டோ அல்லது கம்யூனிசத்தை விரும்புபவரோ ஆவாரா?

இந்தியாவிற்குச் சென்று நாலே தினங்கள் தங்கினால் பிரதமர் நேருவிற்கும் கம்யூனிஸத்திற்கும் வெகு தூரம் என்ற முடிவிற்குத் தீர்மானமாய் வரலாம்.

கம்யூனிஸ்டுகள் பயங்கரவாதிகளென்றும் அவர்கள் காந்தீயக் கொள்கைகளை குழி தோண்டிப் புதைப்பவர்களென்றும் பட்டவர்த்தனமாகப் பலதடவைகள் நேரு கூறியுள்ளார். இந்தியாவின் சுதந்திரத்திற்கு இவர்கள் நாசகாரிகளென்று கண்டித்திருக்கிறார்.

கம்யூனிஸ்டுகளோ அரசியல் சுதந்தரத்திற்கு நேரு தான் பரம விரோதி என்று கூறுகின்றனர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைஆள் என்றும்நேருவை இவர்கள் அழைக்கின்றனர். கொரியாவில் ஐக்கியநாட்டு ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளை ஆதரித்ததற்காக இவர் ருஷ்யாவின் விரோதி என்றும் கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள். இந்தியாவிலுள்ள ஜமீன்தார்களின் எஸ்டேட்டுகளைப் பலாத்காரமாய்ப் பிடுங்காமல் அவர்களுக்கு நிவாரணமளித்ததை கம்யூனிஸ்டுகள் வலுவாகக் கண்டிக்கிறார்கள்.

சமீபத்தில் தென்னிந்தியாவில் நடந்த தேர்தல்களில் கம்யூனிஸ்டுகளுக்கு சில முக்கிய வெற்றிகள் கிடைத்துள்ளன. டில்லியிலிருந்தே இவர்களை எதிர்ப்பது போதாதென்று நினைத்து தென்னிந்தியாவிற்கே சென்று கம்யூனிஸ்டுகளை நேரு எதிர்த்தார்.

கேள்வி :

கம்யூனிஸத்திற்கு நேரு இவ்வளவு பெரிய விரோதியானால் அதே கம்யூனிஸத்தை வெகு தீவிரமாக எதிர்க்

கும் அமெரிக்காமீது ஏன் இன்னும் அதிகப் பரிவுகொள்ளா மலிருக்கிறார்?

அமெரிக்சர்களைப் பற்றி நேருவிற்கு எப்போதும்நல்ல அபிப்பிராயந்தான். ஆனால் அமெரிக்கர்களுக்கு ஆசிய நாடுகளைப் பற்றிய ஞானம் போதாது. அதனால் ஆசிய நாடுகளைப் பற்றிய அமெரிக்கர்களின் அநேக கொள்கை கள் தவறாகும் என்பது நேருவின் அபிப்பிராயமாகும்.

கொரியாவிற்கு இந்தியா ராணுவ உதவி செய்யாத தைப்பற்றி அமெரிக்கப் பிரதிநிதிகள் இந்தியாவைக் கண்டித்தார்கள். தன் சொந்த சுதந்திரத்தை ராணுவ பலமில்லாமல் பெற்ற ஒரு நாடு மற்றொரு ஆசிய நாட்டில் வெள்ளையர்களுக்குப் பின்பலமாகத் தன் ராணுவத்தை எவ்வாறு உபயோகிக்கும்?

அமெரிக்கா பாகிஸ்தானுக்குச் செய்யும் ராணுவ உதவியைப் பற்றி நேருவிற்கு மிகவும் வெறுப்புண்டு. இதன் அர்த்தம் ருஷ்யா ஆசியாவில் கிளர்ச்சி செய்யா தென்றல்ல. கிடைக்கும் ராணுவ உதவியைப் பாகிஸ்தான் காஷ்மீரில் இந்தியாவிற்கெதிராகவே உபயோகிக்கு மென்று பட்டவர்த்தனமாகக் கூறியுள்ளது.

"நான் கம்யூனிஸத்தை எதிர்க்கிறேன்" என்று சொல் லிக் கொண்டு எந்த உதவியும் எந்த தேசமும் அமெரிக்க ரிடம் பெறலாமென்றுதான் ஆசியா முழுவதும் பரவி யுள்ள அபிப்பிராயம்.

நேருவிடம் நான் இந்தப் பிரச்னையைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும்போது, அவர் ஹிந்து முஸ்லீம் விரோதங் கள் புராதன காலங்களிலிருந்தே இந்தியாவில் எவ்விதமா யிருந்திருக்கிறதென்பதை ஐக்கிய நாட்டார் மறந்துவிட் டார்களென்றுகூறினார். இந்தியாவில் இன்றைக்கும் ஹிந்து முஸ்லீம் கலகங்கள் துவங்கக் காரணங்களுண்டு. நாம்

கம்யூனிஸத்தை தடுப்பதற்கென்று நினைத்து, பாகிஸ்தானத்திற்கு அளிக்கும் ராணுவ உதவியை இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் முஸ்லீம்களுக்குச் செய்யும் ராணுவ உதவியென்றுதான் கருதுவார்கள்.

இந்தியா, பாகிஸ்தான் ராஜ்யங்களுக்கிடையே ஏற்கனவே இருக்கும் விரோதத்தை அமெரிக்க ராணுவ உதவியால் அதிகரித்தது நாம் கம்யூனிஸ்டுகளுக்குச் செய்த பெரும் உதவியாகும்.

ஆசிய நாடுகள் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டேயிருக்கவேண்டுமென்பதே ருஷ்யாவின் விருப்பம். அமெரிக்காவின் ராணுவ உதவியினால் இந்தியா—பாகிஸ்தான் சச்சரவுகள் அதிகரிக்கும்.

பாகிஸ்தான் அமெரிக்க ராணுவ உதவியைப் பெற்றுக்கொண்டால் இந்தியா ஏன் ருஷ்யாவின் ராணுவ உதவியைப் பெற்றுக்கொள்ளக் கூடாதென்ற பிரச்னை இந்தியாவில் தீவிரமாகி வருகிறது. ஆனால் நேரு, ருஷ்யாவிடம் ராணுவ உதவியைக் கோரமாட்டேனென்று திட்டமாய் கூறிவிட்டார்.

நேருவின் நடுநிலைமைக் கொள்கை தான் ருஷ்யா தன் விருப்பப்படி தன் ஆட்சியை ஆசிய நாடுகளில் பரவச் செய்யத் தடங்கலாயிருப்பது. இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டு பிரச்னை இப்போது அங்குள்ள பொருளாதார நிலைமையினால் ஏற்பட்டது. இதைச் சமாளிப்பதற்கு இந்தியாவிற்கு வேண்டிய வெளி நாட்டு உதவி மிகவும் சொற்பமே. அந்த உதவி, உணவு, உரம், தொழில் நுணுக்கத்திறமை முதலியவையாகும். இவையெல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானது பாகிஸ்தானத்தோடு சச்சரவில்லாமலிருப்பது. இந்த முக்கியமான விஷயத்தில் அமெரிக்கா பாகிஸ்தானுக்களித்த ராணுவ உதவியானது அளவற்ற இடைஞ்சல்களை உண்டாக்கியிருக்கிறது.

இன்று இந்தியாவையும் சீனவையும் ஆளுபவர்கள் நாளை ஐரோப்பா முழுவதையும் ஆளுவார்களென லெனின் கூறியுள்ளார். இந்தியா கம்யூனிஸ்டு ஆதிக்கத்திற்குட் பட்டால் ஐரோப்பாவிற்கே கதிமோர்ட்சமில்லை.

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் உள்ள பிரச்னை களில் ஏற்படும் மிக அற்ப விஷயங்களில் கூட அபிப்பிராய வித்தியாசங்கள் இருக்கக்கூடாதென்று கூறுவதில் அர்த்தமில்லை. முக்கியமான விஷயங்களில் இந்த இரு தேசங்களுக்கும் ஏகோபித்த அபிப்பிரர்ய மிருந்தால் போதுமானது. ஒருவருக்கொருவர் அடிக்கடி காரண மின்றி மனத்தாங்கல் கொள்ளவேண்டியதில்லை.

உலகம் பூராவும் ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற கம்யூனிஸக் கொள்கையை எதிர்ப்பது தான் அமெரிக்காவின் முக்கிய கடமை.

இந்தியாவில் பல பெரிய பிரச்னைகள் இருக்கின்றன வென்றும் அவற்றில் ஒன்று தான் காஷ்மீரப் பிரச்னை யென்பதையும் அமெரிக்கா மறக்கவேகூடாது.

ஆசிய நாடுகளில் மக்கள் கவலையின்றி வாழவேண்டு மென்பதை அமெரிக்கா ஒரு முக்கிய லட்சியமாகக் கைக் கொள்ள வேண்டும். ஆசிய நாடுகளில் அற்புதங்களை அமெரிக்கரால் நிகழ்த்த முடியாது. ஆனல் ஆசிய மக் களின் சரித்திரத்தை அமெரிக்கர்கள் நன்கு அறிவார்க ளென்பதைப்பற்றியும் ஆசிய நாட்டு மக்களின் எதிர்கால அபிலாஷைகளை அமெரிக்கர்கள் கௌரவித்து ஆதரிப்பார் களென்பதைபற்றியும் ஆசிய மக்களுக்கு நம்பிக்கையூட்டு வதே அமெரிக்கர்களின் இன்றைய முக்கிய கடமையாகும்.

—Saturday Review, New York

ஈரானியக் கவியின்
அறிவுப் பூஞ்சோலை

●

உலகத்தில் ஏராளமான வாசகர்களைக் கொண்ட பத்துப் புத்தகங்களிலே ஒன்று—'குலிஸ்தான்'. அறிவுச் சோலையில் வீசும் நிகரற்ற மணம் என்று ரவீந்திரர் அதைப் புகழ்ந்திருக்கிறார். ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பல மொழிகளில் பல தடவை குலிஸ்தான் வெளிவந்திருக்கிறது.

இதன் ஆசிரியராகிய ஷேக் ஸாதி எத்தனையோ நூல்களை எழுதி யிருக்கிறார். ஆனால் அவற்றுள் குலிஸ்தானும் போஸ்தானும் அமரத்துவம் பெற்றுவிட்டன. உலகப் பிரசித்திபெற்ற இந்தக் கவி 1175-இல் பாரசீகத்தில் ஷிராஜ் என்ற நகரத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே தந்தையை இழந்த இவர் பாதுஷாவின் பாதுகாப்பில் வளர்ந்தார். முப்பது வயது வரைக்கும் கல்வி பயின்று பின்பு இவர் பல நாடுகளில் சுற்றினர். பதினான்கு தடவை இவர் மக்காவுக்குப் போனார். அரேபியா, சிரியா, ஏமன், ஏஷியா மைனர், வட ஆப்பிரிக்கா, அபிஸீனியா, இந்தியா ஆகிய பல நாடுகளிலும் பல தீவுகளிலும் யாத்திரை செய்து மனித வாழ்வின் ஆழத்தையும் இயல்பையும் இவர் நன்றாகக் கண்டு அறிந்தார். அரபு, பாரசீக பாஷைகளைத் தவிர, ஹிந்தியும் இவருக்கு மிகவும் நன்றாகத் தெரியும். இவர் சூபி மதத்தைச் சேர்ந்தவர்.

ஷேக் ஸாதி பாரத நாட்டுக்கு வந்தபோது, மாறு வேஷம் பூண்டு குஜராத்தில் சோமநாதர் கோயிலைத் தரிசித்தார். மகமூத் கஜனி இந்தக் கோயிலைக் கொள்ளையடித்து இருநூறு வருஷங்கள் ஆயின. அப்பொழுதும்

அந்தக் கோயிலில் செல்வம் மலிந்திருந்ததாக ஸாதி சொல்லுகிறார்.

ஷேக் ஸாதியின் குலிஸ்தான் பல அறிவு மொழிகளும் ரசமான கதைகளும் நிரம்பிய அருமையான நிதி. ஒரே ஒரு கதை கேளுங்கள் :

ஈரானை ஆண்டு வந்த பாதுஷா நௌஷேர்வான் ஒரு நாள் வேட்டையாடக் காட்டுக்குப் போனான். அங்கே சமையற்காரன், சமையலுக்கு உப்பு இல்லையே என்றான். "பக்கத்தில் ஓர் ஊர் இருக்கிறது. அங்கே வாங்கிக் கொண்டு வா. அதற்கு விலை கொடுத்துவிடு; இல்லா விட்டால் ஊர் முழுவதும் பாழாகிவிடும்" என்றான் பாதுஷா.

"அரசே, ஒரு பிடி உப்பு விலையில்லாமல் வாங்குவதனாலே ஊர் முழுவதும் எப்படிப் பாழாகும்?" என்று சமையற்காரன் கேட்டான்.

"பாதுஷா தன் குடிமக்களின் வீட்டில் ஒரு பிடி உப்பு இனமாக வாங்கிக் கொண்டால் மறுநாளே அவனுடைய அதிகாரிகள் அந்த ஊர் முழுவதையும் விழுங்கி விடுவார்களே!" என்றான் அரசன்.

கதைகளைத் தவிர, நிறையக் கவிதைகளும் குலிஸ்தானில் நிரம்பி யிருக்கின்றன.

இதோ சில உதாரணங்கள் :—

"எலிகளைப் பிடிக்கும்போது பூனை சிங்கந்தான்; ஆனால் புலி வரும்போது அது எலியாகிவிடுகிறது."

"பொதி சுமக்கும் எருதுகளும் கழுதைகளும், மனிதர்களைத் துன்புறுத்தி வேலை வாங்கும் கொடியவர்களைவிட எவ்வளவோ நல்லவை."

"உண்மையினால் ஆண்டவன் மகிழ்கிறான். உண்மை வழியில் செல்பவர்கள் வருந்துவதை நான் கண்டதில்லை."

—"மதுகரம்"

இருள் தரும் ஒளி

•

கிரஹணங்கள் சம்பவிப்பது நாட்டுக்குக்கேடாகு மென்ற நம்பிக்கை சகஜம். ஆனல் சூரிய கிரஹணத்தை வான சாஸ்திர நிபுணர்கள் வெகு ஆவலோடு எதிர்பார்க்கிருர்கள். ஜூன் மாதம் 30-ம் தேதியன்று சம்பவித்த சூரிய கிரஹணம் இந்தியாவிலே சிறிது நேரமே கண்ணுக்குப் புலப்பட்டபோதிலும், ஜோத்பூருக்கருகே பாலோடி என்ற கிராமத்தில் கிரஹணம் சம்பவித்தபோது சூரிய மண்டலத்தை நோக்கி ஆராய்ச்சி செய்வதற்கு விசேஷமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சூரிய, கிரஹணம் ஏற்பட்டு மறைந்திருக்கும் நேரத்தில் தான் அந்த கிரஹத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்ய முடியும். சூரிய கிரஹணம் எப்போதும் சில நிமிஷங்களுக்கு நிகழும் சம்பவம்தான். அதனுல் இந்தச் சில நிமிஷங்களில் விஞ்ஞானிகள் என்னென்ன ஆராய்ச்சி செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து முடித்துக் கொள்ள வேண்டும். சூரியனைப் பற்றி நாம் இப்போது அறிந்திருக்கும் தகவல்கள், பெரும்பாலும் சூரிய கிரஹணங்கள் நிகழ்ந்தபோது செய்த ஆராய்ச்சியின் பயனுய்த் தான்.

விண்ணில் சந்திர சூரியர்களுடைய நிலை, சூரியனருகே யுள்ள வேறு கிரஹங்களின் நிலை பற்றிய தகவல்கள் சூரிய கிரஹணத்தின்போது தான் அறிந்துகொள்ள சாத்தியமாகும். சூரியனைப்பற்றி இன்னும் எவ்வளவோ தகவல்கள் தெரியவேண்டியிருக்கின்றன. இவையெல்லாம் சிறிது சிறிதாக சூரிய கிரஹணங்கள் சம்பவிக்கும் போதுதான் அறிந்துகொள்ளமுடியும்.

———

அவதியளிக்கும் உதவி

•

பாகிஸ்தானுக்கு ஐக்கிய நாடு ராணுவ உதவி செய்வது பற்றிய பல தகவல்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. அரசியல் துறைகளில் பாகிஸ்தானுக்கு இதனால் விளையக் கூடிய தீங்குகளைப் பற்றி யாவரும் அறிந்ததே.

ஒரு ராஜ்யத்திற்கு அரசியல் விஷயத்தில் பூரண சுதந்திரம் இல்லாவிட்டில் அந்த ராஜ்யத்தின் ஜனங்கள் என்னென்ன துன்பங்களுக்கு ஆளாவார்களென்பதற்கு ஜப்பான் ஒரு தகுந்த உதாரணம்.

அமெரிக்க ராணுவ உதவியை ஏற்றுக்கொண்டு அமெரிக்காவிற்கு ராணுவ தளங்களையும் அளித்ததால் ஜப்பானியர்கள் என்னென்ன துன்பங்களை அனுபவித்தார்களோ அந்தத் துன்பங்களையெல்லாம் பாகிஸ்தான் மக்களும் அனுபவிக்க நேரிடும்.

அமெரிக்க ராணுவத்தால் தோற்கடிக்கப்பட்டு வெற்றி முரசடித்துக்கொண்ட அமெரிக்கர் மூலமாக அளவற்ற அவமானங்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளான ஜப்பானியர்களே அமெரிக்கர்களுக்கு யுத்த தளங்கள் கொடுத்தது மிகத் தவறான காரியமென்று ஓயாது ஓலமிடுகிறார்கள். இதற்குத் தக்க காரணமுண்டு.

ஜப்பானில் எங்கே பார்த்தாலும் ஐக்கிய நாட்டின் யுத்த தளங்களைத்தான் காண முடியும். அங்கு 700 யுத்த தளங்களிருக்கின்றனவாம்.

ஜப்பானிய மாணவர்களின் பள்ளிப்படிப்பு ஓய்ச்சல் ஒழிவில்லாமல் வந்துகொண்டும் போய்க்

கொண்டுமிருக்கும் விமானங்களின் சப்தத்தினல் அறவே கெட்டுப்போய் விட்டது. ஜப்பான் அமெரிக்க துருப்புகளின் பகிரங்கமான காமலீலைகளினல் ஜப்பானிய மாணவர்களின் கல்விப் பயிற்சிக்குப் பங்கமேற்படுவதோடு அவர்களின் பாரம்பரிய நல்லொழுக்கமும், மரியாதையும் பாதிக்கப்படுகின்றன.

படைகளையும் யுத்தக்கருவிகளையும் ஏற்றிச்செல்லும் பெரிய விமானங்களின் போக்குவரத்தினல் வாயு மண்டலத்தில் அநேக மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மாற்றங்களால், யுத்த தளங்களைச் சுற்றியுள்ள வீடுகளின் ஓடுகளெல்லாம் பறந்துபோய் விடுகின்றன. அதனல் மக்கள் வீடிழந்து பரிதவிக்க நேரிடுகிறது. யுத்த தளங்களுக்கு நாற்புறமிருக்கும் வீடுகளில் உள்ள கோழிகள் முட்டையிடுவதில்லை.

விமானங்களிலிருந்து பாரசூட் மூலமாய் இறங்கும் அநேக அமெரிக்க துருப்புகள் பயிரிடப்பட்டிருக்கும் நிலங்களில் இறங்குவதால் பயிர்கள் நாசமாகின்றன. யுத்த தளங்களில் படைகள் துப்பாக்கியால் சுடுவதற்கு பயிற்சிபெறும் பிரத்யேக இடங்களும் இந்த ராணுவ தளங்களைச் சேர்ந்தவை யாகும். இவ்வாறு துப்பாக்கிப் பயிற்சி நடத்தும் போது துப்பாக்கியிலிருந்து கிளம்பும் குண்டுகள் பல திசைகளைநோக்கிப் பாய்ந்து அநேக விவசாயிகளைப் பலியாக்குகிறது. இதனல் விவசாயிகள் பயிரிடும் வேலையில்ஈடுபட மறுக்கிருர்கள்.

ஜப்பானிய ஆஸ்பத்திரிகளிலுள்ள நோயாளிகள் சதா விமானப் போக்குவரத்துகளினலும் துப்பாக்கிப் பயிற்சிகளினலும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். படைகள் கூட்டமாக இருக்குமிடங்களிலெல்லாம் விபசாரம் மலிவாகிறது. ஜப்பானிலுள்ள குக்கிராமங்களில் கூட விபசாரம் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. விபசாரக் குடும்பங்களிலும் குக் கிராமங்களிலுள்ள வியாபாரிகளிடத்திலும் ஏராளமாகப் பணப் புழக்கமிருந்தாலும் அந்தக் கிராமங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன வென்று கூறமுடியாது.

ஒரு கிராம ஸ்திரீயிடம் அவள் வசிக்கும் கிராமத்திற்குச் சமீபமாயுள்ள அமெரிக்க ராணுவ தளத்தைப் பற்றி அவளது அபிப்பிராயத்தைக் கேட்டதற்கு அவள் கூறியதாவது :-

“இவ்வளவு படைகளுக்கும் ஏராளமாக விலைமாதர்கள் இருப்பதனுல் இந்தப் படைகள் குடும்பப் பெண்களை விட்டு விடுகிருர்கள். விலைமாதர்களில்லாவிட்டால் குடும்பப் பெண்களின் கதியென்ன?”

படைகளிருக்குமிடங்களில் மதுபானமும் இதனுலேற்படும் செலவுகளும் தீங்குகளும் ஆயிரமடங்கு அதிகரித்து விட்டன.

ஜப்பானிய மக்களுக்கு அரசியல் சுதந்திரம் பூரணமாகக் கிடைத்தால்தான் இந்த நிலைமையெல்லாம் மாறி ஜப்பானியர்கள் சுயமரியாதையுள்ள மக்களாக வாழ வழியேற்படும்.

ஐந்தாறு வருஷங்களாக ஐக்கியநாட்டு ராணுவ தளங்கள் விளைவிக்கும் தீங்குகளால் கண்ணீர் சிந்திய ஜப்பானியர்களின் அனுபவம் கண்ணெதிரேயிருக்க அமெரிக் ராணுவ உதவியை ஏற்றுக்கொண்டு ராணுவ தளங்களை அமைக்கும் பாகிஸ்தான் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

மேல் நாட்டிலும் குடுமியுண்டு

குடுமி வைத்துக் கொள்வதென்பது இந்தியாவில் மட்டும் உள்ள வழக்கமல்ல மேல்நாட்டு கிறிஸ்துவப் பாதிரியார்களுக்கும் ஒரு விதமான குடுமியுண்டு. பாதிரி இனத்தார் உலகத்தின் மீது தங்களுக்குள்ள வெறுப்பைக் காண்பிப்பதற்காகவே முதன் முதலில் குடுமி வைத்துக்கொள்ளத்தொடங்கினர். இந்தக் குடுமி வைத்துக்கொள்ளும் வழக்கம் ஐந்தாம் நூற்றுண்டில் தான் தொடங்கியது எனலாம்.

உச்சியில் சில ரோமங்கள் மாத்திரம் வைத்துவிட்டு மற்ற பாகத்தை க்ஷவரஞ் செய்துகொள்வது கிறிஸ்துவ பாதிரிகளில் சில இனத்தாரின் சம்பிரதாயம். சில இனத்தார் உச்சியையும் இரு காதுகள்வரை தலையின் முன்பாகத்தையும் க்ஷவரஞ் செய்துகொள்வது வழக்கம்.

வாசகர்கள் வாசகசாலைகளுக்கு வரமுடியா விடினும் அவர்கள் வீட்டுக்கு வாசகசாலைகள் செல்கின்றன.

வீட்டைத் தேடி வரும் ஏடு

●

மக்களின் அறிவு வளர்ச்சிக்குச் சாதனங்களாக இருக்கும் அம்சங்களில் புத்தகாலயங்கள் முக்கியமானவை. ஆகவே, நாகரிக நாடுகள் தங்கள் நாட்டு மக்களிடையே அறிவு வளர்ச்சியைப் பரப்பும் புத்தகாலயங்களையும், வாசகசாலைகளையும் பெருவாரியாக ஸ்தாபித்து வருகின்றனர்.

இன்று புத்தகாலய இயக்க வளர்ச்சியில் அமெரிக்காவே முதன்மை ஸ்தானம் பெற்றுவருகிறது. அறுபதுயிரத்துக்கு மேற்பட்ட புத்தகாலயங்கள், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் இருக்கின்றனவாம்.

இப்புத்தகாலய இயக்கம் அமெரிக்காவில் பத்தொன்பதாவது நூற்றாண்டில் தான் தோன்றியதெனலாம். புத்தகாலயங்கள் தோன்றுவதற்குமுன் அநேக கல்லூரிகளில் தர்க்கவாத சங்கங்கள் பல இருந்தன. 1835-ல் நியூயார்க் மாகாண அரசாங்கம், மாகாணத்தின் ஊர்கள் தோறும் ஸ்தாபிக்கப்பட்ட புத்தகாலயங்களுக்குப் பொருளுதவி செய்தது. சில காலத்திற்குப் பிறகு இலவச நூல் நிலையங்கள் ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டது. 1890-ல் ஒரு மாகாணத்துச் சர்க்கார் அம் மாகாணத்திலியங்கும் புத்தகாலயங்களை ஏற்படுத்துவதற்கு எவ்வளவு செலவாகுமென்றும் அத் தொகையை எப்படி வசூலிப்பதென்பதையும் ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு கமிஷனை நியமித்தனர். இக்கமிஷனின் யோசனைப்படி கிராமங்கள் தோறும் புத்தகாலயங்கள் ஏற்படலாயின. 1803-ம் ஆண்டில் ஸ்தாபிதமாகி சென்ற 150 வருஷங்களாகப் பிரசித்தி பெற்ற ஒருபுத்தகசாலை அமெரிக்காவிலிருக்கிறது.

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் புத்தகாலயங்கள் சர்க்காரின் ஆதரவாலும், பொதுஜனங்

களின் போஷணையாலும் நடைபெற்றுவருகின்றன. நாட்டுப் பெரியோர்களின் ஞாபகார்த்தமாகப் பல புத்தகாலயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. அங்கிருக்கும் புத்தகாலயக் கட்டிடங்கள் மிகப் பெரியவை. அமெரிக்க புத்தகாலய இயக்கங்களுக்கு மிகுந்த பொருளுதவி செய்தவர் எஃகுத் தொழிலுக்கே பிதாவானவரும் மிகப் பெரியாருமான கார்னிஜி என்பவர். அவர் உதவியைப் பெறாத புத்தகாலயம் அங்கு இல்லவே இல்லையாம். புத்தகாலய இயக்கத்தின் பெருமையை உணர்ந்த இந்த மகான் அமெரிக்கநாட்டில் மட்டுமின்றி பிரிட்டன் போன்ற வெளிநாடுகளிலும் ஏராளமாக தன் பண உதவியினால் புத்தகாலயங்களை ஏற்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவில் ஓர் நகரத்தில் தலைமைப் புத்தகாலயம் இருக்குமாயின், அதன் கிளைகளாகக் கிராமங்கள் தோறும் பல புத்தகாலயங்கள் ஏற்படுத்தப் படுகின்றன. தலைமைப் புத்தகாலயத்திலிருந்து, கிராமப் புத்தகாலயங்களுக்குப் புத்தகங்கள் அனுப்பப்படுகின்றன. தேவையான புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு, கிராமங்கள் தோறும் நடமாடும் புத்தகசாலைகள் அனுப்பப்படுகின்றன. இருப்பிடத்தினின்றே மக்கள் புத்தகங்களை வருவித்துப் படித்து அறிவுபெறுகின்றனர்.

அமெரிக்காவில் புத்தகாலயங்கள் நடத்துவதற்காக மாணவர்கட்குப் பயிற்சி கொடுக்க பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கல்லூரி பட்டபரீட்சைகளில் தேறிய மாணவர்கள் மூன்று வருட காலம் புத்தகாலயப் பயிற்சி பாடசாலைகளில் பயிற்சியடைகின்றனர். அதில் தேறியபோதே புத்தகாலயம் நடத்த அனுமதிக்கப்படுவர். அத்துடன் புத்தகாலய வாசகர்களின் சந்தேகங்களைப் புத்தகாலயத் தலைவர்கள் தீர்த்து வைக்கின்றனர். அதற்கென பல நிபுணர்கள் புத்தகாலயங்களில் நியமிக்கப்படுகின்றனர்.

அமெரிக்க புத்தகாலயங்கள் கண்களைக் கவரும் முறையில் கட்டப்பட்டிருப்பதன்றி, சித்திரங்கள், பதுமைகள் முதலியவற்றின் காட்சியும், புத்தக அடுக்குகளின் அலங்காரமும், மேஜைகளிட்டு வாசகர்கட்குச் செய்யப்பட்ட சௌகரியங்களும் நோக்குமிடத்து, அமெரிக்கர்கள் புத்தகாலய இயக்கத்தில் எவ்வளவு கவனஞ் செலுத்தி வருகின்றார்கள் என்பது விளங்கும்.

அமெரிக்காவின் பெரிய நகரங்களிலுள்ள நூல் நிலையங்கள் காலை 8 மணி முதல், இரவு 10 மணி வரையும் திறக்கப்பட்டிருக்கும், விடுமுறை நாட்களில் பகல் 2 மணி முதல், இரவு 10 மணி வரையும் புத்தகாலயங்களில் சிறுவர் சிறுமியர்கட்குப் புத்தக வாசிப்பில் சுவையூட்ட புத்தகாலயத் தலைவர்கள் சிறுவர் சிறுமிகளை ஒன்று கூட்டி வேடிக்கைகள்

காட்டுவதுடன் கதைகள், சரித்திரங்கள், வீரத்தலைவர்களின் சரிதைகள் முதலியனநிறைந்த சித்திரங்களைக் காட்டி, கதையை அவர்கள் எளிதில் உணரச் செய்து, பின்னர் புத்தகங்களைக் கொடுத்து படிக்கச் செய்வார்கள். புத்தகாலயச் சார்பாகப் பண்டிதர்களைக் கொண்டு பிரசங்கங்களும் நடத்தப்படும். புத்தகாலயஞ் சென்று புத்தகம் பெறமுடியாதவர்கள், டெலிபோன் மூலம் தமக்கு வேண்டிய புத்தகம் வருவித்துக் கொள்ளலாம்.

ஐக்கியநாட்டுத் தலைநகரமான வாஷிங்டனிலுள்ள பாராளுமன்றத்தின் நூல் நிலையம் உலகத்திலேயே மூன்றுவதாகப் பாராட்டப் படுகிறது. மூன்றடுக்குள்ள கட்டிடம் அது. இப் புத்தகாலயத்தில் இருபத்தோரு லட்சத்திற்குமேல் புத்தகங்கள் இருக்கின்றன. 9000 செய்தித்தாள்களும் 6766 மாதப் பத்திரிகைகளும் மற்ற வெளியீடுகளும் வரவழைக்கப்படுகின்றன. ஏககாலத்தில் ஆயிரம் பேர்கள் படிக்க இக் கட்டிடத்தில் வசதிகள் செய்யப்பட்டிருக்கிறன.

அமெரிக்க புத்தகாலய வளர்ச்சிக்கென பிலடெல்பியா நகரத்தில் 1876-ல் அமெரிக்க புத்தகாலய இயக்கம் என்றொரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. இச் சங்கத்தினுல் புத்தகாலய இயக்க வளர்ச்சிக்கென 1906-ம் ஆண்டு முதல் ஒரு பத்திரிகையும் நடத்தப்பட்டு வருகிறது.

—திரு. ச. மு. பிள்ளை

மணிகள்

முதல் முதல் மணியென்று ஒரு பொருள் ஏற்பட்டகாலம் எப்போதென்று தெரியாது. ஆனால் ஆதியில் மணிகள் வழங்கினது இந்தியாவிலும் சீனதேசத்திலுமே. வெகு காலம் சென்ற பின்னர்தான் ஐரோப்பிய தேசத்தாருக்கு இது தெரியலாயிற்று.

ஆதியில் மணி, இப்போது இருக்கிறவடிவமாய் இருந்ததாகத் தெரியவில்லை. சேமக்கலம் போன்ற தட்டையான உலோகத் துண்டையோ, கல்லையோ வைத்துக்கொண்டு, அவற்றையே கட்டைகளால் அடித்து நாதம் உண்டாக்கி மணியாகப் பாவித்திருந்தார்களெனத் தெரிகிறது. அதேவிதமாக உலோகத்தால் செய்த வாத்தியமொன்று சீன தேசத்தார் இன்னும் வைத்திருக்கிறார்கள். அது அவர்கள் தேசத்தில் அநாதியாயிருக்கிற வாத்தியமென்று சொல்லுகிறார்களாம். எந்த உலோகமானாலும், ஒரு நுணியில் கயிறு கோத்துப் பிடித்துக்கொண்டு தடியால் அடித்தால் நாதம் உண்டாகும். அதேவிதம், முதலில் எவனோ தற்செயலாய் அடித்துப்பார்க்க ஓசை உண்டாகவே, அது எங்கும் பிரசித்தமாகிப் பின்பு அம்மாதிரி அநேக விதமான ஓசைக் கருவிகளை உண்டாக்கிக் கொண்டிருப்பார்கள். வரவர நாகரிகம் விருத்தியாக, இப்போதுகாணப்படுகிறபடி, பலவித விசித்திர வடிவமாகப் பெரிதும் சிறிதுமாய் வேண்டியபடி மணிகள் செய்துகொள்ள ஆரம்பித்தார்கள்.

ஐரோப்பிய தேசத்துக் கோயில்களிலே பெரிய மணி கட்ட ஆரம்பித்தது சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்புதான். வில்லியம் என்னும் அரசன் இங்கிலாந்தில் அரசாண்ட போது, அத்தேசத்தில் எவ்விடத்திலும் இரவு எட்டு மணிக்கு மேல் நெருப்பு எரியக் கூடாதென்று 'கட்டளையிட்டு, அதற்காக ஒரு பெரிய மணி ஏற்படுத்தி, அம்மணியின் ஓசை கேட்டவுடனே அனைவரும் அவரவர் வீட்டிலுள்ள தீபம் நெருப்பு எல்லாவற்றையும் அணைத்து விட்டுப் படுக்க வேண்டுமெனத் திட்டம் செய்தானென்பது எங்கும் பிரசித்தமான செய்தி.

இங்கிலாந்தில் வெஸ்ட் மினிஸ்டர் என்னும் மாளிகையில் பெரிய மணியொன்று இருக்கிறது. அது சுமார் அறுபது பாரம் எடையுள்ளது. ஐரோப்பா கண்டத்து இதர தேசங்களில் இன்னும் மிகப் பெரிதான மணிகள் செய்து கட்டிவைத்திருக்கிறார்கள். மாஸ்கோ பட்டிணத்திலுள்ள பெரிய மணிபோல் எந்தத் தேசத்திலும் கிடையாது. அந்தப் பெரிய மணி கட்டியிருந்த கட்டிடம் அநேக வருடங்களுக்கு முன்னே பற்றிக்கொண்டு எரிந்துபோக, அது ஆதாரமற்றுக் கீழேவிழுந்த வேகத்தில் ஒருபுறத்தில் கொஞ்சம் உடைந்துபோய் கிடக்கிறது. அந்தப் பட்டிணத்திலேயே இன்னும் பல பெரிய மணிகள் இருக்கின்றன. அவற்றுள் நானூறு பாரம் எடையுள்ள மணி ஒன்றிருக்கிறது. அதுதான் இப்போது இருப்பவைகளுள் பெரியது. மாஸ்கோ பட்டிணத்தில் மணிகள் எப்போதும் விசேஷம். ஜெர்மனி தேசத்து எர்பர்ட் என்னும் பட்டிணத்தில் பெரிய மணி ஒன்றுண்டு. இதன் சுற்றளவு இருபத்து நான்கு அடிக்கு அதிகமிருக்கின்றதாம். நான்கின், பீக்கிங் முதலிய சீன தேசத்துப் பட்டிணங்களிலும் சில பெரிய மணிகள் இருக்கின்றன.

யுத்தம் முதலான பெருங் காரியங்கள் ஜெயமானால் அதற்காக ஜெயபேரிகை அடிப்பது போலவே பெரிய மணிகளையும் அடித்து, அந்தச் சந்தோஷ செய்தியை எங்கும் பிரசித்தப் படுத்துவதும், தேவபூஜை முதலிய பற்பல காரியங்களுக்கும் மணி உபயோகமாவதும் நாமெல்லோரும் அறிந்ததே.

உலகத்தின் கூரை

திபேத் என்ற பிரதேசம் 14,000 அடி சமுத்திர மட்டத்திற்கு மேல் உள்ளது. தெற்கிலும் மேற்கிலும் இமய மலையாலும் வடக்கே குண்லுண் என்ற பர்வதத்தாலும் சூழப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் பாலைவனம் போன்று பயிர் ஒன்றுமே வளராத நாடு. உயிரைவைத்துக் கொள்வதற்கு மட்டும் போதுமான பயிர்கள் தான் இங்கே உண்டாகிறது. இதைக்கொண்டே இங்குள்ளவர்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

திபேத் நாட்டில் பொதுமக்களுக்குப் படிப்பதற்குப் பள்ளிகள் ஒன்றுங்கிடையாது. இப்பொழுது திபேத் சீனாவின் ஆதிக்கத்தில் கட்டுப்பட்டிருக்கிறது. பரம்பரையாக இந்த நாட்டில் இரு அரசர்கள் இருந்து வருகிறார்கள். ஒருவர் டலாய் லாமா. இன்னொருவர் பாஞ்சன் லாமா. டலாய்லாமா என்பவர் புத்தரின் அவதாரம். பாஞ்சன்லாமா என்பவர் புத்தருடைய குருவின் அவதாரம்.

இந்த அரசர்கள் பரம்பரையாக வருபவர்கள் அல்ல. புத்தரின் சகல அம்சங்களும், புத்தருடைய குருவின் சகல அம்சங்களுங் கொண்ட குழந்தைகள் எந்தக் குடும்பத்தில் தோன்றுகின்றனவோ அந்தக் குழந்தைகளே டலாய்லாமாவாகவும் பாஞ்சன் லாமாவாகவும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். டலாய் லாமா வசிப்பதற்கு லாஸா நகரத்தில் போதலா என்ற ஒரு அரண்மனை இருக்கிறது. இது 900 அடி நீளமும் 400 அடி உயரமுமுள்ளது.

இந்த அரண்மனையின் சுவர்கள் இருபத்தைந்து அடி கனமுள்ளவை. இந்த அரண்மனையில் ஆயிரக்கணக்கான அறைகள் உண்டு.

காலமாகும் டலாய்லாமாக்களின் சவங்களை சவப்பெட்டிகளில் அடக்கஞ் செய்து அப்பெட்டிகள்மீது தங்கத் தகடுகளாலும் முத்துக்களாலும் வைரங்களாலும் அலங்காரஞ் செய்து இந்தக் கட்டிடத்தின் மேல்தான் அடக்கஞ் செய்வது வழக்கம்.

திபேத்தின் 40 லட்சம் ஜனத்தொகையில் ஐந்து லட்சம் பேர்

கள் சந்நியாசிகள் ஆவார்கள். இவர்கள் தங்குவதற்கும் பிரார்த்தனை நடத்துவதற்கும் கிராமங்கள் தோறும் சந்நியாசி மடங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மடத்திலும் ஆயிரம் சந்நியாசிகள் தங்குவதற்கும் பிரார்த்தனைகள் புரிவதற்கும் வசதிகள் இருக்கின்றன.

திபேத்தியர்கள தங்கள் வாழ்க்கையில் பிசாசுகள் எந்த காரியத்திலும் ஈடுபடுகின்றன வென்றும் அவற்றைத் தடுப்பதற்குச் சந்நியாசிகளின் உதவி தேவையென்றும் நம்புகின்றனர்.

இவ்வளவு உயரத்திலிருக்கும் நாட்டுக்கும் பிறநாடுகளுக்கும் வியாபாரப் போக்கு வரத்து இருப்பது மிகவும் சிரமமான காரியம்

திபேத் வியாபாரிகள் கூட்டங் கூட்டமாய்ச் சேர்ந்து கணவாய்கள் வழியாக பர்மா, அஸ்ஸாம், சீனு முதலிய தேசங்களுக்கு ஆட்டு ரோமம், கம்பளங்கள், செருப்புகள் முதலியவற்றை வியாபாரத்திற்கு கொண்டுசெல்கின்றனர். திரும்பிச் செல்லும்போது இந்தியாவிலிருந்து பட்டு, பர்மாவிலிருந்து சோப்புகள், மெழுகு வர்த்திகளும் சீனுவிலிருந்து வாசனைத் திரவியங்களையும், தேயிலையையும் எடுத்துக் கொண்டு போகிருர்கள்.

திபேத்திய பூமிக்குள் நிலக்கரி தங்கம், இரும்பு, செம்பு முதலியவை ஏராளமாகக் கிடைக்கும். இந்த நாட்டில் ரயில், பஸ் முதலிய பிரயாண வசதிகள் கிடையவே கிடையாது. மின்சார வசதி இல்லையென்று கூறத் தேவையேயில்லை.

சதையினுல் சாவு!

சர்க்கஸ் காட்சிகளில் சில விசித்திர சிருஷ்டிகளைக்காண்பது சகஜம். இங்கிலாந்திலுள்ள ஒரு சர்க்கஸ் கம்பெனியில் 420 ராத்தல் எடையுள்ள 30 வயதான ஒரு ஸ்திரீ இருக்கிருள். இவள் எந்தவிதமான வீரச் செயல்களையும் செய்வதில்லை.

இந்த ஸ்திரீயின் விசேஷ அம்சம் இவளது பருத்த சரீரம் தான். இதைப் பார்த்து மகிழ்ச்சியடைவதற்கே இந்த சர்க்கஸுக்கு ஏராளமாக மக்கள் விஜயஞ் செய்கின்றனர். இம் மாதிரி 420 ராத்தல் எடை குறையாமலே இருந்தால் இவள் வெகுசீக்கிரத்தில் சாக நேரிடுமென்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். எடை குறைந்தால் சர்க்களில் இவளுக்கு வேலை இல்லை. உயிரை வைத்துக்கொண்டிருப்பதா அல்லது விடுவதா என்ற பிரச்னையைத் தீர்க்கமுடியாமல் தவிக்கிருள் இந்த ஸ்திரீ.

ஜப்பானிலுள்ள மரத்தின் மீது நீரை ஊற்றியதால் சீனுவில் பிடித்த தீ அணைந்து போயிற்று !

டோக்கியோவின் அதிசய புத்த ஆலயம்

டோக்கியோ நகரத்தில் அநேக நூற்றாண்டுகளாகப் பிரசித்திப் பெற்ற ஒரு புத்த தேவாலயமிருக்கிறது. கி. பி. 1573 லிருந்து 1645 வரையிலும் இந்த தேவாலயத்தில் டக்குவான் என்ற பெயருடையவரும் மிகச் சிறந்த பக்திமானும், மந்திர சக்திவாய்ந்தவருமான ஒரு பூஜாரி இருந்தாராம்.

ஒரு நாள் இவர் வெளியே ஏதோ அலுவல் நிமித்தஞ் சென்றுவிட்டு ஆலயத்திற்குத் திரும்பும்போது வழக்கம்போல் இவருடைய சிஷ்யர்கள் இவரை வாவேற்க வெளியே வரவில்லை. ஆலயத்தைச் சேர்ந்த அடுக்களையிலிருந்து சிஷ்யர்களின் குரல் வருவதை இவர் கவனித்தார். சப்தஞ் செய்யாமல் இவர் அடுக்களையியில் நுழைந்தார். அங்கு அவர் கண்டகாட்சி அவரைப்பிரமிக்க வைத்தது.

சீடர்கள் ஒரு பிரம்மாண்டமான மீனைச் சமைத்துக்கொண்டிருந்தனர். பூஜாரி இனத்தார் மீன் உணவு அருந்தக்கூடாதென்பது நியதி. இவர் வெளியிலே சென்ற சந்தர்ப்பத்தைப் பாழாக்கக்கூடாதென்ற ஆவலில் சீடர்கள் மீனைப்பிடித்து சமைத்துச் சீக்கிரம் சாப்பிட முயன்றனர். இவரைக் கண்டதும் சீடர்களும் திடுக்கிட்டனர். விஷயமறிந்ததும் டக்குவான் சீடர்களை தன் ஆசிரமத்திலிருந்து வெளியேற்றி இவர்கள் சமைத்துக்கொண்டிருந்த மீனை ஆலயத்திலுள்ள குளத்தில் எறிந்தார். சீடர்களின் பிழைக்காக புத்த பகவானிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு புத்த பகவான் மீது ஸ்துதிகள் பாடினார். என்ன ஆச்சரியம்! குளத்தில் எறியப்பட்ட மீன் உயிர் பெற்று நீந்தத்தொடங்கியது. சற்றுநேரத்திற்குப் பிறகு மீன் ஒரு புது உருவத்தில் அந்தக்

குளத்தையும் கோயிலையும் காக்கும் தேவதையாக மாறிற்று. தேவாலயத்தின் குளத்தில் ஏராளமான தவளைகள் வசித்தன. ஜப்பானில் இப்பொழுது இந்தத் தவளைகள் 'கத்தாத தவளைகள்' என்ற பெயர் பெற்றிருக்கின்றன. இதற்கு ஒரு கதை கூறுகிறார்கள்.

ஒரு நாள் டக்குவான் புத்த தேவரின் பிரபாவங்களைப் பாராயணஞ் செய்துகொண்டிருக்கும்போது தவளைகளெல்லாம் காதுகளை துளைக்கும்படி கத்தத்தொடங்கினவாம். டக்குவான், தவளைகளை சத்தத்தை நிறுத்தும்படி ஆக்ஞை யிட்டாராம். அப்பொழுது சப்தத்தை நிறுத்திய அந்தக் குளத்து தவளைப் பரம்பரை இன்றுவரை சப்தஞ் செய்வதில்லையாம்.

இந்த தேவாலயத்தில் ஒரு தண்ணீர்த்தொட்டி யிருக்கிறது. சமுத்திரம் பொங்கி அலைகள் அடிக்கும் சமயங்களில் இந்தத் தண்ணீர்த் தொட்டி நீர் நிரம்பி வழியும். சமுத்திரத்தில் அலைகள் ஓய்ந்திருக்கும்போது தொட்டியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இருக்காது.

இந்தத் தொட்டிக்கடியில் ஒரு கல்லுருவம் புதைக்கப்பட்டிருந்ததாம். இதை ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யலாமென்று அநேகர் அபிப்பிராயப்பட்டதால் இந்த உருவத்திற்கென ஓர் ஆலயத்தை அமைத்தனர். இந்த உருவத்தின் அருகே தண்ணீர்த் தொட்டியையும் பிரதிஷ்டை செய்து வருகின்றனர்.

இந்த புத்த தேவாலயத்தில் ஒரு தேவதாரு மரம் இருக்கிறது. ஆதிகாலத்தில் பிரபலமான ஒரு படைத் தலைவரும் அவரது பரிவாரங்களும் இந்த ஆலயத்திற்கு விஜயஞ்செய்தபோது அவர்களுக்கு இந்தமரம் மிகவும் இடைஞ்சலாயிருந்ததாம். அதனால் படைத் தலைவர் இந்த மரத்தை வெட்டியெறியுமாறு கட்டளையிட்டாராம். மரத்தின்மீது வாள்பட்டதும் அதிலிருந்து இரத்தம் வடியத் தொடங்கியதாம். படைத் தலைவரும் அங்கே கூடியிருந்த மற்றவர்களும் திகிலடைந்து அவர்கள் செய்துவிட்ட அபசாரத்திற்காக வருத்தமடைந்தனர். ஆனால் வெகு நாட்கள் வரை மரத்தில் வாள்பட்ட இடத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டேயிருந்தது. அநேக வருஷங்களுக்குப் பிறகு மரத்தில் பட்ட காயம் ஆறியது.

சீனாவில் ஒரு புனிதஸ்தலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு "ஜுனிப்பர்" மரம் இந்த புத்த தேவாலயத்தில் இருக்கிறது.

ஒரு நாள் நடுநிசியில் டக்குவான் நித்திரையிலிருந்து திடீரென எழுந்திருந்து சீனாவில் அந்தப் புனித ஸ்தலத்திலுள்ள தேவாலயத்தில் தீப்பிடித்துவிட்டதென்று சத்தம் போட்டு

அருகிலிருந்தவர்களை எழுப்பினார்.

அவர்கள் எல்லோரும் எழுந்திருந்தவுடன் சீனாவிலிருந்து வந்த "ஜூனிப்பர்" மரத்தின் மீது நீரை ஊற்றச் சொன்னார். வெகு தூரத்திற்கப்பாலுள்ள சீன ராஜ்யத்தில் பிடித்திருந்த தீ ஜப்பான் புத்த தேவாலயத்திலுள்ள ஜூனிப்பர் மரத்தின் மீது நீரை ஊற்றினால் எப்படி தீ அணையுமென்ற சந்தேகம் எல்லோருக்குமிருந்தாலும் டக்குவான் ஆக்ஞைப்பிரகாரம் நீரை ஊற்றிக்கொண்டேயிருந்தனர்.

பிறகு "சீன ராஜ்யத்தில் பிடித்திருந்த தீ அணைந்துவிட்டது. இனி நீரை ஊற்றவேண்டாம்" என்று டக்குவான் கூறின பிறகுதான் நீர் ஊற்றுவதை நிறுத்தினர். அடுத்ததினம் சீனாவின் புனிதஸ்தலத்திலிருந்து ஒரு தூதன் டக்குவானைச் சந்திக்க வந்தார். அந்தப் புனிதஸ்தலத்தில் தீ பிடித்தது உண்மைதானென்றும் டக்குவான் யோசனைப் பிரகாரம் 'ஜூனிப்பர்' மரத்தின்மீது நீரை ஊற்றியதால்தான் தீ அணைந்ததென்றும் தெரிவித்தார். சீனாவின் புனித ஸ்தல நிர்வாகிகளின் நன்றியையும் தூதர் டக்குவானுக்குச் செலுத்தினார்.

காது மந்தம் ஏற்படுவதேன்?

வயிறு புடைக்க உண்டால் காதுகளுக்குக் கேட்கும் சக்தி சற்று குறைந்துவிடுகிறதாம்.

காலையில் ஏழு மணிக்கு காதுகளுக்குள்ள தீட்சண்யம் பகல் ஒரு மணிக்கு இராது.

அமெரிக்காவில் ஒன்றரைக் கோடி மனிதர்களுக்கு காதுகளில் ஏதாவது ஒருவிதக் கோளாறு இருக்கிறதாம். இந்தக் கோளாறுகளைச் செயற்கைக் கருவிகள்மூலம் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் அநேகர் இக்கருவிகளை அணிவது அகௌரவம் என்ற அபிப்பிராயங்கொண்டவர்களாதலால் இந்தக் குறைபாடுகளைச் சமாளித்துக்கொண்டிருக்கின்றனர்.

மனசுக்கு நிம்மதியில்லாத சமயங்களில் காது சரியாகக் கேட்காதாம். சிலருக்குப் பாரம்பரியமாகவே காதுகளில் கோளாறுகள் உண்டு. காதுகளுக்கு கோளாறுகள் ஏற்படுவதற்கு மற்ற முக்கிய காரணங்கள் உரத்த சப்தங்கள், தொடர்ந்த சளி உபாதை, அசுத்த நீரில் நீந்துவது, மூக்கை மிகவும் பலமாகச் சிந்துவது முதலியவையாகும்.

காகிதம்

உலகில் காகிதம் எப்பொழுது முதன் முதலில் செய்யப்பட்டது? யாரால் செய்யப்பட்டது?

சீனுவில் கி. பி. 105-வது ஆண்டில் சாய்லுான் என்பவரால் உண்மையான காகிதம் தயாரிக்கப்பட்டது. இவரது திறமையை மெச்சி சீன சர்க்கார் இவருக்கு வெகுமதியும் அளித்தனர்.

ஆனல் இதற்கு நானூறு வருடங்கட்கு முன்பே, அதாவது கி. மு. 327-வது வருடத்திலேயே பஞ்சாபில் பருத்தி, கம்பளி இவற்றைக் கொண்டு செய்யப்பட்ட லேசான வழவழப்பான தகட்டில் ஜனங்கள் எழுதி வந்தனரென்று, அலக்சாந்தருடன் இந்தியா வந்த நேர்சஸ் என்பவர் தனது டைரியில் குறித்திருக்கிருர்.

அது உண்மையில் காகிதமா இல்லையா என்பது நிச்சயமாகத் தெரியாவிட்டாலும், காகிதத்தைப் போன்ற ஒன்றை அக்காலத்தில் இந்தியர்கள் உபயோகித்திருக்கின்றுர்கள் என்பது மட்டும் நிச்சயம்.

கேம்பிரிட்ஜ் இந்திய சரித்திரத்திலும் இது பற்றிக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. 8-வது நூற்ருண்டில் அராபியர் பச்சைப் பருத்தியைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் முறையைக் கையாண்டனரென்று டாக்டர் ராயலி என்பவர் தமது நூலில் குறிப்பிட்டிருக்கின்ருர்.

12-வது நூற்ருண்டில் சாமர்க்கண்டில், அராபியர்கள் வென்ற ஒரு போரில், கைதிகளாகப் பிடித்த சீனர்களைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டுபோனுர்கள். இவர்களில் சிலர் காகிதம் செய்யத் தெரிந்தவர்கள் என்றும், இவர்களிடமிருந்து அராபியர்கள் காகிதம் செய்யக் கற்றுக்கொண்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

கி. பி. 1420-1470-ல் காஷ்மீரத்தில் ஜைனுல்அப்தீன்

என்னும் மன்னன் அரசாண்டான். இவன் சாமர்க்கண்டிலிருந்து காகிதம் தயாரிப்போரைக் காஷ்மீரத்துக்குத் தருவித்துக் குடியேற்றி, காஷ்மீர மக்களுக்கு இத்தொழிலைக் கற்பித்தானும். காஷ்மீரத்திலும் நேபாளத்திலும் பழைய முறையிலேயே, சில தாவரங்களிலிருந்து இன்னும் காகிதம் செய்கிறார்களாம்.

1799-ம் வருடம் பிரான்சில் ராபர்ட் நிக்கோலஸ் என்பவர் காகிதம் செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். 19-வது நூற்றாண்டில் காகித உற்பத்தி இயந்திரங்களைக் கேரே என்ற பாதிரியார் இந்தியாவுக்குக் கொண்டுவந்தார். அதே வருடத்தில்தான் இந்த இயந்திரம் அமெரிக்காவிலும் கையாளப்பட்டது.

எனவே, அந் நாட்டில் காகிதத் தயாரிப்புத் தொழில் மிக உன்னத நிலைக்கு அபிவிருத்தியடைந்துவிட்டது. இந்தியாவில் காகித உற்பத்தித் தொழிற்சாலைகள் வங்காளத்தில் ஏராளமாயிருக்கின்றன.

கண் ஓட்டம்

பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் உள்ள அக்ஷரங்களை கிரஹித்துக்கொள்வதற்காகப் படிக்கும்போது நம் கண்கள் இடமிருந்து வலம் சஞ்சரிக்கிறது. ஒரு சாதாரண மனிதனின் ஆயுளில் இம்மாதிரி சஞ்சாரம் 1000 மைல் வரை ஆவதாய்க் கணக்கிட்டிருக்கின்றனர்.

[ஒரு தெனுலிராமன் கதை]

திருடர்களை ஏமாற்றிய தந்திரசாலி

தெனுலி என்ற ஊரில் ராமன் என்று ஒருவன் இருந்தான். அவன் மிகவும் தந்திரசாலி. ஒரு சமயம் அவன் இருந்த ஊரில் திருட்டு பயம் அதிகமாயிருந்தது. திருடர்கள் இவன் வீட்டில் திருடுவதற்காக வந்து வீட்டுக் கூரைமேல் உட்கார்ந்துகொண்டு திருட சமயம் எது என்று பார்த்துக்கொண்டு இருந்தனர். இதை தெரிந்துகொண்ட ராமன் திருடர்களின் காதில் விழும்படியாக உரக்க தன் மனைவியைக் கூப்பிட்டு நம் ஊரில் திருட்டுபயம் அதிகமாயிருப்பதால் நம் பொருள்களை பெரிய பெட்டியில்போட்டு பூட்டி கொல்லையில் இருக்கும் பெரிய கிணற்றில் போட்டுவிட்டால் பயமில்லை என்று சொன்னுன். இதைக்கேட்ட திருடர்கள் நமக்கு நல்ல அதிருஷ்டம் என்று இறுமாந்திருந்தனர். உடனே ராமன் தன் பணம், நகை எல்லாவற்றையும் உள்ளே வைத்துப் பத்திரப் படுத்திவிட்டு ஒரு பெரிய பெட்டி நிறைய கற்களை நிரப்பிப் பூட்டி அவன், அவனுடைய மனைவி, மகன் மூவருமாகப் பெட்டியை மெள்ளத் தூக்கிக்கொண்டுபோய் கிணற்றில் தொப்பென்று போட்டுவிட்டு வந்துவிட்டார்கள். திருடர்கள் இந்தச் சத்தத்தை கேட்டு இறங்கி வந்தார்கள். அவர்களில் ஒருவன் "நான் இந்த ஏற்றச் சாலால் தண்ணீரை இறைக்கிறேன் நீ மேலே ஏறி ஏற்றக் கோல் போடு" என்று சொன்னுன். இருவரும் இரவு முழுவதும் தண்ணீரை இறைத்தார்கள். அதற்குள்கிழக்கு வெளுத்து பொழுது புலரும் தருணமாகிவிட்டது அதையும் கவனியாமல் இறைத்தார்கள்." ராமன் மெள்ள தோட்டத்திற்கு வந்து, "நண்பர்களே, உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி, செடிகள் எல்லாவற்றிற்கும் நிறைய தண்ணீர் பாய்ந்துவிட்டது. இனி நீங்கள் போகலாம் உங்கள் உதவியை மெச்சுகிறேன்'' என்ருன். இதைக் கேட்டு திருடர்கள் ஏமாற்றமும் பயமுமடைந்து ஓட்டமெடுத்தனர்.

—ரங்கநாயகி.

———

200,000 மைல் தூரத்திலே உள்ள ஒரு கிரகம் பிரபஞ்சத்தையே ஆட்டிவைக்கும் விதம்.

மண்டலத்தை ஆளும் மதி

●

நாலாம் பிறையன்று சந்திரனைப் பார்த்தால் நாய் படும் பாடு படுவார்களென்பது அநேக ஹிந்துக்களின் நம்பிக்கை. இது போலவே மேல் நாடுகளிலும் சந்திரனைப் பற்றிய நம்பிக்கைகள் பல வழக்கத்திலுள்ளன. அவற்றில் ஒன்றுதான் வளர்பிறையை நோக்கிக்கொண்டு சட்டைப் பையில் ஒரு நாணயத்தை விரல்களால் திருப்பினால் செல்வம் பெருகும் என்பது. சந்திரனைப் பற்றிய பல ராஜ்யங்களில் பலவித நம்பிக்கை வருவதற்கு முக்கியமான காரணம், சந்திரன் வாழ்க்கையை பாதிப்பதால்தான். பயிர்பச்சைகள் நன்றாக வளர்வதும் சந்திரனை ஒட்டியேதான். சில சமுத்திரங்களில் மனிதனுக்கு உணவாகும் ஒருவகை மீனைப் பௌர்ணமியன்று பிடித்தால்தான் ருசியாயிருக்குமாம்.

இம்மாதிரி பயிர் பச்சைகள் பிராணிகள், மனிதர்கள் எல்லோரையும் சந்திரன் ஒன்றுபோல் பாதிப்பதெப்படியென்பது சிந்திக்கவேண்டிய விஷயம். சூரியன், சந்திரன் முதலிய கிரகங்கள் வீசும் ஒளிக்கு மின்சார சக்தி உண்டு. இந்தச் சக்தியினால்தான் எல்லா ஜீவன்களுக்கும் வளர்ச்சி ஏற்படுகிறது. மேற்கூறிய மீன் ரகத்தில் அமாவாசைக்குப் பிறகு முட்டைகளுண்டாகின்றன. பௌர்ணமி வரையில் முட்டைகள் வளர்ச்சி யடைகின்றன. பௌர்ணமியன்று முட்டைகள் வெளிவருகின்றன. முட்டைகள் வெளிவருவதால் மீன் வயிறு சுத்தமாகி பௌர்ணமி யன்று சாப்பிடுவதற்கு வெகு ருசியாயிருக்கின்றன.

எல்லா ஜீவராசிகளுக்கும் காதல் உணர்ச்சி சந்திரனுடைய கிரணங்களையே பொறுத்து இருக்கிறதாம். கர்ப்பம் தரிப்பதற்கும்

மற்றும் வாழ்க்கையில் அநேக முக்கிய அம்சங்களுக்கும் சந்திரனுடைய வளர்பிறை காரணமாவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

குழந்தைகளின் அடங்காத ஆத்திரம், கோபம் முதலிய துர்க்குணங்கள் சந்திரனின் வளர்பிறையின்போது அதிகமாய்த் தோன்றுகின்றன. சில பைத்தியம் பிடித்தவர்களுக்கு அமாவாசையின்போது பைத்தியம் அதிகரிப்பது யாவருமறிந்ததே.

சந்திரன் சூரியனிடமிருந்து ஒளிபெறுகிறது. பௌர்ணமியன்று ஒளிபூராவும் அடைகிறது. அதற்கடுத்துவரும் தினங்களில் ஒளி குறைந்து கொண்டே போகிறது. இதேபோல் அமாவாசையன்று ஒளி அறவேயில்லாமல் போய்விட்டு அதற்குப் பின்வரும் தினங்களில் ஒளி அதிகரித்துக்கொண்டே போகிறது. இம்மாதிரி ஒளியின் ஏற்றத்தாழ்வினால் உலகத்தில் பரவும் மின்சார அலைகளுக்கும் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. இதைத் தவிர சந்திரனுக்குப் பூமிமீது தீவிர ஆகர்ஷண சக்தி உள்ளது.

சந்திரன் பூமியைச் சுற்றிவரும்போது சில குறிப்பிட்ட இடங்களில் பூமிக்கு மிகச் சமீபமாய் வருகிறது. இம்மாதிரி வரும்பொழுது பூமியில் அந்தக் குறிப்பிட்ட இடங்களை ஆகர்ஷித்து பூகம்பத்தைக்கூட உண்டாக்குகிறது. அமெரிக்காவின் மேற்குக் கரையோரப் பக்கங்களில் சில இடங்களில் சந்திரனின் தீவிர சக்தியால் வீடுகள் தானாகவே இடிந்து விழுகின்றனவாம். இந்த இடங்களில் கடியாரங்கள் சரியான நேரத்தைக் காண்பிப்பதேயில்லையாம். உலகமெங்குமே சமுத்திரம் பொங்குவதும் ஓய்வதும் இந்த சந்திரனின் ஆகர்ஷண சக்தியால்தான்.

இவ்வளவு சக்தியுடன் பூமியிலுள்ள சகல ஜீவராசிகளையும் பாதிக்கும் சந்திரனையும் சூரியனையும் தெய்வங்களைப்போல் யாவரும் கொண்டாடுவதில் அதிசயமென்ன இருக்கிறது.

நாகரிகங்களில் பழமையானது ஹிந்து நாகரிகமும் எகிப்து நாகரிகமும் ஆகும். இந்த இரு வகுப்பார்களும் சூரியனையும் சந்திரனையும் தம்பதிகளாகக் கொண்டாடி வந்திருக்கிறார்கள். சீதோஷ்ண நிலை, பருவகால மாறுதல்கள் இவை பற்றிய யூகங்களெல்லாம் சந்திரனின் சஞ்சாரக் கணக்கையொட்டியே அமைகிறது.

அமாவாசை தினம் விதை விதைப்பதற்கு ஏற்ற நாள் என்பது மிகப் பழைமையான வழக்கமாகும். பயிர்களின் உயிர் சத்தை வேரிலிருந்து வளர்பிறை மேற் பக்கத்திற்கு இழுக்கிறது. இதனால் பயிர்கள் செழுமையாகிறது. தேய்பிறை உயிர்சத்தை மேற் பக்கத்திலிருந்து அடிபாகத்திற்குத் தள்ளுகிறது. இதனால் இச்சமயத்தில் பயிர்களின் வளர்ச்சி குறைவாக இருக்கிறது.

சில தேசங்களில் பௌர்ணமியன்று வெட்டிய மரங்களைத் தான் தச்சர்கள் கட்டிட வேலைகளுக்கும் மரச் சாமான்கள் செய்வதற்கும் உபயோகிப்பார்கள்.

நிலவில் படுத்துறங்குவோர்களின் மூளையைச் சந்திரன் பாதிக்கலாமென்ற நம்பிக்கை எல்லா நாடுகளிலும் உள்ளது. மூளையிலுள்ள அணுக்களெல்லாம் ஒன்றுபோலவே சந்திரனின் மின்சார சக்தியை ஏற்றுக் கொள்ளும்பொழுது மனிதனின் மூளை தெளிவாயிருக்கிறது. சந்திரனின் மின்சார சக்தியை மூளையிலுள்ள அணுக்கள் ஏற்றுக்கொள்ளும் முறையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வினால்தான் பைத்தியம் உண்டாகிறது. கைகால் வலிப்பும் வளர்பிறை தினங்களில்தான் அதிகமாகிறது.

இம்மாதிரி ஒவ்வொரு மனிதரையும் தனித்தனியாகப் பாதிக்கும் சக்தியுள்ள கிரகத்தினால்தான் சரித்திரத்தில் நடந்துள்ள யுத்தங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்பது விஞ்ஞானிகளின் அபிப்பிராயம்.

அமெரிக்காவில் ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனி அளிக்கும் தகவல் பிரகாரம் அநேக சொத்துக்களின் அழிவுக்குக் காரணமான தீச்சேதங்கள் வளர்பிறையின்போதுதான் ஏற்பட்டிருக்கிறதாம்.

ஆக அழிப்பதிலும் ஆக்குவதிலும் சந்திரனின் சக்தி மிகவும் முக்கியமானதென்ற உண்மை மறக்கத்தக்கதல்ல.

பெற்றோர்களுக்கு நேரிடும் மிகக் கடுமையான ஒரு பிரச்னையைத் தீர்க்கும் வழி.

இரண்டாவது குழந்தை

•

பல இளம்தம்பதிகள், சாதாரணமாக முதல் குழந்தைக்குப் பெற்றோர்களான பிறகுதான். மணவாழ்க்கையில் பல இக்கட்டுகளை அனுபவிக்க நேரிடும் என்று நினைக்கின்றனர். ஆனால் வாஸ்தவமாகவும், அனுபவத்தின் மூலமாகவும், இரண்டாவது குழந்தை பிறந்த பிறகுதான் சங்கடங்கள் அதிகம் உண்டாகின்றன. ஜாக்கிரதையாகவும், நோய் முதலியவை இல்லாமல் இரண்டாவது குழந்தையைப் பராமரிப்பதுடன், முதல் குழந்தையின் சுகாதார விஷயத்திலும், அதன் மனப்பான்மையிலும் அதிகக் கவனம் பெற்றோர்கள் செலுத்தவேண்டியதாயிருக்கும்.

பொறாமை என்பது சாதாரணமாகக் குழந்தைகளிடம் குடிகொண்டிருக்கும். புதிதாக ஜனித்த இரண்டாவது குழந்தைக்கு, சில விஷயத்தில் அதிகக் கவனமும் சலுகைகளும், இதுவரையில் முதல் குழந்தை வகித்து வந்ததை, காண்பிக்கநேரிடும். இதனால் முதல் குழந்தையின் மனசில் ஏற்படும் பொறாமை மனப்பான்மையை அகற்றுவது மிகக் கடினம். ஆனால் பெற்றோர்கள் சரியானபடி முதல் குழந்தைக்குப் படிப்பித்து வைத்தால், அதன் மனப்பான்மை மாறி இரண்டாவது குழந்தையின் மீது, அன்பு ஏற்படும்.

முதலாவதாக இரண்டாவது குழந்தை, முதல் குழந்தையின் ஸ்தானத்தை அபகரிக்க வந்துவிட்டது என்ற நோக்கம் உண்டாகாமல் செய்யவேண்டும். ஒவ்வொரு குழந்தையும் தன் தாயிடம் ஓரளவு அன்பு பெற்றுத்தான் இருக்கும். தாயின் பண்பும் மனப்பான்மையும் குழந்தைக்கு எங்கே தெரியப்போகிறது ?

சாதாரணமாக ஒரு தாயார் தன் முதல் குழந்தையைப் பார்த்து பின்வருமாறு கூறுகிருள் என்று வைத்துக் கொள் வோம். "நீ பெரியவனுகி விட்டாய். நீ உன் காரியத்தை கவனித் துக் கொள்ளல் வேண்டும். சின்ன பாப்பா சிறியது. அதைக் கவனிக்கவே எனக்கு ஒழியவில்லை"

இம்மாதிரி பெரிய வயதான குழந்தைகளுக்கு கூறினல் அவர்கள் இந்த சமாதானத்தை ஏற்றுக் கொள்வார்கள். ஆனல் மூன்று வயதிலிருந்து ஐந்து வயது வரை இருக்கும் குழந்தை களுக்கு விஷயம் புரியாது. அக்குழந்தை, பிறந்திருக்கும் சிசுவை தன் வைரியாக நினைக்கிறது. அக்குழந்தையினல்தான் தன் தாயார் தன்னைக் கவனிப்பதில்லை என்று நினைக்கிறது. அதனல் மூத்த குழந்தை மனசில் சந்தோஷமில்லாமல் ஜீவிக்க நேரிடுகிறது.

முதலாவது குழந்தையைவிட, இரண்டாவது குழந்தைக்குத் தான், தாயார் தன் நேரத்தைச் செலவிடுவாள் என்பதில் சந்தேக மில்லை. சிறிது நேரமாவது முதல் குழந்தையின் நற்பயிற்சிக்கு ஒதுக்கி வைக்கவேண்டியது அத்தியாவசியம்.

கமலாவும் நரேந்திரனும் ஒரு இளம் தம்பதிகள். அவர்கள் ஒரே குழந்தையான மோகனுக்கு நான்கு வயது நிரம்பியதும், வீட்டில் உள்ளவர்களின் எண்ணிக்கையுடன் ஒரு ஜீவனைக் கூட்டிக் கொள்ளக்கூடிய நிலைமையை கமலா அடைந்தாள். இனி பிறக்கப்போகும் குழந்தையுடன் மோகன் நேச மனப் பான்மையுடன் வாழ்வதற்கு வேண்டிய சில்லறை விஷயங்களை அத்தம்பதிகள் கவனிக்கத் தொடங்கினர். எப்பொழுதும் மோகன் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் அறையில்தான் படுப்பது வழக்கம். அந்த அறையை புது குழந்தைக்கும் தாய்க்கும் விட்டுவிட்டு, மோகனைப் பக்கத்து அறையில் அவனது விளை யாட்டுச் சாமான்களுடன் தூங்க ஏற்பாடு செய்தனர். குழந்தை பிறந்த பிறகு மோகனை வேறு அறைக்குப் போகச் சொல்ல அவர்களுக்கு இஷ்டமில்லை. இரண்டாவது குழந்தை பிறப்பதற்கு இரண்டு மாதம் முன்னதாகவே, நரேந்திரன் குழந்தை மோகனை அழைத்து, "கண்ணே மோகன். நீ இப்பொழுது பெரிய பையனுகிக் கொண்டு வருகிருய். இன்னும் சில மாதங்களில் பள்ளியில் போய்ச் சேர்ந்து பாடம் படிக்கப் போகிருய், ஆகை

யால் நீ தனியாகப் பக்கத்து அறையில் தூங்கவேண்டும், உன் இச்சையாகத் தூங்கலாம். நான் சொல்வது சரிதானே'' என்றான். குழந்தையும் தனியாகப் படுத்து தூங்க சம்மதித்தான். அதே குழந்தையை, இரண்டாவது குழந்தை பிறந்த பிறகு வேறு அறைக்குப்போய் படுத்துக்கொள் என்றால், உடனே பிறந்த சிசுவின் மீது குரோதம் உண்டாவது இயல்புதானே. அக்குழந்தை பிறந்ததனால்தான், தான் வேறு அறைக்குப் போகிறேமென்ற எண்ணம் முதல் குழந்தையின் மனசில் பதியவைப்பது உசிதமல்ல. மோகனும் நரேந்திரன் கூறியபடி தன்னுடைய நன்மைக்காகவே அப்பா கூறுகிறார் என்று பக்கத்து அறைக்குப் போய்விட்டான். இரண்டுமாதங்கள் கழித்து இரண்டாவது குழந்தை பிறந்தது. இதற்காகவேதான் அடுத்த அறைக்கு அனுப்பப்பட்டான் என்ற எண்ணம் மோகன் மனசில் உண்டாகவே இல்லை.

அப்பொழுது மோகனுக்கு பள்ளிக்கூடம் போகும் வயது வரவில்லை. ஆனால் புது குழந்தை பிறந்த பிறகு அவனைப் பள்ளிக்கு அனுப்பினால், வீட்டில் பெற்றோர்கள் அக்குழந்தையைச் சீராட்டுவதற்காகத் தன்னைப் பள்ளிக்குப் போகச் சொல்கிறார்கள் என்ற எண்ணம் உண்டாகாதவாறு இருக்கும் பொருட்டு, மோகனை ஒரு 'கிண்டர் கார்டன்' பள்ளிக்கு அனுப்பிவைத்தார்கள். கமலாவுக்கு இரண்டாவது குழந்தை ஒரு பெண்ணாகப் பிறந்தது. ஆனால் அப்பெண் குழந்தை ஒரு சோனியாக விளங்கிற்று. தாயாருடைய முழுகவனத்தையும் நேரத்தையும் அக்குழந்தைக்குச் செலுத்தப்பட்டன. நரேந்திரன் மோகனைப் பார்தது ''கண்ணே மோகன். பார்த்தாயா, அம்மாவுக்கு எவ்வளவு வேலை, சின்ன பாப்பாவை கவனிப்பதற்கே சரியாக இருக்கிறது. உனக்குக் கூட ஒரு நல்ல கதை கூறவேண்டும் என்று பார்க்கிறாள், அது முடிய வில்லையே! நீதான் பெரியவனாகிப் பள்ளிக்குப் போகிறாயே. உனக்கு கதையெல்லாம் நிறைய வாத்தியாரம்மா சொல்லித் தருகிறாள். வா, நாம் இருவரும் பந்து விளையாடலாம்'' என்று கூறித் தாயார் தன்னை அதிகம் கவனிப்பதில்லை என்ற மனப்பான்மையை அகற்றுகிறான்.

வெகுநாட்களாக மோகன் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பொம்மை மோட்டார் காரை வாங்கிக் கொடுத்தார் நரேந்திரன்.

அந்த விளையாட்டுக் கருவியைச் சின்ன பாப்பா கையில் கொடுத்தார். "மோகன்! பாப்பா உனக்கு ஒரு வெகுமதி கொடுக்கிறது பார், வந்து வாங்கிக் கொள். உன் மீது பாப்பாவுக்கு எவ்வளவு ஆசை பார்த்தாயா?" என்றாள் கமலா. மோகனுக்கு அடிக்கடி விளையாட்டுச் சாமான்களை வாங்கி, அவை பாப்பாவின் வெகுமதிகள் என்று கூறி கொடுத்திருக்கின்றனர். இவ்விஷயம் சிறுவன் மனசில் அன்பையும் நேசத்தையும் வளரச் செய்தன.

நான் ஒரு நாள் பார்வதி வீட்டுக்குப் போயிருந்தேன். அவளுடைய இரு பெண்களும் அவ்வளவு அன்புடன் இருந்தார்கள். "சீதாவின் பேரில் லக்ஷ்மி உயிராய் இருக்கிறாளே என்ன காரணம்" என்றேன்.

அதற்குப் பார்வதி, "ஒன்றுமில்லை. எல்லாம் சிறிய காரணந்தான். லக்ஷ்மியின் மூன்றாவது வயது பிறந்த தினத்தின்போது சீதாவைப் பெற்று சில தினங்கள்தான் ஆகியிருக்கும். அவளுக்கு ஒரு சட்டைகூட புதிதாகத் தைத்துப் போடவில்லை. எனக்கு ஒரு யோசனை தோன்றியது. லக்ஷ்மியை அழைத்து, "நீ சமர்த்தாக இருந்தால் உன் பிறந்த நாள் வெகுமதியாக ஒரு உயிருள்ள பொம்மையைத் தருகிறேன்" என்றேன்.

லக்ஷ்மி ஆச்சரியம் அடைந்தாள். பிறந்த தினத்தன்று எனது அறைக்கு அழைத்து குழந்தை சீதாவைக் காண்பித்தேன். இந்த பொம்மை ரொம்ப சன்னமாக இருக்கிறது. நான்தான் அந்த பொம்மையை எடுத்துவைத்துச் சீராட்டவேண்டும். பொம்மை பெரியதாகிவிட்டால் நீ உன் இஷ்டப்படி விளையாடலாம்" என்றேன். அதிலிருந்து லக்ஷ்மிக்கு சீதாவிடம் ஒரு தனிப் பிரியம் உண்டாயிற்று. ஒரு தாய்க்கு இருக்கும் அன்பைவிட பன்மடங்கு அதிகமாக இருக்கிறது. "என் குழந்தை" என்றுதான் இப்பவும் லக்ஷ்மி, சீதாவை அழைக்கிறாள்" என்றாள்.

—எம். கே. நாமகிரி சீனிவாசன்

ரப்பர்

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கொலம்பஸ், 1493ஆண்டில் இரண்டாம் முறையாக உலகச் சுற்றுப்பிரயாணம் செய்தார். அச் சமயம் ஹாய்தி பகுதியிலுள்ள மக்கள், ஒரு வகை பிசினுல் செய்யப்பட்ட பந்துகளைக் கொண்டு விளையாடுவதைக் கண்டார்.

இப்பிசினையே 1535-ஆம் ஆண்டில் ரப்பர் என்றனர். 1735-ல் ஒரு பிரஞ்சுக்காரர் தென் அமெரிக்கா சென்று திரும்பினர். அப்போது இந்த ரப்பர் மரங்களைக் கண்டார். 1651-ல் அமெரிக்கா சென்ற மற்ருெரு பிரஞ்சுக்காரர் முன்னவர் கண்டு வெளியிட்ட நுட்பங்களை விளக்கி, இம்மரத்தின் பிசினுல் பல பொருள்களை உற்பத்தி செய்யலாம் என்று கூறினர்.

1770-ல் டாக்டர் பிரீஸ்ட்லி என்ற விஞ்ஞான நிபுணர் ரப்பரின் நன்மைகளை விளங்கச் செய்தார். 1839-ல் அமெரிக்காவில் சார்லஸ் குட்இயர் என்பவர் ரப்பரைப் பதஞ்செய்யும் முறையைக் கண்டு பிடித்தார். அவர் கண்ட பிறகே பல இடங்களில் ரப்பரைப் பயிர்செய்ய முற்பட்டனர்.

அவர்களில் ஒருவரான தென் அமெரிக்கர் எச். எச். விக்ஹம் என்பவர் "பாரா" ரப்பர் விதைகளைக் கொண்டுவந்து பிரேஜில் நாட்டில் பயிர் செய்தார். அவற்றின் விதைகளும் கன்றுகளுமே மலேயா இலங்கை முதலிய மற்ற இடங்களுக்கும் இறக்குமதியாகிப் பயிர் செய்யப்பட்டன.

"உலி" "ரம்போம்" "லோகான்" "பாரா" என்று ரப்பரில் நான்கு வகையான ரகங்கள் உண்டு. அவற்றில் 'பாரா" ரப்பர் மரங்களே மலாய் நாட்டில் அதிகம். பிறகு பலவகைப் பெயர்களோடு மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன.

மலேயாவில் மட்டிலும் 50 லட்சம் ஏக்கர் ரப்பர் தோட்டங்களிருக்கின்றன.

சாதாரண மனிதர்களுக்குச் சிறு பைத்தியம் உண்டு. அசாதாரண மனிதர்கள் அசாதாரண பைத்தியமாக இருக்கின்றனர்.

மேதைகளும் பைத்தியங்களும் நெருங்கிய உறவினர்கள்

●

பெரிய மேதாவிகள் அநேகருக்குப் பைத்தியங்களின் சேஷ்டைகள் இயற்கையாகவே இருப்பதாக ஒரு ஆங்கிலக் கவி கூறுகிறார்.

பிரான்சு தேசத்தைச் சேர்ந்த ரிச்லு என்பவர் மிகப் பெரிய அரசியல் நிபுணர் ஆவார். ஆனால் இவருக்கு ஒரு பெருங் குறை இருந்தது: அடிக்கடித் தான் ஒரு குதிரை என்று சொல்லிக் கொண்டு குதிரையைப் போலவே தாண்டித்தாண்டி குதிப்பாராம். கனைப்பாராம்! இம்மாதிரி லீலைகள் செய்யும்போது இவரைப் பார்த்தால் பைத்தியம் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டும். மிகப் பிரபல ஆங்கில எழுத்தாளரான டாக்டர் ஜான்ஸன் சாப்பிடும்போது கிறிஸ்துவ வேத வாக்கியங்களை அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாராம். வெளியே உலாவப்போகும்போது வழியிலுள்ள வீடுகளின் வெளி வேலிகளின்மீது தன் கைத் தடியால் தட்டிக்கொண்டே கம்பிகளை எண்ணியவாறே செல்வாராம்.

எண்ணிக்கை தப்பிவிட்டால் திரும்பச்சென்று சரியாக எண்ணி வருவாராம். எந்த நண்பர் வீடுகளிலும் அறைகளிலும் நுழையும்போது தனது வலது காலை முதலில் வைத்துத்தான் ஏறுவார். நடந்து வரும்போது இடது காலை வைக்க நேரிடும்போலிருந்தால் அறையின் கதவுக்கு முன்னால் நின்று ஜாக்கிரதையாக வலது காலை வைத்து ஏறுவாராம்.

டால்ஸ்டாய் என்பவர் பிரபல ருஷ்ய எழுத்தாளர். ஒரு ஞானியுமாவார். ருஷ்யாவில் புரட்சி ஏற்பட்டதற்குக் காரணமே இவருடைய நூல்கள்தான். இவர் மனத்தில் பறவையைப்போல் தானும் பறக்கலாமென்ற எண்ணம் குடிகொண்டிருந்தது.

ஒரு நாள் தான் அரண்மனையில் இரண்டாவது மெத்தையி லிருந்து காலையும் கையையும் பறவை இறக்கை யடித்துக் கொள்வதுபோல அடித்துக்கொண்டு வெளியில் குதித்துவிட்டார். பூச்செடியின்மீது விழுந்து உயிர் தப்பியது அவரது மனைவியின் 'தாலி பலம்' என்று தான் கூறவேண்டும். மேல் நாட்டு சாஹித் திய கர்த்தாக்கள் அநேகருக்கும் பலவித பைத்திய சேஷ்டைகள் இருந்தன.

ஜெர்மனியைச் சேர்ந்த மொஸார்ட் என்பவருக்கு அநேக சாஹித்தியங்களை எழுதிய பின்னர் ஒரு விநோத கிறுக்குப் பிடித்தது. அது என்னவென்றால், ஆண்டவன் தன் பக்கத்திலேயே இருந்து இன்னும் ஒரு புது சாஹித்தியத்தைச் சிருஷ்டிக்க வற் புறுத்துகிறார் என்பதே. அந்தப் புது சாஹித்தியம் தன் சவத்தைப் புதைக்கக் கொண்டுபோகும் வைபவத்தைப் பற்றித்தான்! போலந் தைச் சேர்ந்த சாப்பின் என்ற சாஹித்திய கர்த்தா ஈயைக் கண்ட வுடன் வீராவேசமடைந்து ஒரு பெரிய சத்துருவைத் தாக்குவது போல் சேஷ்டைகள் புரிவாராம். பிதோவன் என்ற சாஹித்திய கர்த்தாவும் ஜெர்மனியைச் சேர்ந்தவரே. இவர் எப்போதும் குளிர்ந்த நீரிலேயே மூழ்கிக் கொண்டிருப்பாராம். அதோடு மட்டு மல்ல. வீடு முழுவதும் தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டிருப் பாராம்.

பிரபல அமெரிக்க எழுத்தாளரான போ, எலி, பூச்சிகள் முதலியன தன்னை எப்பொழுதும் சூழ்ந்துகொண்டிருப்பதாகவே உளறிக்கொண்டிருப்பாராம்.

கிரே என்பவர் அநேக அழகு வாய்ந்த ஆங்கிலக் கவிதைகளின் கர்த்தா. அவர் தன்னை எப்போதும் தீப்பற்றிக்கொள்வதாக தன் னுடைய பள்ளிக்கூட நாளிலிருந்தே திகில் அடைந்து வந்திருந்தார். இதையறிந்த பள்ளிக்கூட நண்பர்கள் ஒரு நாள் பள்ளிக்கூடமே தீப்பற்றிக் கொண்டுவிட்டதாகப் புரளிசெய்து இவரைப் பீதியடை

யச் செய்தார்கள். பீதியடைந்த கிரே ஒரு கயிற்றைப் பிடித்துக் கொண்டு வெளியே இருந்த ஒரு தண்ணீர் வாளியில் குதித்தார்.

மொன்டேயின் என்ற பிரெஞ்சு எழுத்தாளர் வெள்ளிக் கிழமையன்று எழுதவே மாட்டாராம்!

டான் என்பவர் ஒரு ஆங்கிலக் கவி, உலகம் அநித்தியம் என்ற கொள்கையை யுடையவர். இதை மறந்துபோகாமல் எப் போதும் ஞாபகத்தில் இருப்பதற்காகவே தன் அறையில் ஒரு சவப் பெட்டியை வைத்துக் கொண்டிருந்தாராம். தினந்தோறும் இந்தப் பெட்டியில் சற்றுநேரம் நித்திரையுஞ் செய்வாராம்.

ஷில்லர் என்ற ஜெர்மன் கவி குளிக்கும் தொட்டியில் உட் கார்ந்துகொண்டேதான் பிரசித்திபெற்ற கவிதைகள் யாவையும் புனைந்துள்ளாராம்.

வால்டேர் என்பவர் பிரெஞ்சு வேதாந்திகளில் மிகப் பெரியவர். பொதுமக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் எதையும் அஞ்சாத தீரர். ஆனால் இவருக்கு இருளைக்கண்டால் பயம்!

ஜெர்மனியில் ஆன்மீகக் கட்டுரையாளர்களில் நியாண்டர் என்பவர் பிரசித்திப் பெற்றவர். ஒருநாளிரவு இவர் வீட்டுக்கு வரும்பொழுது தன்கால் நொண்டியாய்விட்ட தென்று ஓலமிட்டுக் கொண்டே வந்தார். கால்களைச் சோதித்ததில் கால்களில் ஒன் றும் சேதமில்லையென்று தெரியவந்தது. ஆனால் "நொண்டிக் கொண்டுதானே நான் வீட்டுக்கு வந்தேன்" என்று வற்புறுத்திக் கூறினாராம், நியாண்டர். பிறகு அவரது உறவினர்கள் சோதித்து உண்மையை அறிந்தனர். ஏதோ ஆத்மீக விஷயத்தைப் பற் றிய யோசனையிலாழ்ந்தவராய் ஒரு காலைச் சாக்கடையிலும் இன் னொரு காலை நடைபாதையிலும் வைத்துக்கொண்டு தான் மாலை நேரம் பூராவும் நடந்துகொண்டிருந்தாராம் இவர்.

பெரிய மேதைகளும் பைத்தியக்காரர்களும் நெருங்கின உற வினர்களென்ற ஆங்கிலக் கவியின் வாக்கு வாஸ்தவம்தானே!

இனும் கொடுக்காமல் முடியாது

●

மேல் நாட்டு ஹோட்டல்களில் எப்போதும் ஒரு உபத்திரவம் உண்டு.

ஹோட்டலில் தங்கும் பிரயாணிகளும் ஹோட்டலுக்கு வரும் மற்றவர்களும் ஆகாரங்களுக்குச் செலுத்தவேண்டிய பணம் மட்டும் கொடுத்தால் போதாது. ஆகாரங்களை எடுத்துவரும் சிப்பந்திகள், கதவு அறைகளைத் திறந்து மூடுபவர்கள் 'லிப்டு' சிப்பந்திகள் எல்லோருக்கும் 'இனும்' கொடுத்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

இனும் கொடுக்காத நபருக்கு ஹோட்டலில் மதிப்பே கிடையாது. ஹோட்டல் சிப்பந்திகளுக்கு இனும் கொடுக்காமலிருப்பது மிகவும் அநாகரிகம் என்ற நம்பிக்கை மேல்நாடெங்கும் நில்வியுள்ளது.

ஒருவர் ஒரு வாரம் ஒரு ஹோட்டலில் தங்கி அந்த இடத்தில் வேலைசெய்யும் சிப்பந்திகள் ஒவ்வொருவருக்கும் இனும் கொடுத்தார். இந்த வீண் செலவைக் குறித்து இவர் வேதனையடைந்தார். வேதனையிலாழ்ந்திருக்கும் பொழுது ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் அறையின் கதவைத் தட்டினன். "யார் அங்கே, என்ன வேண்டும்" என்று அறையில் தங்கியிருந்தவர் கேட்டார். "உங்களுக்குத் தந்தி, சார்" என்று ஹோட்டல் சிப்பந்தி பதில் கூறினன்.

"கதவிடுக்கு வழியாய் அதைத் தள்ளு" என்று ஆக்ஞாபித்தார்.

"அது முடியாது சார்" என்று பதில் வந்தது.

"ஏன் முடியாது" என்று இவர் திரும்பியும் கேட்டார்.

"தந்தி தட்டு மீது இருக்கிறது சார்" என்று ஹோட்டல் சிப்பந்தி நகைத்தவாறு பதில் கூறினன்.

தட்டின்மீது தந்தியை வைத்து உள்ளேவந்து அறையில் தங்கியிருந்தவரிடம் வைத்து ஒரு ஸலாம் போட்டால் ஹோட்டலில் தங்கியவர் தான் செய்யவேண்டிய மரியாதையை எப்படி செய்யாமலிருக்கமுடியும்! இது தான் ஹோட்டல் சிப்பந்தியின் சூழ்ச்சி. இந்தச் சூழ்ச்சியைத் தடுக்கமுடியவில்லையே என்று ஹோட்டலில் தங்கியிருந்தவர் வருந்தினர்.

செய்நன்றி கொன்ருர்க்கு உய்வில்லை

காட்டில் ஒரு புலி வேடன் வலையில் சிக்கிக்கொண்டு பெரும் ஓலமிட்டது. அந்த வழியே போய்க்கொண்டிருந்த மனிதனெருவன் புலியை வலையிலிருந்து விடுவித்தான். உடனே புலி அவனைத் தின்றுவிடுவேன் என்றது. மனிதன் "உன்னை வலையிலிருந்து தப்புவித்த என்னை நீ தின்பது நியாயமா?" என்று கேட்டான். புலி "உன்னைத் தின்னுவது நியாயமில்லைதான், ஆனல் எனக்குப் பசியாயிருக்கிறது" என்று கூறியது. உடனே மனிதன் "இதைப் பற்றி யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொண்ட பிறகு நீ என்னைத் தின்னலாம்" என்ருன்.

அப்போது அந்த வழியே வந்த ஒரு எருதிடம் மனிதன் நடந்ததைக் கூறினன். எருது "புலி உன்னைத் தின்பது நியாயந்தான்" என்று கூறியது. பிறகு மனிதன் அந்த இடத்திலிருந்த ஒரு பெரிய விருக்ஷத்தின் அபிப்பிராயத்தைக் கோரினன். விருக்ஷமும் எருதின் அபிப்பிராயத்தையே ஆமோதித்தது. மூன்ருவதாக மனிதன் ஒரு முயலைக் கண்டு பிடித்து அதன் அபிப்பிராயத்தைக் கேட்டான். முயல் "இதுவரை நடந்த விஷயங்களை என் கண்ணலேயே கண்டால்தான் இதைப் பற்றி நான் ஒரு முடிவுக்கு வர முடியும்" என்றது. முயலின் அபிப்பிராயத்திற்கிணங்க புலி தான் முதலில் சிக்கியபடியே திரும்பவும் போய் வேடன் வலையில் சிக்கிக்கொண்டது. முயலும், மனிதனும் ஓட்டமெடுத்தனர்.

—கொரிய நாட்டுக் கட்டுக் கதை.

விவாக ரத்து விவேகமற்றது

விவாக ரத்து என்ற உரிமையோடு வெகு நாட்களாக வாழ்ந்துவரும் அமெரிக்க மாதர்களுக்கு ஒரு சமூக சாஸ்திர விற்பன்னர். சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு நூலில் சில உபதேசங்கள் செய்துள்ளார். இவர் இப்புத்தகத்தை எழுதுவதற்கு முன்பு விவாக ரத்து செய்துகொண்ட ஆயிரக்கணக்கான மாதர்களைச் சந்தித்து அவர்கள் நிலைமையைப் பற்றின தகவல்கள் முழுவதும் விசாரித்தார். குழந்தைகள் உள்ள தம்பதிகள் விவாக ரத்து பெறுவதினால் குழந்தைகளின் நிலை மிகவும் பரிதாபகரமாகி விடுகிறதென இந்த நிபுணர் அபிப்பிராயப்படுகிறார்.

தாயும் தந்தையும் ஒன்று சேர்ந்திருந்து குழந்தைகளை வளர்ப்பதைப்போல அதிருஷ்டம் குழந்தைகளுக்கு வேறொன்றுமில்லை என்று இவர் திட்டமாய்க் கூறியுள்ளார். விவாக ரத்துக்கு முயற்சிப்பதற்கு முன், ஒரு ஸ்திரீ கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமென்னவென்றால், விவாக ரத்து கிடைத்த பின்னர் தானும் தன் குழந்தைகளும் பிழைக்க வழியுண்டா என்பதே. குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு ஒரு ஸ்திரீ தன் தாயாரிடம் சென்று வசிப்பது மிகவும் கேவலம். இதைவிடச் சிறந்த ஒரு உபாயம் தன்னைப் போல் விவாக ரத்து பெற்றவளும் குழந்தைகள் உள்ளவளுமான மற்றொரு ஸ்திரீயுடன் சேர்ந்து வாழ்க்கை நடத்த முயற்சிப்பது தான். இரு குடும்பங்கள் ஒன்றாக இருந்தால், வாடகை, மளிகை சாமான்கள், வேலைக்காரர்களின் சம்பளம் முதலியவற்றில் இருவருக்கும் லாபம் உண்டு.

அடுத்தபடியாக தன் கணவனைப் பிரிந்த ஸ்திரீ தன் பிழைப்பைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். எந்த வேலையாயினும் தானிருக்கும் வீட்டிலிருந்தே செய்யவேண்டுமென மேற்கூறிய அமெரிக்க நிபுணர் வற்புறுத்துகிறார். ஏனென்றால் தான் வயிற்றுப் பிழைப்புக்காக பகல் முழுவதும் வெளியே சென்றால் தன் குழந்தைகளை

கவனிக்கமுடியாது. விவாக ரத்து உடன்படிக்கைப் பிரகாரம் தாய் வசம் குழந்தைகளிருந்தாலும் பல தந்தைகள் பலாத்காரமாக குழந்தைகளைக் கொண்டுபோய்விடுவார்கள். குழந்தைகளின் செலவிற்காக தந்தைகள் பணம் கொடுக்கவேண்டுமென்பது விவாக ரத்துச் சட்டம். ஆனால் சில தந்தைகள் அவ்வாறு கொடுப்பதில்லை.

இந்த சிக்கல்களையெல்லாம் யோசிக்கும்போது விவாக ரத்து செய்யாமலே தம்பதிகள் எப்படியாவது சமாளித்து வாழ்க்கை நடத்துவது நலம் என்று எவரும் ஒப்புக்கொள்வார்கள்.

சாதாரண அமெரிக்கரின் வருமானம் மாதம் ஆயிரம் ரூபாய். இதில் மூன்றில் ஒரு பங்குக்குமேல் எந்த ஸ்திரீயும் ஜீவனாம்சமாக எதிர்பார்க்கமுடியாது. விவாக ரத்து செய்துகொள்ளும் அநேக ஸ்திரீகளுக்கு ஜீவனாம்சமாக ஒன்றுமே கிடைப்பதில்லை. சில விவாக ரத்து வழக்குகளில் மனைவி குழந்தைகளை கணவன் வசித்துக் கொண்டிருக்கும் ஊரைவிட்டு வேறு ஊருக்கு அழைத்து போகக்கூடாதென்றுகூட விதிகள் உண்டு. விவாக ரத்து கிடைத்து தன் குழந்தைகளோடு தனிக் குடித்தனம் அமைத்துவிட்டால் குறிப்பிட்டச் சில தினங்களில் கணவன் வந்து குழந்தைகளோடு இருக்கலாமென்றும் தீர்ப்பில் கட்டுப்பாடிருக்கும். கணவனை விட்டுப் பிரிந்த ஸ்திரீக்கு தன் கணவனாயிருந்தவன் குறிப்பிட்ட சமயங்களில் தன் வீட்டுக்கு வருவதென்பது மிகவும் கசப்பான விஷயந்தானே! ஆனால் இதை எப்படித்தடுக்க முடியும்? கணவன் தான் உரிமைபெற்ற நாட்களில் மனைவி வீட்டிற்கு வருவான். தனக்கிஷ்டமிருந்தால் குழந்தைகளுக்கு ஏதாவது தின்பண்டங்களோ ஆடைகளோ அளிப்பான். இல்லாவிடில் கடிந்து கொண்டே வருவான். தன் மனைவியாயிருந்த ஸ்திரீ அவள் வீட்டை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை நன்கு கவனித்து அதைப்பற்றி அவன் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பான். மனைவி அவள் கவலைகளை மறப்பதற்கு மதுபானம் அல்லது வேறு உபாயங்களைக் கைக்கொண்டுவிட்டாளா என்பதை கவனிப்பான். அதனால் கணவனாயிருந்தவன் மனைவியாயிருந்த ஸ்திரீயின் வீட்டுக்கு வரும்போது சண்டைச் சச்சரவு நேரிடலாம். சண்டை சச்சரவு நேரிடாமலிருப்பதற்கு இவ்வாறு யோசனை கூறுகிறார் மேற்கூறிய நிபுணர்.

"கணவன் சுமத்தும் குற்றங் குறைகளை பொறுமையோடு கேள், கணவன் வீட்டிற்கு வரும்போது குழந்தைகளோடு பொழுது போக்குவதற்கென்றே ஒரு அறையைப் பிரத்யேகமாக்கி அதை எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள். கணவனுக்குக் குழந்தைகளின் மீதுள்ள உரிமைகளில் குறுக்கிடாதே. குழந்தைகளுக்குத் தந்தை மீதுள்ள மதிப்பு போய்விடாமல் பாதுகாத்துக்கொள். குழந்தைகள் எதிரில் கணவனிடம் தர்க்கம் செய்யாதே. கணவனுடைய முக தரிசனம்கூட உனக்கு எரிச்சல் விளைவிப்பதானல் கணவன் வீட்டுக்கு வரும் சமயத்தில் வீட்டைவிட்டு வெளியே செல். உன் ஓய்வு நேரங்களில் கணவன் சுமத்திய குற்றங் குறைகளைப் பற்றி நன்கு ஆலோசனை செய்."

விவாக ரத்துக்கு காரணங்களாய் அமைந்த குற்றங் குறைகளுக்கு ஒரு ஜாபிதாவும் மேற்கூறிய நிபுணர் தன் நூலில் வெளியிட்டிருக்கிறர். "நான் தலையை ஒழுங்காய் சீவிக் கொள்வதில்லை" "நான் குறட்டை விடுகிறேனும்." "எனக்கு அடக்க ஒடுக்கமில்லையாம்." "இரவு இரண்டு மணிக்கு குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது சப்தஞ் செய்து அவர் நித்திரையைக் கலைத்தேனும்." "அவர் தாயாரைப்போல் எனக்கு சமைக்கத் தெரியாதாம்." "எனக்குப் பேச்சில் நயமில்லையாம்." "என் குழந்தைகளையே கவனித்துக்கொண்டு அவரை அசட்டை செய்கிறேனும்."

இந்தமாதிரி யெல்லாம் மனைவிகளைப் பற்றிக் கணவர்கள் அபிப்பிராயங்கள் கூறினலும் விவாக ரத்துக்காக முயற்சி செய்வதற்கு உண்மையில் காரணங்கள் இவையல்ல. மனைவியைப் பற்றிக் கணவன் கூறின குற்றச்சாட்டுகளைப்போல் கணவனைப் பற்றி மனைவியும் கூறலாம்.

விவாக ரத்துக்கு அடிப்படையான காரணம் திருமணம் என்பதன் உண்மையை நன்கு கிரகிக்காததேதான். திருமணம் என்பது குடும்பத்தின் அஸ்திவாரமாகும். இந்த அஸ்திவாரத்தின் மீது நிற்பது ஒரு மூர்த்தியின் இருப்பிடமான ஆலயம். இந்த ஆலயத்தைத் தாங்கும் தூண்களே தம்பதிகள். இந்தக் கொள்கை எந்த மதத்திற்கும் எந்தப் பண்பாட்டிற்கும் அடிப்படையாருயிக் கிறதோ அங்கே விவாக ரத்துக்கு இடமேது ?

மாமியார் பிரச்னை நம் நாட்டில் ஒருவிதம். மேல் நாட்டிலோ வேறு விதம்.

மருமகனை விரட்டும் மாமியார்

மாமியாரைப் பற்றி நம் நாட்டில் யாருக்குப் பயம்? மருமகளுக்குத்தானே?

ஆனால் மேல் நாடுகளில் மாமியாரைப் பற்றிப் பீதியடைவது மருமகன்தான்! இது மேல் நாடுகளுக்கும் நம் நாட்டுக்குமுள்ள ஒரு முக்கிய வித்தியாசம்.

நம் நாட்டில் அவிபக்த குடும்பங்களே அதிகமானதால்பெண் தன்னுடைய கணவனுடைய வீட்டிற்குப் போகும்போது கணவனின் பெற்றோரிடம் எந்த விதத்திலாவது நல்ல பெயர் எடுக்கவேண்டியிருக்கிறது.

மேல் நாடுகளில் கலியாணமாகி கணவன் வீட்டுக்குப் போகும் பெண்ணுக்கு இத் தொந்தரவேயில்லை.

மேல் நாட்டில் பிள்ளைக்குக் கலியாணமானால் அவன் தன் மனைவியுடன் தனிக்குடித்தனம் போவதுதான் வழக்கம். அதனால் பெண், தன் மாமனார் மாமியாருக்குப் பயந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தன் மனைவியின் தாயார் எங்கே தன் வீட்டிற்கு வந்துவிடப் போகிறாளோ என்ற பயம்தான் சகஜமாய், கலியாணமான மேல் நாட்டு வாலிபர்களை பீடித்துள்ளதாகும்.

நம் நாட்டு சமூகத்திலும் இலக்கியத்திலும் மாமியாரைப் பற்றி கூறுவதிலிருந்து அவள் மருமகளுக்கு எவ்விதமான கொடுமைக்காரி என்பது விளங்கும்.

மாமியார் என்ற பெயரைச் சொன்னாலே ஒருவிவாகமாகாத பெண்ணின் மனத்தில்தோன்றுவது ஒரு ராக்ஷஸியின் உருவம் தான்.

ஆனால் மேல் நாட்டு சமூகத்திலும், இலக்கியத்திலும், பத்திரிகைகளிலும் மாமியார் என்றால் ஒரு வேடிக்கையான விஷயம். அவளைப்பற்றிலக்ஷக்கணக்கான கேலிக்கதைகள் சொல்வார்கள்.

சித்திரக்காரர்கள் எப்பொழுதும் மாமியார் என்ருல் பூதத்தின் உருவத்தைத்தான் சித்தரிப்பார்கள்.

மாமியார் என்பது எல்லோரையும்போலுள்ள ஒரு சாதாரண ஸ்திரீதான். சாதாரண மனிதர்களின் இன்ப துன்பங்கள் இவளையும் பாதிக்கும் என்பதை அறவே மறந்துவிட்டார்கள். மாமியார் என்ருல் அணுகுண்டு, அநேக வித தொத்து வியாதிகள் முதலிய அவதிகளைப்போல் உலகத்தையே பொதுவாகப் பீடிக்கும் ஒரு வியாதி. இந்த வியாதியை எப்படி சமாளிப்பது, இது எந்த மருந்தால் குணமாகும் என்றெல்லாந்தான் மாமியாரைப் பற்றி எழுத்தாளர்கள் சாதாரணமாக எழுதுவது வழக்கம்.

மேற்கூறியதற்கு உதாரணமாக சமீபத்தில் ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் "மாமியார் பிரச்னை" என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒரு கட்டுரையிலிருந்து சில அம்சங்களைத் தருகிருேம்.

மாமியார் பிரச்னை

"மாமியார் என்ற ஒரு விசேஷ சிருஷ்டி உலகத்தில் தோன்றியிருப்பதற்கு ஒரே காரணம்தான் உண்டு. அது என்னவென்ருல் மாப்பிள்ளைகளை பைத்தியம் பிடிக்கவைத்து குடிவெறியர்களாக்கி கழுத்தில் சுறுக்குப் போட்டுக்கொண்டு சாக வைப்பதற்குத்தான்.

"அமெரிக்க சமூகத்தை பீடித்துக்கொண்டேயிருக்கும் இப்பிரச்னையைப் பற்றி விஞ்ஞான ரீதியாக எவரும் ஆராய்ச்சி செய்ததில்லை. இம்மாதிரி ஒரு ஆராய்ச்சி செய்தால் இந்தப் பிரச்னையின் உண்மை ஒருவாறு தெளிவாகும்.

"சமீபத்தில் சில முக்கியமான சர்வகலாசாலைகளும், ஆராய்ச்சிக் கழகங்களும், மனோதத்துவ நிபுணர்களும், சமூக சாஸ்திர விற்பன்னர்களும் கலந்து 'மாமியார் பிரச்னை'யைத் தீர்ப்பதற்கு முயற்சித்தார்கள். அவர்கள தயாரித்த அறிக்கை மாமியாரால் பாதிக்கப்படும் மாப்பிள்ளைகளுக்கு ஒரு தகுந்த வழிகாட்டியாகும்.

"மாமியார்களின் செய்கைகளினுல் எவ்வளவு குடும்பங்கள் சிதறிப்போகின்றன? சிதறிப்போன 7000 குடும்ப வரலாறுகளுக்கு அவை சிதறிப்போன காரணங்களை அறிவதற்காக ஒரு மனோதத்துவ நிபுணர் ஆராய்ச்சி செய்தார். இந்த ஆராய்ச்சியின் பலனுய் இந்த 7000 குடும்பங்களும் சிதறிப்போனதற்குக் காரணம் மாமியாரேதான் என்று தெரியவந்தது. கலியாணமாகி ஒரு மாதத்திற்கெல்லாம் மாமியார் பிரச்னையும் ஆரம்பமாகி விடுகிறது! இந்த ஒரு மாதத்தில் மாமியாரின் அன்பைப் பெருத மருமகன் விவாகரத்து செய்துகொள்ளவேண்டியதுதான்.

கணவனின் மாமியாரா—மனைவியின் மாமியாரா?

"குடும்பங்கள் சிதறுவதற்குக் காரணம், சாதாரணமாகப் பரவியிருக்கும் நம்பிக்கையென்னவென்றால், கணவனின் மாமியார் குடும்பத்துக்கு கோடர்ரி என்பதே. இந்த ஆராய்ச்சியிலிருந்து தெரிவதென்னவென்றால் மனைவியின் மாமியாராலும் ஏராளமான குடும்பங்களும் சிதறிப்போகின்றனவென்பதாகும்.

"புது மணத் தம்பதிகள் மாமியார் மாமனார் இருக்குமிடங்களிலிருந்து எவ்வளவு தூரம் சென்று குடித்தனஞ் செய்யலாமோ அவ்வளவு தூரம் சென்று வசிப்பதுதான் உத்தமம் என்று ஆராய்ச்சியாளர்கள் முடிவிற்கு வந்துள்ளார்கள்."

மாமியாரை எப்படி அழைக்கவேண்டும்?

"அநேக மாப்பிள்ளைகளுக்கு இது ஒரு பெரிய தலைவலி. அநேகர் அருமையானப் பெயரிட்டு அழைக்காமல் ஏதோ ஒரு விதமாகச் சமாளித்துவருகிறார்கள். மாமியாருக்குப் பிடிக்காத பெயர்களால் அழைத்து மாமியாரின் விரோதத்தைச்சம்பாதிக்காமலிருப்பவர்கள் மிகவும் அதிருஷ்டசாலிகள் ஆவார்கள்.

மாமியாரின் அன்புக்குப் பாத்திரமாவதின் இரகசியமென்ன?

கலியாணமாவதற்கு முன்பே புது மணத் தம்பதிகளின் பெற்றோர்கள் பரிச்சயமுள்ள நண்பர்களாயிருந்தால் மாமியார் பிரச்னைக்கு இடமே கிடையாது. புது மணத் தம்பதிகளின் பெற்றோர்கள் இம்மாதிரிஏற்கனவே பரிச்சயமான குடும்பங்களாயில்லாவிட்டால் மாப்பிள்ளையைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்!

ஒரு வாலிபனின் கல்வி அறிவிற்கும் அவன் மாமியார் அன்புக்கும் என்ன சம்பந்தம்?

"தன் பெண்ணைவிட மாப்பிள்ளை அதிகம் படித்தவனானல் மாமியார் மருமகனை மெச்சுவாள். அம்மாதிரி அதிகப் படிப்பில்லாவிடில் அவனைத் தன் பெண் மணந்துகொண்டதால் தனக்கே அகௌரவம் சேர்ந்துவிட்டதென்றே கூறுவாள்.

"அவரவர்கள் மாமியார் ஸ்தானம் அடையும்போது புது மண தம்பதிகளைப் பாதிக்காமலிருக்கும்படி நடந்துகொள்வதற்கு எல்லா ஸ்திரீகளுக்கும் பயிற்சியளிக்கவேண்டுமா?

"கண்டிப்பாக வேண்டும். தன் பெண் தன் வீட்டைவிட்டு கணவன் வீட்டுக்குப் போய் விட்ட பின்னரும் அமைதியாகத் தன் வாழ்க்கையை நடத்துவதற்கும் அநேக ஸ்திரீகளுக்கு பயிற்சி தேவைதான். இளம் தம்பதிகள் தன்னிடம் வந்து கேட்காமல் ஒரு உபதேசமும் செய்யக்கூடாது."

சென்னை-600

பிராணன் அளிக்கும் பிளாஸ்மா

●

மனித சரீரத்தில் ஓடும் இரத்தம் ஏதாவதுகாரணத்தால் இறைந்தால் உயிருக்குத் தீங்கு ஏற்படலாம். சோகை முதலிய நோய்களினால் இரத்தத்தின் அளவு தரமும் குறைந்து விடுகிறது. பலத்த காயங்கள் ஏற்பட்டால் சரீரத்திலிருந்து ரத்தம் அதிகமாக வெளியாகிறது.

இம்மாதிரியான நிலைமையில் மனிதன் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரு கைகண்ட வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுதான் இரத்தச் சிகிச்சை.

தேகத்தில் இரத்தம் குறைந்து போய்விட்டால் இரத்தத்தை சரீரத்தில் செலுத்தினால்தான் உயிர்தப்ப முடியும். இம்மாதிரி நோயாளிகளின் சரீரத்தில் செலுத்துவதற்காக இரத்தத்தை ஆரோக்கியமுள்ள மனிதர்களிடமிருந்து தானமாக வாங்குகிறார்கள். ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனின் இரத்தம் பொருந்தாது. இரத்தத்தில் நான்கு ரகங்கள் உண்டென்பதை ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்துள்ளனர். ஒவ்வொரு மனிதனின் இரத்தமும் எந்த ரகத்தைச் சேர்ந்ததென்று தெரிந்துகொண்டு அந்த ரக இரத்தத்தை செலுத்தினால்தான் அவன் குணமடைவான். யுத்த களத்தில் ஆயிரக்கணக்கான படைகள் ஒரே சமயத்தில் படுகாய மடைந்தால் இரத்த சிகிச்சையில் தான் உயிர்பெற முடியும் என்ற நிலையில் இருப்பார்கள். இவர்கள் ஒவ்வொருவருடைய இரத்தத்தையும் பரிசோதித்து அதன் ரகம் என்னவென்று தெரிந்துகொண்டு அவர்களுக்கு அந்த ரக இரத்தத்தைச் செலுத்துவதென்பது யுத்த களத்தில் முடியாத காரியம்.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு இன்னொரு வழி கண்டுபிடித்துள்ளனர். இது என்னவென்றால் இரத்தத்திலுள்ள சாரத்தை செயற்கை இரத்தமாக தயாரித்து வைத்துக்கொண்டிருப்பது தான். இதற்குப் பெயர்தான் இரத்தப் பொடி அல்லது பிளாஸ்மா.

இரத்த சிகிச்சை முறை நீண்டகால ஆராய்ச்சிக்குப் பிறகுதான் அமலுக்கு வந்தது. இரத்தம் செலுத்தி உயிரூட்ட முடியும் என்று சித்தாந்தம்

செய்த பிறகு 1901 இல் ஓர் வியன்னு டாக்டர் இரத்தத்தில் நான்கு வகைகள் உண்டு என்றும் தானம் செய்பவருடைய இரத்தமும் சிகிச்சை பெறுபவரின் இரத்தமும் ஒரே வகையைச் சேர்ந்ததாக இருந்தால்தான் பயன் கிடைக்கும் என்றும் கண்டுபிடித்தார்.

இயற்கை இரத்தம் அதி சீக்கிரம் கட்டி தட்டி விடுவதால் அதைச் சேமித்து வைப்பதிலும் சிக்கலேற்பட்டது. 1914 - ஆம் ஆண்டுவரையில் இதற்குப் பரிகாரம் காணமுடியவில்லே. 'சோடியம் சிட்ரேட்' என்ற உப்பு இரத்தத்தை முறிக்காமல் தடுக்கிறது என்று அந்த ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆரோக்கியமான மனித உடம்பில் ஐந்து லிட்டர் (ஓர் அளவு) இரத்தம் இருப்பதாகவும், இரண்டு லிட்டர் இரத்தம் சேதமடைந்துவிட்டால் இரத்த சிகிச்சை அவசியமென்றும் கண்டுபிடித்திருக்கிருர்கள். தீப்புண், காயம் இவற்ருல் இரத்தச் சேதம் அதிகமாயிராது என்ருலும், அதிர்ச்சியாலும், இரத்த ஓட்டம் தடைப்படுவதாலும் மரணம் சம்பவிக்கக் கூடும். இந்தமாதிரிச் சம்பவங்களில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்வதுதான் அவசியம். அசல் இரத்தம் உடம்பில் சேரவேண்டுமென்பதில்லே. சிவப்பணுக்கள் (கார்பஸெல்ஸ்) குறைவால் அல்லாமல் ஓட்டக் குறைவால் நேர்ந்த விபரீதமாகையால் இரத்த நீர் (பிளாஸ்மா) சிகிச்சையே போதுமானது.

பிளாஸ்மாவை தரம்வாரியாகப் பிரிப்பதும் சுலபம். அதை விசேஷமுறையினுல் உலர்த்தி (மஞ்சள் நிறமுள்ள) பொடியாக்கி நீண்டகாலம் பாதுகாத்துவைக்க முடியும். தேவையான பொழுது அதை நீர்க் கலவை செய்துகொள்ளலாம்.

மனமுவந்து இரத்த தானம் செய்கிறவர்கள் ஏராளமாக இருந்தாலும் தேவைக்கேற்றபடி சமாளிக்க முடியவில்லே. ஆகவே செயற்கை முறையில் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. பிளாஸ்மாவுக்கு மாற்றுப் பொருள்கள் கண்டுபிடிக்கப் பட்டன. இவற்றில், சர்க்கரையிலிருந்து தயாராகும் 'டெக்ஸ்ட்ராவன்' என்ற வியாபாரப் பெயருடன் பிரிட்டனில் தயாராகும் செயற்கை இரத்தப் பொடி சென்ற ஆகஸ்டில் பூகம்பத்தினுல் அல்லலுற்ற ஐயோனிய தீவுவாசிகளேக் காப்பாற்ற அனுப்பப்பட்டது.

இன்றைய நாகரிகத்தைச் சேர்ந்ததும் மிகவும் பரிதாபகரமானதுமான ஒரு நோயைப் பற்றி.

நான் யார்?

●

பம்பாய் நகரத்தில் ஒரு நாள் மாலை வேளை, மணி சுமார் ஏழு இருக்கும், நகரத்துத்தெருவுகளிலெல்லாம் மின்சார விளக்குகள் ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்துக்கொண்டிருந்தன. மின்சார ரயில் வண்டிகள், டிராம்கள், பஸ்கள் இவற்றிலிருந்து திரள் திரளாக காரியாலயங்களிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் வீட்டுக்கு திரும்பும் மக்கள் வந்துகொண்டிருந்தனர். இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவரை நாம் கவனிப்போம். வயது 35-க்கு மேல் 45-வரை இருக்கும். அவர் தரித்திருந்த ஆடையிலிருந்து வாழ்க்கை வசதிகள் சுமாராக அமையப்பெற்றவர் என்று தெரியவந்தது. கைகளில் நான்கு பைகளிருந்தன. அன்போடு வீட்டில் எதிர்பார்த்திருக்கும் மனைவி மக்களுக்காக வாங்கிக்கொண்டு செல்லும் பழவகைகளும் இதர சாமான்களும் கைகளிலிருந்தன. ரயிலை விட்டிறங்கி வீட்டுக்குப்போகும் வழியில் நான்கு சாலைகள் சந்திக்குமிடத்தில் இவர் வந்ததும் திடீரென்று ஸ்தம்பித்ததுபோல் நின்றார். கைகளிலிருந்த நான்கு பைகளையும் நாற்சந்தியின் மத்தியில் வைத்துவிட்டு 'சரிதான்' என்று தானே சொல்லிக்கொண்டார். பிறகு தான் வந்த வழியே திரும்பி நேரே நடந்துசென்றார்.

ஒரு நிமிஷமாயிற்று, இரண்டு நிமிஷங்களாயின, பத்து நிமிஷங்களாயின, ஒரு மணியும் சென்றது. இந்தப் பைகளின் சொந்தக்காரரைக் காணவேயில்லை. இம்மாதிரி திடீரெனத் தான் செல்லும் வேலை, தன் பெயர், தான் யார், என்பதையெல்லாம் மறந்து போய்விடுவது இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்படும் ஒருவித மறதிநோய் ஆகும். இந்த மாதிரி மறதிநோயினால் எவ்வளவோ பேர்கள் காணமற்போயிருக்கின்றனர்.

எல்லோருக்கும் சாதாரணமாய்ச் சில விஷயங்களில் மறதி

ஏற்படுவது சகஜம். ஒருவரை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பார்ப்பதாக வாக்களித்திருப்போம்; இது அறவே மறந்து போய்விடும்.

சிலர் உலாவப்போகும்போது குறிப்பிட்ட இடத்தையும் தாண்டி வெகுதூரம் நடந்து கொண்டேயிருப்பார்கள். குறிப்பிட்ட இடம் எது என்று மறந்துபோகும். வாங்கின பணம் திருப்பிக் கொடுக்க மறந்துபோவது எல்லோரும் அறிந்த விஷயம். ஆனால் இதெல்லாம் சாதாரணமானவை. அபாயம் விளைவிக்கும் அளவில் உள்ள மறதியல்ல.

அற்ப விஷயங்களில் ஏற்படும் மறதியை மறந்துபோவது என்று கூட மனோதத்துவ நிபுணர் ஒப்புக்கொள்வதில்லை. ஞாபகத்தில் வைத்துக்கொள்ள இஷ்டமில்லாத விஷயங்கள் இவை என்றுதான் சொல்கிறார்கள்.

மேல் நாட்டில் ஒரு நகரத்தில் தெருவில் அலைந்துகொண்டிருந்த ஒருவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள். அவருடைய வரலாறுகளை விசாரிக்கும்போது "என்னுடைய ஜீவியகாலம் நேற்றுக் காலையில் தான் ஆரம்பமாயிற்று. நேற்று தினத்திற்கு முன்புள்ள விஷயங்கள் எனக்கு ஒன்றுமே நினைவில்லை" என்று கூறினார். ஏதோ சில அடையாளங்கள் மூலமாக இவரை யாரென்று தெரிந்துகொண்டனர். ஆனால் இவருடைய பெயரைச் சொல்லி அழைத்ததற்கு இவர் செவி சாய்க்கவேயில்லை!

அந்தப் பெயரின் அர்த்தம் எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையென்றும் கூறினார்.

வேதாந்தத்தில் 'நான் யார்' என்று அறிந்து கொள்வது மிகவும் முக்கியமான அம்சம். தன் பெயர்கூடச் சொல்லமுடியாமற்போகும் நிலைமை மனிதனுக்கு ஏற்படுவது ஒரு பெருந் துரதிருஷ்டம்தானே!

இந்தமாதிரி மறதிநோய் வருவது மூளைக் கோளாறினால் அல்ல. ஒரு மனிதன் குடும்பத்தையோ தொழிலையோ சம்பந்தப்பட்ட மிகச் சிக்கலான பிரச்னையில் சிக்கிக்கொள்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்ன செய்வது என்று தத்தளித்துக் கொண்டிருக்கும்போது இம்மாதிரி மறதிநோய் ஏற்படுகிறது. அந்தப் பிரச்னை தீர்ந்தாகிவிட்டது. அதைத்தான் சமாளிக்க வேண்டியதில்லை என்ற தைரியம் பெறும்போது அவனுடைய மறதிநோய் நீங்கிவிடுகிறது. சிலருக்கு இம்மாதிரி தைரியம் அடைவதற்கு அநேகவருஷங்கள் பிடிக்கின்றனவாம். மறதி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிருஷ்டமிருந்தால் திடீரென்று நோய் குணமாகிவிடுகிறது.

இம்மாதிரி மறதி நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை அவர் உறவினர்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டனர். ஆஸ்பத்திரிக்குச் சென்ற மறுதினம் காலையில் நர்ஸ் இவருக்கு காப்பி அளித்தாள். காப்பி அருந்திய பின்னர் படிப்பதற்காக ஒரு பத்திரிகையைக் கொடுத்தாள். பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்ததும் "அட கடவுளே, நானல்லவா அது! என்று சத்தம் போட்டார். அவருக்கு மறதி நோய் வந்து அவரை ஆஸ்பத்திரியில் சேர்த்தவரை உள்ள தகவல்கள் அவ்வளவும் அச் செய்தியில் கண்டிருந்தது. நர்ஸைக் கூப்பிட்டு அச்செய்தியைக் காண்பித்தார்.

"இது என்னைப் பற்றித் தான் அல்லவா?" என்று அவளிடம் கேட்டார். அன்றைய தினமே வீட்டிற்கும் சென்று விட்டார்.

மறதி நோய், சரீரத்தைப் பாதிக்கும். வேறு சில உபாதைகளினாலும் வருவதுண்டு. குத்துச் சண்டைக்காரர்களுக்குத் தலையில் அடிபட்டால், இம்மாதிரி மறதிநோய் ஏற்படும். குடியினாலும் மறதிநோய் மனிதனுக்கு ஏற்படலாம்.

மறதிநோய் ஏற்பட்டு தன் பெயர், ஊர், திக்கு, திசை முதலியவை தெரியாமல் அலைந்து கொண்டிருப்பவர்கள் சிலர். சிலருக்கு இது ஏற்பட்டால் விகாரமான பயங்கர சேஷ்டைகள் செய்வார்கள். ஹாலந்து தேசத்தைச் சேர்ந்த சித்திரக்காரர் ஒருவருக்கு இம்மாதிரி மறதிநோய் வந்த சமயத்தில் தன்னுடைய ஒரு காதை கத்தியால் அறுத்துஒருகோணிப் பையில் சுற்றி ஒரு சிநேகிதியிடம் கொடுத்துவிட்டாராம்.

மறதி நோயினால் பாதிக்கப்படும் நோயாளிகள் பெரும்பாலும் வாழ்க்கையில் ஈடுபட்ட ஆண்களே. இந்த நோயினால் பாதிக்கப்படும் ஸ்திரீகளின் எண்ணிக்கையைவிட ஆண்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகமெனக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

கோடம்பாக்கம் சிவன் கோயில்

சென்னைக்கு அருகே வட பழனி யென்ற பேருடன் விளங்கும் கோடம்பாக்கம் பெரிய யாத்திரை ஸ்தலமாக வளர்ந்துவருகிறது.

பழனியாண்டவர் கோயிலுக்குச் செல்லும் பக்தர்கள் பக்கத்தில் உள்ள பெருமாள் கோயிலையும் சிறிது கவனிக்க வேண்டும்.

கோடம்பாக்கத்திற்கு செல்லும் அடியார்களில் பலர் பழனியாண்டவர் கோயிலுக்கு எதிரில் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கிற பழைமையான சிவன் கோயிலைப்பற்றி ஒன்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். தொண்டைமண்டலத்து இருபத்தி நான்கு கோட்டங்களில் ஒன்றான புலியூர்க் கோட்டத்தின் தலைநகர் புலியூர் என்ற பேரைக்கொண்ட இந்தக் கோடம்பாக்கமேயாகும். இந்த சிவன்கோயிலிலுள்ள சுவாமியின் பேர் புலியூர்த்தேவர். வடமொழியில் இந்தப் பேர் வியாக்ர புரீசுரர் என்று வழங்குகிறது.

விசாலமான பிரகாரத்தையும் சுற்று மதில்களையும் கொண்டு நல்ல நிலைமையில் விளங்கும் இந்தக் கோயில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதென்று தெரிகிறது. தெய்வீக அமைதி நிலவும் இந்த அழகிய கோயிலை அன்பர்கள் கண்டு களித்துப் பயன் அடையவேண்டும். இந்தக் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள பெரிய தெப்பக்குளம் தூர்ந்து போய்க்கொண்டிருக்கிறது.

கோடம்பாக்கம் புகை வண்டி நிலையத்திலிருந்து பழனியாண்டவர் கோயிலுக்குச் செல்லும் வழியில் சுமார் அரை மைல் தூரத்தில் பவர்ஹவுஸ் என்ற மின்சார நிலையத்திற்கு வடக்கே, ஒரு சோலையின் நடுவில், பாரத்வாஜ ஈசுவரர் கோயில் என்ற மற்றொரு பழைய சிவன்கோயில் இருக்கிறது. வடபழனிக்குச் செல்லும் அன்பர்கள் இந்த அழகிய கோயிலையுங்கண்டு களிப்பார்களாக.

—பரலி சு. நெல்லையப்பர்

தொழிலாளிகள் சாதனையின் சிகரம்

பிரிட்டிஷ் தொழிலாளிகள் ஒரு அசாதாரணமான சாதனையைச் செய்யப்போகிறார்கள். குடிசைகளில் வசித்துக்கொண்டு வாழ்க்கை வசதிகள் சரிவர இல்லாமல் காலந் தள்ளிவரும் தொழிலாளி வர்க்கத்தின் சங்கத்துக்கு 90 லக்ஷம் ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டபோகிறார்கள்.

முன்காலத்தில் அழகும் கலையும் நிறைந்த கட்டிடங்கள் கட்டப்பட்டன. சிற்பாசிரியர்களின் கற்பனையும் கைத்திறனும் காணமுடிந்தது. இக்காலத்தில் கட்டிடங்கள் எவ்வாறு பயன்படுத்துவதென்பதே முக்கியம். இப்போது கலைச் சிற்பம் அழகு முதலியவற்றிற்கு முக்கியத்துவம் அவ்வளவாகக் கிடையாது.

பிரிட்டிஷ் தொழிற் சங்கக் காங்கிரஸ் லண்டனில் சொந்தக் கட்டிடம் நிருமிக்க ஏற்பாடு செய்துவருகிறது. தொழிற்சங்க இயக்க வளர்ச்சியின் பல கட்டங்களையும், அழகும் கவர்ச்சியும் பொருந்திய கட்டிடத்தையும் அமைக்கவிரும்பும் நிர்வாகிகள் ஓர் பரிசுத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள். சிறந்த சிற்பத்திற்கு முதல் பரிசாக ஆயிரம் பவுன்கள் தரப்படும்.

பிரிட்டனிலுள்ள சிற்பிகளின் திறனைச் சிறப்புற பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன்தான் பரிசுத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. கட்டிடம் பூர்த்தியடைந்தால் லண்டனின் கண்கவர் மாளிகைகளில் ஒன்றாக இருக்கும் என்று தான் யாவரும் எதிர்பார்க்கின்றனர்.

பிரிட்டனில் தொழிலாளர் இயக்கம் சர்வ சுதந்தரமாக நடக்கிறது. இயக்கத்தின் தலைமைக் காரியாலயம் சொந்தக் கட்டிடத்திலிருக்கவேண்டுமென்று, பல தொழிற் சங்கப் பிரமுகர்கள், நீண்டகாலமாகக் கனவுகண்டது நனவாகும் காலம் வந்துவிட்டது. பிரிட்டனிலுள்ள அநேக தொழிலாளர் சங்கங்களின் நன்கொடையாலும், கடன் மூலமும் இந்தச் செலவு சமாளிக்கப்படும்.

தொழிலாளிகள் முயற்சியால் எழும்பப்போகும் இக்கட்டிடத்

தில் தொழிலாளி இயக்கத்திற்காகத் தியாகஞ்செய்தவர்களின் ஞாபகார்த்தமாக தியாகிகளின் சிலைகளை இக்கட்டிடத்தில் வைக்கப்போகிறார்கள்.

இக்கட்டிடத்தில் தொழிலாளிகள் சிரம பரிகாரஞ் செய்துகொள்ளவும் தொழில் சம்பந்தமானதும் தொழிலாளிகளுக்கு உபயோகமானதுமான ஏராளமான வசதிகளும் இருக்கும்.

மோட்டார்கள் நிறுத்த பாதாள 'காடிகானை', வாசகசாலை, 500 பேர்கள் உட்காரக்கூடிய பிரசங்கமண்டபம், தொழிற்சங்க ஊழியர் பயிற்சிக் கல்லூரி முதலியவை இந்தக் கட்டிடத்தில் இருக்கும். தொழிலாளர்களுக்கும் சங்க ஊழியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தத் திட்டமிட்டுப் பல வருஷங்களாகியும் இடவசதியில்லாததால், பல வகுப்புக்கள் நடத்த இயலாமலிருந்தது. இனி இந்தக் குறை இராது.

அநேகமாக 1956-ஆம் வருஷத் துவக்கத்தில் கட்டிடம் பூர்த்தியாகிவிடும். சென்ற இரண்டு மகாயுத்தங்களில் பங்கெடுத்துக்கொண்ட தொழிற்சங்கப் பிரமுகர்களின் நினைவுச் சின்னமும் தொழிற்சங்க வளர்ச்சிச் சின்னமும் இக்கட்டிடத்தில் இடம்பெறும்.

தொழிலாளிச் சங்கமென்றால் முதலாளிக்கு எதிராக ஒருஇயக்கம் என்று தான் இந்நாட்டுத் தொழிலாளரிடையேயுள்ள அபிப்பிராயம்.

தொழிலாளிகள் ஒன்று சேர்ந்தால் முதலாளிகளை எதிர்ப்பதற்கு மட்டுமல்ல; முதலாளிகளை எதிர்க்காமலே பல வசதிகள் பெறலாம். இம்மாதிரி வசதி பெறுவதே மேல் நாடுகளில் உள்ள தொழிற் சங்கங்களின் முக்கிய நோக்கம்.

இந்த நோக்கத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாகும், பிரிட்டிஷ் தொழிலாளர் காங்கிரஸ் அமோகப் பணச்செலவில் கட்டப்போகும் கட்டிடம்.

—*Based on a B.I.S. feature.*

தக்க காரணம்

ஒரு சிறு பையன் ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டு சாலையோரமாய் சென்றுகொண்டிருந்தான். அந்த வழியே வந்த சில சிப்பாய்கள் சிறுவனைக்கண்டு கேலியாக ஏதேதோ பேசினார்கள். சிறுவன் எதற்கும் பதில் கூறவில்லை. முடிவில் ஒரு சிப்பாய் அந்தக் கழுதையைச் சுட்டிக்காட்டி உன் 'அண்ணனை' ஏன் இவ்வளவு இறுகப் பிடித்துக்கொண்டிருக்கிறாய்' என்று கேட்டான்.

"ஓடிப்போய் உன்னைப்போல் ஒரு சிப்பாயாகாமலிருப்பதற்குத்தான்" என்று சூடு கொடுத்தான் சிறுவன்.

விலங்குகளுக்கு அபயம்

●

கோலாலம்பூருக்கு வடக்கே, பன்னிரண்டு மைல் தூரத்தில் சுமார் 3000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நந்தவனம் அமைக்க ஏற்பாடு நடந்துவருகிறது. இயற்கை யழகும் மலைச் சாரலும் அருவிகளுமுள்ள அந்த இடத்தைச் சிறந்த பொழுதுபோக்கு ஸ்தலமாக்க அமைக்கவே முயற்சி நடக்கிறது.

சாதாரணமாக தேசீயப் பூங்கா என்று கூறுமிடங்களில் காட்டுமிருகங்கள் எதேச்சையாய் நடமாடிக்கொண்டிருக்கும். மலையும் காடும் சேர்ந்த ஒரு இடத்தை தேசீயப் பூங்காவாக மாற்றுவதன் கருத்து அங்கே நடமாடும் விலங்குகளை பறவையினங்கள் இவற்றின் நலனை உத்தேசித்தேதான். புலி, கரடி, யானை முதலிய மிருகங்களை வேட்டையாடுவது சகஜம். இம்மாதிரி வெகுகாலமாய் வேட்டையாடியதன் பயனாய் சில மிருக இனங்கள் பூமியிலிருந்து அறவே மறைந்து போகும் நிலைமை ஏற்பட்டுவிடுகிறது.

இந்த நிலைமை தென்னாப்பிரிக்காவில் அநேக மிருகங்களுக்கு ஏற்பட்டது. இவ்வாறு ஏற்பட்டவுடன் அந்த தேசத்துச் சர்க்கார் குருகர் தேசீயப்பூங்கா என்று விலங்குகள் நிறைந்த சில காடுகளை மாற்றிவிட்டார்கள். இந்தப் பூங்கா அநேக ஆயிரம் சதுரமைல் விஸ்தீரணமுள்ள காடுகளும் மலைச்சாரல்களும் அருவிகளுமடங்கிய பிரதேசமாகும். இந்தப் பூங்காவிற்குள் துப்பாக்கிகளோடு போவது சட்டப்படி தடை செய்யப்பட்டிருக்கிறது. விலங்கினங்களை படம் பிடிப்பதற்கு காமிராக்கள் எடுத்துச் செல்வதற்கு மட்டும் அனுமதி கிடைக்கும். இந்தப் பூங்காவில் மோட்டார் வண்டிகள் செல்லக் கூடிய சாலைகள் ஏராளமாயுள்ளன. காடுகளிலே இயற்கையான சூழ்நிலையில் திரிந்து கொண்டிருக்கும் விலங்கினங்களை விரும்பும் அநேக ஆயிரம் ஜனங்கள் மோட்டார் வண்டிகளில் ஏறிக்கொண்டு இவ்வனாந்தர சாலைகளில் சஞ்சரிப்பது வழக்கம்.

மோட்டார் வண்டிகளையும் மனிதர்களையும் கண்டு ஆவலோடு அணுகும், இந்த விலங்கினங்கள். இந்த மனிதரைப் பற்றிச் சற்றும் விலங்குகளுக்குப்

பயம் கிடையாது. ஆனல் மனிதர்களுக்கு ஒரு தீங்கும் இழைக்காது வெகுகாலமாகத் துப்பாக்கிச் சத்தமே கேட்டிராத இந்த வனவிலங்குகள் அஞ்சாமல் மனிதர் அருகில்வந்து சில்லறை சேஷ்டைகள் புரியும். தென் ஆப்ரிக்கா சர்க்காரின் இந்த முயற்சியால் அநேக விலங்கினங்கள் பூமியிலிருந்து மறையாதிருப்பதோடு மனிதர்களுக்கும் ஒரு விநோத அனுபவத்தையளித்திருக்கிறது. நம் நாட்டிலும் இம்மாதிரிப் பூங்காவை அமைப்பதற்கு முயற்சிகள் நடந்துவருகின்றன.

அஸ்ஸாம் தேசத்திலுள்ள காண்டாமிருகம் போன்ற விலங்குகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. இவற்றையும் மற்ற விலங்கினங்களையும் பாதுகாப்பதற்காக இந்த தேசீய பூங்காவை அமைப்பதற்காகத் திட்டமிட்டிருக்கிருர்கள். திருவிதாங்கூரிலும் ஒரு தேசீயப் பூங்காவை அமைக்கும் திட்டம் அநேகமாய் நிறைவேறிவிட்டது. இந்தப் பூங்காவின் நடுவேதான் பெரியாறு நதி ஓடுகிறது. பிரயாணிகள் தங்குவதற்காக நதி நடுவே ஒரு பெரிய ஹோட்டலையும் அமைத்திருக்கிருர்கள். இந்த ஹோட்டலில் இருந்தவாறே காட்டில் சஞ்சரிக்கும் அநேக விலங்கினங்களைக் காணலாம்

இத்தகைய் தேசீயப் பூங்காக்கள் மனிதனின் ஜீவகாருண்ய சின்னமாக விளங்குவதோடு காட்டு விலங்கினங்களைப் பற்றி அநேக தகவல்களை அறிய உதவி புரிகின்றன.

துடைப்பத்தின் எச்சரிக்கை

ஒரு காரியாலயத்தில், சுத்தஞ்செய்யும் வேலையில் ஈடுபட்டிருந்த ஒரு ஸ்திரீக்கு லாட்டரியில் ஒரு பெருந்தொகை 'பிரைஸ்' விழுந்தது. இந்தத் தகவல் கிடைத்ததும் அந்த ஆபீஸ் சிப்பந்திகள் எல்லோரும் அவளைச் சூழ்ந்துகொண்டு "நீ இனிமேல் என்னசெய்யப்போகிருய் வேலையை விட்டுவிடுவாயா? மோட்டார்கார் வாங்கப்போகிருயா" என்றெல்லாம் கேட்டார்கள்.

"நான் வேலையை விடப்போவதில்லை, அதுமட்டுமல்ல; துடைப்பம் என் கையிலே இருக்குமென்று உங்களுக்கு எச்சரிக்கையும் செய்கிறேன்'' என்ருள். மற்றவர்கள் ஏன் இனி இவளைப் பண உதவியோ கேள்வியோ கேட்கப்போகிருர்கள்?

தீய எண்ணம் படைத்தவர்களிடம் சஞ்சீவியும் குற்றம் புரியும் கருவியாக மாறிவிடுகிறது.

இன்ஷ்யூரன்ஸ் கொள்ளைக்காரர்கள்

●

நம் நாட்டில் இன்ஷ்யூர் செய்வதென்பது பெரும்பாலும் மனிதர்களின் ஆயுளுக்குத்தான். மோட்டார் கார்கள், கட்டிடங்கள், இதர சொத்துக்கள், நெருப்புச் சேதங்கள் முதலானவற்றிற்கும் இன்ஷ்யூர் செய்வது நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டுவருகிறது.

மேல் நாடுகளில் பொது மக்கள் இன்ஷ்யூர் செய்வது உயிரை மட்டுமல்ல. கால், கை, அடிபட்டுக் காயம் படுதல், முடமாய்ப்போவது போன்ற விபத்துக்களுக்காகவும் இன்ஷ்யூர் செய்து கொள்வது சகஜம்.

தொழிற்சாலைகளில் வேலை செய்வோர்களுக்கு தொழிற்சாலை இயந்திரங்களால் நேரிடும் அசௌகரியங்களுக்கும் விபத்துகளுக்கும் இன்ஷ்யூர் செய்வது வழக்கம்.

அநேகமாக எல்லோரும் மோட்டார்கார்கள் மூலம் நேரிடும் விபத்துக்களுக்கு இன்ஷ்யூர் செய்வது வழக்கம்.

இன்ஷ்யூரன்ஸ் என்பது மனிதனுக்கு ஆபத்துக்கள் நேரிடும் தருணத்தில் தக்க உதவியளிக்க ஒரு ஏற்பாடு. குற்றவாளிகளிடம் இந்த சிறந்த ஏற்பாடு குற்றம் புரிவதற்கு ஒரு கருவியாக மாறிவிடுகிறது.

குழந்தைகளைக்கூட ஒரு வியாபாரப் பொருளாக உபயோகிக்கும் மேல்நாடுகளில்

இது ஒரு அதிசயமல்ல. மோட்டார் விபத்துகளுக்காக இன்ஷ்யூர் செய்தவுடன் ஒரு மோட்டார்மூலம் விபத்து நேரிட்டதென்று கூறிக்கொண்டு இன்ஷயூரன்ஸ் கம்பெனிகளிலிருந்து பணம் பெறுவது மேல் நாடுகளில் சகஜமாகிவிட்டது. சிலசமயங்களில் மேற்கூறிய தீய எண்ணம் படைத்தவர்கள் இருவரோ அல்லது மூவரோ சேர்ந்து அவர்களில் ஒருவரையோ அல்லது வேறொரு நண்பரையோ மோட்டார் விபத்துக்காளானதாக இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு விண்ணப்பிக்கச் சொல்வார்கள். இந்த விபத்து நேரிட்டதன் உண்மை, விபத்தின் விவரங்கள் முதலியவை இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு ஒரு டாக்டர் மூலமாய்த்தான் சமர்ப்பிக்கவேண்டும். இதற்காக இந்த கோஷ்டியார் ஒரு டாக்டரையும் தங்களுடன் சேர்த்துக் கொள்வார்கள். விண்ணப்பித்தபடி பணம் கொடுக்காவிடில் கோர்ட்டில் வழக்காடி பணத்தை வசூல் செய்துவிடுவோம் என்று இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியைப் பயமுறுத்த ஒரு வக்கீலையும் இவர்களுடன் சேர்த்துக்கொள்வார்கள். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிமூலம் கிடைக்கும் பணத்தை இந்தக் குற்றவாளிகள் டாக்டர், வக்கீல் எல்லோருமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

சமீபத்தில் அமெரிக்காவில் *13* கொற்றர்கள்சேர்ந்த ஒரு கோஷ்டி மேற்கூறிய குற்றங்களில் ஈடுபட்டிருந்தனர். ஏழு வருஷங்களில் இவர்கள் இவ்வாறு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை மோசஞ்செய்து அநேக லக்ஷ ரூபாய்கள் திரட்டியுள்ளனர். இவர்கள் கையாண்ட உபாயங்கள் வருமாறு:—

கொதிக்கும் தண்ணீரில் நனைத்த துண்டுகளால் தேகத்தில் சில இடங்களில் நன்ருக அழுத்தித் துடைத்துக் கொள்வார்கள். பிறகு அந்த இடங்களில் கல்லால் தேய்த்துக்கொண்டு இரத்தத்தை வரவழைப்பார்கள். இம்மாதிரி இவர்கள் தங்கள் முதுகின் கீழ்ப்பாகத்தில் செய்துகொள்வது வழக்கம். பற்களின் ஈறுகளை நன்ருக கடித்து அவற்றிலிருந்து ரத்தம் சிந்தச் செய்வார்கள். பிறகு துணி வெளுக்கும் ஸோப்புத்துண்டை விழுங்கி விடுவார்கள். (ஸோப்பை விழுங்கினல் வாந்தியும்ஜுர

மும்வரும்). இம்மாதிரியெல்லாஞ் செய்வதன் கருத்து, மோட்டார் விபத்துக்காளானதாகவும் அதனல் தேகத்தில் காயம் பட்டதாகவும் ஜுரம் வந்ததாகவும் ஒரு தோற்றமளிப்பதுதான். ஒரு பழைய மோட்டார்காரை வேண்டுமென்றே அதை ஒரு மரத்தின்மீது மோதிவிட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு விண்ணப்பஞ் சமர்ப்பித்தால் பணம் தானுக வந்துசேருகிறது!

இவ்வாறு அடிக்கடி விண்ணப்பங்கள் வந்ததனல் சந்தேகமடைந்த சில இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் இரகசியமாய் இந்த மோட்டார் 'விபத்துக்களை'ப் பற்றி விசாரணைகள் செய்தனர். உண்மை புலப்பட்டதும் சர்க்கார் மேற்கூறிய கொற்றர்கள் கோஷ்டியைக் கைது செய்து பதினைந்து வருஷங்களிலிருந்து பதினெட்டு வருஷங்கள் வரைச் சிறைத் தண்டனையளித்தனர்.

இவ்வாறு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை மோசடி செய்யும் துறையில் தனியாக ஈடுபட்ட ஒரு அமெரிக்கர் 15 வருஷங்களில் 40 லக்ஷம் ரூபாய்கள் சம்பாதித்தாராம். முடிவில் இவருக்கும் எட்டு வருஷ சிறைவாசம் கிடைத்தது.

குற்றவாளிகளாயிருந்த போதிலும் அதிநிபுணர்களான சிலரும் இத்துறையில் ஈடுபடுகின்றனர்.

ஒரு நாள் ஒரு ஆஸ்பத்திரிக்கு கழுத்திலுள்ள எலும்புகள் பிசகிப்போனதைக் குணப்படுத்திகொள்வதற்கு ஒரு மனிதர் வந்து சேர்ந்தார். ஆஸ்பத்திரியிலிருந்துகொண்டே இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு டெலிபோனில் தகவல்கொடுத்து நாற்பதினுயிரம் ரூபாய்நஷ்டஈடாகக்கேட்டார். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி உடனே ஒரு டாக்டரைத் தங்கள் பிரதிநிதியாக அனுப்பிவைத்தனர்.

அந்த டாக்டரும் இவரை சோதனைசெய்து இவருக்கு உண்மையில் கழுத்தில் எலும்புகள் பிசகிக்கொண்டுள்ளனவென்பதை ஒப்புக்கொண்டார். ஆனல் நஷ்டஈடாக நாற்பதினுயிரம் ரூபாய்க்குப் பதிலாக இருபதினுயிரம் ரூபாய்தான் கொடுக்கமுடியுமென்று தீர்ப்புச்செய்தார்.

கழுத்து பாதிக்கப்பட்ட அமெரிக்கர் சரியென்று இந்தத் தீர்ப்பை ஒப்புக்கொண்டார். அடுத்த தினம் காலை

யில் ஆஸ்பத்திரி அதிகாரிகள் இவருடைய கழுத்திலுள்ள பிசகைக் குணப்படுத்த நீண்ட நாட்கள் சிகிச்சை முறைகளை இவரிடம் கூறிக்கொண்டிருக்கும்போது இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி பிரதிநிதி இவரிடம் பணத்தைக் கொண்டுவந்து சேர்த்தார்.

பணத்தை வாங்கி இவர் தன் பையில் போட்டதும் ஆஸ்பத்திரி டாக்டர்களும், நர்ஸ்களும் அதுவரை காணாத ஒரு அதிசயத்தைக் கண்டனர். கழுத்தில் பிசகிப் போயிருந்த எலும்புகளை ஒரே வினாடியில் சரியான ஸ்தானத்திற்கு இந்த அமெரிக்கர் மாற்றிக் கொண்டு ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே சென்றுவிட்டார்!

இந்த நபர் நினைத்த வினாடியில் தாடை, கழுத்து, தோள், இடுப்பு, மணிக்கட்டை, கைவிரல்கள், கால் விரல்கள், முழங்கால்கள், கணுக்கால்கள், இம்மாதிரி சரீரத்தில் எங்கெங்கே எலும்புகளிருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் பிசகச்செய்து விபத்து நேரிட்டதுபோன்ற தோற்றமளித்து இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிடமிருந்து பதினைந்து வருஷங்களாகநஷ்டஈடு பெற்றுவந்தாராம். இவ்வளவு நிபுணத்துவம்பெற்ற மனிதர் பணம் சம்பாதிப்பதற்காக இம்மாதிரி மோசடி வேலைகளில் ஈடுபட்டிருந்ததற்குக் காரணம் இவர் ஆறறிவு இனத்தைச்சேர்ந்த மனிதர் என்றல்லாமல் வேறென்ன கூறமுடியும்?

ஒருவரின் ஆயுளை இன்ஷ்யூர் செய்து அவருக்கு விஷம் கொடுத்தோ அல்லது வேறு ஏதாவது வழிகளில் கொன்றோ இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிடமிருந்து பணம் பெறுவது மேல்நாட்டில் சகஜமாகும். கணவன் ஆயுள்மீது உள்ள இன்ஷ்யூரனஸ் பணத்தைப் பெறுவதற்காக எவ்வளவோ ஸ்திரீகள் தங்கள் கணவர்களைக் கொன்றிருக்கின்றனர்.

இவ்வாறே மணமாகாத ஸ்திரீகளின் ஆயுள்மீது இன்ஷ்யூரன்ஸ் இருந்தால் அவர்களைமணந்துகொண்டு பிறகு கொன்றுவிட்டு, அவர்களது இன்ஷ்யூர் பணத்தை அடித்துக் கொண்டுபோகும் குற்றவாளிகள் எவ்வளவோ பேரிருக்கிறார்கள்.

[ஒரு சிறுவர் கதை]

உயர்ந்த பொருள்

●

முத்துசாமியும் நல்லசாமியும் சகோதரர்கள். அவர்களின் தந்தை சொத்துக்களை இரு பாகங்களாக்கி மைந்தர்களுக்கு வழங்கி விட்டு இறந்தார். அண்ணனும் தம்பியும் ஒரே ஊரில் தனித்தனி யாக வியாபாரம் செய்தார்கள்.

அண்ணன் முத்துசாமி துர்க்குணங்களின் உறைவிடம், பிறர் வாழச் சகியாதவன். பேராசைப் பேய் அவனை இறுகப் பற்றிக் கொண்டிருந்தது: தனது கஞ்ச குணத்தால் தந்தை அளித்த செல் வத்தைப் பெருக்கிக்கொண்டான்.

ஆனால் தம்பி நல்லசாமியோ பெயருக்கேற்ப குணமுடைய வன். பிறர் துன்பத்தினைக்கண்டு இரங்கி உதவிபுரிவான். இப்படிப் பட்டவனிடம், எவ்வளவு பணமிருந்தாலும் எப்படிக் குறையாமல் இருக்கும்? நாளடைவில் நல்லசாமியிடம் வறுமைப்பேய் குடி கொண்டுவிட்டது. அண்ணனிடம் சென்று உதவி கேட்டான். அவனா உதவி செய்வான்?

பாவம்! ஒரு காலத்தில் பொன்னையும் மணியையும் கொட்டி யளந்து வியாபாரம் செய்த நல்லசாமி, வறுமை காரணமாக விறகு வெட்டியாக மாறிவிட்டான். அந்நிலையிலும் கூட தான தருமங் களைக் கைவிடாது தனது தகுதிக்கேற்பச் செய்து வரலானான்.

ஒரு நாள், ஒரு சந்நியாசி பசியால் காதடைக்க ஒரு வாய் அன் னம் கேட்டபடி அண்ணன் முத்துசாமியின் வீட்டை நெருங்கினார். முத்துசாமி, அவரை ஏளனமாகப் பேசி, அடித்துத் துரத்தினான். பாவம், அந்த சந்நியாசி, தள்ளாடியபடி நல்லசாமியின் வீட்டை அணுகிப் பிச்சை கேட்டார். நல்லசாமி அவரை உபசரித்து வயிறு நிரம்பக் கஞ்சியை ஊற்றினான்-

அவனது செய்கையால் மனங்குளிர்ந்த சந்நியாசி, மறுநாள் காலையில் போகும்போது ஒரு பெரிய கற்கண்டுக் கட்டியை அளித்து, "நாளைக்கு நீ காட்டுக்கு விறகு வெட்டப் போகும்போது இதையும் எடுத்துச் செல்" என்று கூறிச் சென்றார்.

மறுநாள் அவர் கூறியபடியே கற்கண்டுடன் காட்டை யடைந்த நல்லசாமி, விறகு வெட்ட நல்ல மரத்தைத் தேடிக் கொண்டு காட்டினுள் வெகு தூரம் சென்றுவிட்டான். வழி தவறி விட்டது. மாலைவரை அலைந்து, களைத்த அவன் ஒரு மரத்தடியில் விழுந்துவிட்டான்.

தற்செயலாக அங்கு வந்த மலை ஜனங்கள், அவனுக்கு பாலை அளித்து களைப்பைப் போக்கினார்கள். அவர்களுடைய செயலுக் காக மனமகிழ்ச்சிகொண்ட நல்லசாமி தன்னிடமிருந்த கற்கண்டுக் கட்டியை அவர்களுக்கு அளித்தான். அதைச் சிறிது உண்ட அவர் கள் அதிசயமடைந்து, அவனைத் தங்கள் அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். ஏனெனில் அந்த அநாகரிக மக்கள் அதுவரை இனிப்பின் ருசியையோ கற்கண்டையோ அறிந்ததில்லை. அரசன் கற்கண்டை வாங்கி ருசி பார்த்தான். ஆனந்தம் கொண்டு, அவர்களுக்கு இந்த அபூர்வப் பொருளை அளித்ததற்காக தங்கக் கட்டிகளையும் வெள்ளிக் கட்டிகளையும் அளித்து யானைமேல் ஏற்றி வழியனுப்பினான்.

திரண்ட செல்வத்துடன் வீடு திரும்பிய நல்லசாமியை பொறு மையும் பேராசையும் பொங்கும் கண்களுடன் பார்த்தான் அண் ணன் முத்துசாமி.

உடனே தம்பியிடம் வந்து விஷயத்தைக் கேட்டான். நல்ல சாமி, உண்மையை ஒளிக்காமல் எல்லாவற்றையும் கூறினான். பேராசை கொண்ட முத்துசாமி, அதேபோல அவனைவிடச் செல்வம் பெற இச்சை கொண்டான்.

மறுநாளே தனது திரண்ட செல்வத்தையெல்லாம் சர்க்கரை யாகவும், வெல்லமாகவும், கற்கண்டாகவும், ஜிலேபியாகவும் மாற்றிக்கொண்டான். எல்லாவற்றையும் கழுதைகள்மேல் ஏற்றிக் கொண்டு காட்டை நோக்கி ஓட்டினான்.

நடுக்காட்டை அடைந்தவுடனே திடீரென்று அடை மழை பிடித்துக் கொண்டுவிட்டது. ஜிலேபியைத் தவிர மற்ற எல்லாம் மழையில் நனைந்து கரைந்துவிட்டன. கழுதைகள் பக்கத்திற் கொன்றாகப் பிய்த்துக்கொண்டு ஓடிவிட்டன.

பாவம்! பேராசை பிடித்த முத்துசாமி எப்படியோ ஜிலேபி மூட்டையுடன் மலைஜாதியரின் அரசனை அடைந்தான். ஜிலேபி மூட்டையைத் திறந்து ஜிலேபிகளை எடுத்து அரசனிடம் அளித்தான். அதை ருசி பார்த்த அரசன் வியப்பினால் ஸ்தம்பித்து விட்டான். முத்துசாமியை நோக்கி, அரசன் "ஐயா, இந்தப் பொருள்களையெல்லாம் எமக்களித்து விடுங்கள், உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள், அளிக்கிறேன்" என்றான்.

பேராசைகொண்ட முத்துசாமி "ஐயா, உங்களுக்கு எது மிக மிக உயர்ந்த பொருளோ, அதைமட்டும் கொடுங்கள்" என்று கேட்டான். அரசன் யோசித்தான் பிறகு, "ஐயா இதுதான் எனக்கு மட்டுமல்ல; எங்கள் ஜாதியார்களுக்கே உயர்ந்த பொருள். நேற்றுதான் ஒருவர் தந்தார். எனக்கு அதை அளிக்க விருப்பமில்லை என்றாலும், உமக்கு வாக்குக் கொடுத்துவிட்டேனே—அதற்காகக் கொடுக்கிறேன்" என்றுகூறிக் கொண்டே ஒரு பொருளை முத்துசாமியிடம் அளித்தார்.

ஆம்! அது முந்திய தினம் நல்லசாமி அளித்தானே...அதே கற்கண்டுக்கட்டிதான் !

முத்துசாமி திகைத்தபடி அதை வாங்கிக்கொண்டு மௌனமாகத் திரும்பினான். ஏனெனில் அதிகம் பேசினால் எங்கே அவர்கள் அடித்துவிடுவார்களோ என்ற அச்சமே. பேராசை பெரு நஷ்டம் என்பதை உணர்ந்து கொண்டு அன்று முதல் முத்துசாமி திருந்தி விட்டான்.

—ரேவதி



பாலே இல்லாமல் வெண்ணெய்

"வெண்ணெய் காய்ச்சின நெய்'' என்ற ஒரு பொருள் சென்னை நகரவாசிகளுக்கு மிகவும் சகஜமானது. வெண்ணெய்க் காய்ச்சாமலும் ஒரு நெய் உண்டா என்ற ஒரு குதர்க்கக் கேள்விக்கு இங்கு இடமுண்டு.

சென்னையிலுள்ள நெய் வெண்ணெயிலிருந்தோ அல்லது வெண்ணெயிலில்லாமலோ எவ்வாறு கிடைத்தாலும் சரி, மேல் நாடுகளில் பாலே இல்லாமல் ஒருவித வெண்ணெயைத் தயாரிக்கின்றனர். அசல் வெண்ணெயைவிட இது மிகவும் மலிவானதால் ஏழை மக்களுக்கு இதை தாராளமாய் உபயோகிப்பதற்குச் சாத்தியமாகிறது.

முதன் முதலாகப் பிரான்சு தேசத்து அரசர் மூன்ருவது நெப்போலியன் மூலம்தான் இந்த செயற்கை வெண்ணெய் தோன்றியது. 1852 - இல் இந்த அரசர் வெண்ணெயைவிட விலையில் மலிவானதும் அவ்வளவு சீக்கிரம் கெடாமலிருப்பதுமான செயற்கை வெண்ணெயை தயாரிப்பவர்களுக்கு ஒரு பரிசு வழங்கிஞர். இந்த செயற்கை வெண்ணெயைத் தயாரித்தவருக்கு அந்தப் பரிசு கிடைத்தது. இப்பரிசுபெற்றவர் கண்டுபிடித்த ஒருபுது விஷயம் என்னவென்ருல் பாலின் தரத்திற்கும் வெண்ணெய்க்கும் சம்பந்தமில்லை என்பதாகும். இதற்கு அத்தாட்சியாக அவர் கூறியதாவது: ஆகாரங்களை நிறைய சாப்பிடும் பசுவின் பாலிலிருந்தும் வெண்ணெய் கிடைக்கிறது. ஆகாரம் சரிவர இல்லாமல் அரைப் பட்டினியால் வாடும் பசுவின் பாலிலிருந்தும் வெண்ணெய் கிடைக்கிறது. அதனல் வெண்ணெய் என்ற பொருளின் மூலம் பசுவின் சரீர சத்துதான். வெண்ணெய் பாலின் தரத்தை பொறுத்தது அல்ல.

இதை நிரூபிப்பதற்கு இவர் அநேக பரீக்ஷைகள் செய்தார். இந்தப் பரீக்ஷைகளில் இவர் உபயோகித்த பொருள்கள்,

பன்றி மாமிசம், ஆட்டு மாமிசம், இதர ரஸாயனப் பொருள்கள் முதலியவை. மாமிசங்களை உபயோகித்துத் தயாரித்தனல் இதன் உற்பத்தியைப் பெருக்க முடியாதென்று இவ்வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இதற்காக வேறு பொருள்களை உபயோகப்படுத்துவது பற்றியும் ஆராய்ச்சி நடந்து கொண்டிருந்தது. இந்த ஆராய்ச்சிமூலம் தேங்காய் எண்ணெய், கடலெண்ணெய் முதலிய எண்ணெய் வகைகளிலிருந்தும் செயற்கை வெண்ணெய் தயாரிக்கலாமென்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பால் பண்ணைகள் ஏராளமாக இருக்கும் தேசங்களில் இந்த செயற்கை வெண்ணெய்க்கு மிகவும் எதிர்ப்பு இருந்தது. செயற்கை வெண்ணெய் தயாரிக்கக்கூடாதென்று சில தேசங்களில் சர்க்காரின் கட்டுப்பாடும் இருந்தது. ஆனல் காலப்போக்கில் இவையெல்லாம் மறைந்து செயற்கை வெண்ணெய்க்கு கிராக்கியும் விற்பனையும் அதிகரித்தன.

செயற்கை வெண்ணெய்க்கு புஷ்டியளிக்கும் சக்தி மிகவும் குறைவென்று குறைகூறிக் கொண்டிருந்தார்கள். இதைத் தீர்ப்பதற்காக வைட்டமின் சத்துக்களைச் சேர்த்துச் செயற்கை வெண்ணெயைத் தயாரிக்க ஆரம்பித்தனர். பிரிட்டனில் இப்போது செயற்கை வெண்ணெய் ஏராளமாய் விற்பனையாகிறது. செயற்கை வெண்ணெய் தயாரிக்கும் வழிகள் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கின்றன.

எண்ணெயை இயந்திரக் கருவிகளில் ஊற்றுவதிலிருந்து வெண்ணெயாக மாறி காகிதத்தில் மடித்து கடைகளுக்கு விற்பனைக்குச் செல்ல தகுதியாகும் வரை யாவும் இயந்திரங்கள் செய்து முடிக்கின்றன. ஒரு மணி நேரத்தில் 4500 பவுண்டு செயற்கை வெண்ணெய் தயாரிக்க தகுதியான இயந்திரங்கள் உள்ளன.

அசல் வெண்ணெய்க்கும் செயற்கை வெண்ணெய்க்கும் புஷ்டியளிக்கும் சக்தியில் வித்தியாசமில்லை என்ற நிலைமை இப்போது வந்துவிட்டது. ருசியில் மட்டுமுள்ள வித்தியாசத்தையும் நீக்கிவிடலாமென்று செயற்கை வெண்ணெய் தயாரிப்பாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த செயற்கை வெண்ணெயின் பெயர் மார்கரைன் [Margarine]

———

தீய்க்கும் திங்கள்

○

அவள் அன்று மாலைதான் அவனைச் சந்தித்தாள்.

அப்போது அவள் சோலையில் உலாவிக்கொண்டிருந்தாள். தோழியும் கூடத்தான் இருந்தாள்.

அவனும் தன் தோழனோடு அச் சோலையில் உலாவவே வந்தான்.

அவள் வடிவம் அவன் கண் வழியாக உள்புகுந்து உள்ளத்தில் குடியேறிவிட்டது. அவன் உருவமும் அவள் நெஞ்சத்தில் நுழைந்து பற்றிக்கொண்டுவிட்டது.

அவனும் அவளும் ஒருவரோடொருவர் பேசியதில்லை. அவன் யார் என்பதையோ எந்த ஊர் என்பதையோ அவளறியாள். அவனுக்கும் தான் அது தெரியாது. பின் இந்த மனநெகிழ்ச்சி எப்படி ஏற்பட்டது ?

"தன் மனம் அத்தனை வலிவற்றது" என்று அவளுக்கே தெரியாது. ஒருபுறம் வியப்பும், மறுபுறம் அச்சமும் அவளைக் கவ்வின. நாணத்தினால் சிவந்த அவள் முகம், உள் நிறைந்த மகிழ்ச்சியினால் மேலும் சிவந்தது.

அவன் போய்விட்டான். ஆனால், அவன் உருவம் அவள் உள்ளக் கண்ணுக்கு மறையவில்லை. என்றாலும் புறக் கண்ணில் அவன் தோன்றவில்லை என்ற உண்மையும் அவளுக்குத் தெரியாமலில்லை. அவன் பிரிவு அவளைச் சுட்டது. "கண்வழிப் புகுந்த காதல் நோய்" அல்லவா அது ?

★

தலைவியின் முகத்தில், நடத்தையில் கண்ட இந்தத் திடீர் மாற்றம் தோழிக்குத் திகைப்பையே உண்டாக்கிற்று. அவனை

இவளும்தான் கண்டாள். ஆனால் தலைவியினுடைய உள்ளத்தில் அவன் புகுந்துவிட்டது அவள் காணவில்லையல்லவா ?

சோலைக்கு வரும்வரையில் ஏன் - சோலையில் கூடத்தான்— அவள் மான்போலத் துள்ளி ஆடினளே! திடீரென்று அவளை எந்தப் புலிவந்து மருட்டிவிட்டது ? அவளுடைய அகன்ற பெரிய கண்களில் மருட்சி விளையாடுவதேன் ? அவள் பெருமூச்சு விடுவதேன் ? முகத்தில் சோர்வு தோன்றுவதேன்?

தோழிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால், சிறு வயதுமுதல் உடன் விளையாடியவளல்லவா ? தலைவியை வருத்தும் காரணத்தை அறிய உரிமையுடன் அவளை நெருங்கினள்.

தன்னைத் தோழி அணுகுவதன் காரணத்தைத் தலைவியும் உணர்ந்துகொண்டாள். இதுவரை அவர்களிருவருக்கும் ரகசியமே இருந்ததில்லைதான். ஆனால், இந்த விஷயமும் அப்படியா? சொல்லவேண்டுமென்றாலுங்கூட எப்படிச் சொல்லுவது ? அவனை அவள் கண்டாள்; காதல் கொண்டாள். உண்மைதான். ஆனால், அவன் யார் ? எத்தகையவன் ? எவ்வூர் ? யாருற்றார் ? ஒன்றையுமே அறியாத அந்நிலையில் தோழியிடம் என்னவென்று கூறுவது ? சொன்னால் பரிகாசத்துக்குத்தான் இடம்.

என்றாலும் மௌனமாகவும் இருந்துவிடமுடியாதே. தோழி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலிருக்க இயலுமா ? தொளைத்துவிடமாட்டாளா ? பின் என்னவென்று சொல்வது ? அவர் யார் ?''

★

தோழி நெருங்க நெருங்க தலைவியின் எண்ணங்களும் அவனைப் பற்றியே சுற்றிச் சுழன்றன. அவனைப் பற்றி எண்ணும் போதே அவள் மகிழ்ச்சி பொங்கிற்று. அவனை மனக் கண்ணால் காணும்போதே அவள் நாணம் அதிகரித்தது. அதே சமயத்தில் 'அவனைப் பிரிந்திருக்கிறோம்' என்ற வேதனையும் வருத்திற்று.

தன் மெய்ப்பாட்டைத் தோழி கண்டுகொள்ளக் கூடாதே என்று எங்கேயோ பார்ப்பதுபோலத் தன் முகத்தை திருப்பி, பார்வையை ஓட்டினள்.

அவள் பார்வை கீழ் அடிவானத்தை தொட்டது. பூரண சந்திரன் அப்போதுதான் மேலெழுந்துகொண்டிருந்தான்.

எத்தனையோ முறை அவள் பூர்ண சந்திரனை இதற்கு முன் பார்த்திருக்கிறாள். ஆனால், இவ்வளவு சிவந்து அவன் எப்போதுமே இருந்ததில்லை. நெருப்புக் கோளம் போலல்லவா காண்கிறான். வெள்ளி நிலாவிற்கு இந்தச் செந்தீ வர்ணம் எங்ஙனம் வந்தது !

ஒரு வேளை சந்திரனும் யாரையாவது கண்டு, காதல் கொண்டு, அவளைப்போல உள்ளம் வெந்துபோனானோ ?

ஆமாம். அப்படித்தான் இருக்கவேண்டும். அவளுடைய இதயத்தில் மூண்ட மோகத் தீ அவளுடைய உடலைத் தகிக்கிறது. ஆனால், உலகம் பார்க்கும் இந்தச் சந்திரனுடைய காதல் தீ.........?

"யாரைச் சுடுமோ ?" என்று உரத்துச் சொல்லியபடித் திரும்பினாள் அவள். வினைக்குறித் தோன்ற நிற்கும் தோழியைக் கண்டாள். நிலவின் நிலையைக் கூறுகையிலேயே குறிப்பாகத் தன் நிலையையும் தோழிக்கு அறிவித்துவிடலாமே என்று தோன்றிற்று அவளுக்கு.

தோழியிடம் சொல்லத் தொடங்கினாள் :

"பார், தோழி. இந்த நிலாவைப் பார். நெருப்பு வட்டம் போலல்லவா இருக்கிறது.

இந்த
நெருப்பு வட்டமான
நிலா

பார்த்துவிட்டாயா ? இந்த நெருப்பு வட்டத்திலிருந்து பிறக்கும் தீ,

ஊரைச் சுடுமோ ?
உலகந்தனைச் சுடுமோ ?
ஆரைச் சுடுமோ ?"

"யாரைச் சுடும் ?" என்ற கேள்வியுடன் தலைவி சிந்தனையில் ஆழ்ந்துவிட்டாள்.

தோழிக்கு ஒன்றும் புரியவில்லை. நிலாவாவது, சுடுவதாவது ? அதுவும் ஊரையும் உலகத்தையும் சுட்டுவிடுமாம். அசல் நெருப்பான சூரியனே சுடாத உலகத்தைக் குளிர் நிலா சுடுவதாம்.

தலைவியின் பேச்சை நினைக்க நினைக்கத் தோழிக்குச் சிரிப்புத் தான் வந்தது.

தலைவியின் சிந்தனையும் நிலாவிலிருந்து தலைவனைச் சுற்றிச் சுழலத் தொடங்கிவிட்டது. அவன் யார்? யார்? யார்?

எண்ண எண்ணத் தலைவியின் தலை சுற்றிற்று. பிரிவாற்றாமை வேதனை தந்தது.

"அறியேனே"

என்று பெருமூச்செறிந்தபடி உரத்துச் சொல்லிக் கொண்டாள்.

தோழியின் காதிலும் இது விழுந்தது. ஆனால், அவள் நிலாவைப் பற்றித்தான் தலைவி குறிப்பிடுவதாக எண்ணிச் சிரித்தாள்.

தோழியின் அறியாமையை அவள் உணர்ந்து கொண்டாள். எரிச்சல் வந்தது அவளுக்கு. "ஏனடி? நீயும் என்னைப்போலப் பருவம் அடைந்த பெண்தானே இன்னுமா உனக்கு என்னுடைய தவிப்பு புரிந்துகொள்ள முடியவில்லை?" என்று சீறவேண்டும் போலிருந்தது. ஆனால், இப்படிச் சொன்னால், அவளுடைய குட்டுமல்லவா வெளிப்பட்டுவிடும்? ஆகவே குறிப்பாக உணர்த்தினாள்.

பொருப்பு வட்டமான
முலைப்பூவை யரே

இந்தக் குறிப்பு தோழிக்குத் தலைவியின் கள்ளத்தை வெட்ட வெளிச்சமாக்கிவிட்டது. அவள் அர்த்தபுஷ்டியுடன் தலையை அசைத்தாள்.

தன் உள்ளத்தைத் தோழி உணர்ந்து கொண்டாள் என்பதைத் தெரிந்துகொண்ட தலைவியும் நாணித் தலைகுனிந்தாள்.

★

பௌர்ணமியன்று பூர்ண சந்திரன் செங்கோளமாக உதிப்பதை நாம் எல்லோரும் அறிவோம்; பார்த்துமிருக்கிறோம். அக் காட்சி நம் உள்ளத்தில் எதையும் விளைவித்ததில்லை. வான சாஸ்திரிகள், ஆங்கிலம் கற்றவர்கள் எண்ணத்திலோ சூரியனின் பிரதி பிம்பம்தான் இச் சந்திரன் என்ற உணர்ச்சியற்ற கருத்தே தோன்

றும். ஆனால், இக் காட்சி பலபட்டைச் சொக்கநாத புலவரின் கண்ணிலே பட்டு, கருத்திலே தோய்ந்தபோது, அவரது புலமை அற்புதமான சொல்லோவியத்தை சிருஷ்டித்து விட்டது. சந்திரனை சூரியனது பிரதிபிம்பமாக நாம் இங்கு காணவில்லை. தலைவியின் இதயத்தினுடைய பிரதிபிம்பமாகவே காட்டிவிட்டார் புலவர்.

இப்போது முழுப்பாட்டையும் ஒரு முறை படிப்போம்.

ஊரைச் சுடுமோ ?
உலகந்தனைச் சுடுமோ ?
ஆரைச் சுடுமோ ?
அறியேனே !—நேரே
பொருப்பு வட்டமான
முலைப்பூவை யரே ; இந்த
நெருப்பு வட்டமான
நிலா !

காதல் கண்கள் சந்திரனைக் காணும்போது தோன்றும் விரக வேதனையை அற்புத ரசத்தோடு குழைத்து ஊட்டுகிறதன்றோ இப்பாடல் ?

—க. சோமசுந்தரம்

லண்டன் தமிழன்

பராங்குசம்

தமிழன் என்ற சொல்லிற்கு அரசியல் அர்த்தம் முளைத்து விட்டது. ஆகையால் காரசாரமான அபிப்பிராயங்களும், உற்சாகங்களும் இல்லாத என் போன்ற மிதவாதப் பிராணிகளுக்கு தமிழன் என்று சொல்லிக்கொள்ள பயமாக இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியாவைவிட்டு வெளியேறி இங்கிலாந்தில் இரண்டு வருஷங்கள் லண்டன் தமிழனாக வாழ்வது ஆத்மீகத் தற்கொலை செய்துகொள்ளாமல் தப்ப ஒரு சிறந்த வழி.

லண்டன் தமிழனுக்கு தன் குலத்தில் அந்தரங்கப் பெருமை; ஆனால் அந்த பிறப்புப் பிரிவினையை சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள இடமில்லை; அந்தப் பிதிரார்ஜிதத்தை பாகம் பிரித்துக் கொள்ள முயன்று வழக்குத் தொடுத்து, வீட்டுக்குப்பையை தெருவில் கொட்டி மானம் இழக்கவும் இடமில்லை; அந்தச் சாதாரண உண்மையை ஏதோ ஒரு அபூர்வ, அபார மேதையாகக் கற்பனை செய்துகொண்டு, தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டும், பிறரை ஏமாற்ற முயன்றுகொண்டும், தன் அறிவின் பலவீனத்தை வெளியிடவும் இடமில்லை. இம்மாதிரி வெளிநாட்டு சூழ்நிலையில் தனது இயற்கைப் பண்பிலிருந்தும், வாழ்க்கை முறையிலிருந்தும் பிரிந்து வாழ்வது ஒருவிதம். பார்க்கப் போனால் சூன்யத்தில் மூச்சுவிட முயலுவதுபோல் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்னொரு விதம் நோக்கினால் காற்று மாற்றத்தால் நோயாளிக்குப் பெரும் ஆரோக்யம் கிடைக்கவும் இடமுண்டு. லண்டன் தமிழன் ஒரு நாடிழந்த அனாதை அல்ல; அதிர்ஷ்டவசத்தால் உதகமண்டலம் சென்று கோடையின் வெப்பத்தைத் தப்ப வாய்ப்புக் கிடைத்த பாக்யசாலி.

லண்டனில் பலவிதத் தமிழர் உண்டு. நான் குறிப்பிடுவது திராவிடத் தமிழர், அக்ரகாரத் தமிழர், கைத்தறித் தமிழர், சுத்தத்

தமிழர், இங்கிலீஷ் தமிழர், பாட்டாளித் தமிழர், முதலாளித் தமிழர், தஞ்சாவூர் தமிழர், திருநெல்வேலி தமிழர் என்ற விசித்திரப்பாகுபாடல்ல. லண்டனுக்குப் பலர் பல்வேறு ஜோலியாக வருகின்றனர். அவ்விதம் லண்டன் தமிழரிலும் பலவிதம் உண்டு. பெரும்பான்மையோர் மாணவர்; சிலர் லண்டனில் வேலை செய்ய வந்துள்ளவர்; வேறு சிலர் மாற்றலாகி வந்துள்ளவர்; ஒரு சிலர் லண்டனில் சாஸ்வதமாகக் குடியேறியுள்ளவர். இது தவிர அவ்வப் போது வந்துபோகும் தமிழரும், வேறெங்கோ போகும் வழியில் லண்டன் வரும் தமிழரும் உண்டு. இவர்கள் யாவருக்கும் பொது வான ஒரு லட்சணம் உண்டு. அதுதான் ஒரு குடும்ப அன்யோன்யம். இவர்கள் சந்திக்கும்போதும், பேசும்போதும் ஒரு குடிவிசுவாசம் காணப்படும். குடிவிசுவாசம் என்று சொல்லவும் பயமாக இருக்கிறது. அரசியல் பிரம்மரிஷிகளுக்கும் தமிழ் முனிவர்கட்கும் இடையே வார்த்தைகள் படாதபாடு படுகின்றன. நான் எந்தப் பெரும் விவாதத்திலும் புக விரும்பவில்லை. சில இந்தியர்கள் வெளிநாட்டில் எங்காவது - லண்டனில் என்றுதான் வைத்து கொள்வோமே - சந்தித்தால் அவர் சம்பாஷணை, இரண்டில் ஒரு விதம்தான் செல்லும். ஒன்று இந்தியாவைப்பற்றிப் பெருமிதத்துடன் சற்று கர்வத்துடன் என்றே சொல்லலாம், சம்பாஷணை நடக்கும். அல்லது அங்கிருக்கும் அவ்வளவு வசதிகளும் இந்தியாவில் இல்லையே என்ற வெறுப்பும் வருத்தமும் கலந்து பேச்சு ஓடும் (லண்டனிலேயே வெகுகாலம் இருந்தவர்கள், அங்குள்ள ஸ்தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு உடையவர்கள், தனித்தனி நபர்களைப்பற்றி இங்குபோல் அங்கும் வம்பளப்பார்கள். அவர்கள் போகட்டும்.) இம்மாதிரிப் பேச்சில் அன்யோன்யம் இருக்காது. பெருமிதம், சந்தோஷம், சிநேகபாவம் எல்லாம் இருக்கும் இம் மாதிரி சந்திப்புகளில். ஆனால், இரு தமிழர் சந்திக்கும்போது இருக்கும் குடும்ப உணர்ச்சி இராது.

ஒரு குடும்பத்தில் பல நபர்களுக்கிடையே மனஸ்தாபங்களும், சண்டைச் சச்சரவுகளும் இருப்பது சகஜமே. ஆனால் அவர்களே வெகுநாட்கள் கழித்தோ, வெளி ஊரில் எங்காவதோ சந்தித்தால் அதெல்லாம் மறந்துவிடும். இம்மாதிரியான ஒரு உறவுத் தத்துவம் தமிழர்களிடையே லண்டனில் தெளிவாகக் காணப்படும். இங்கு

ஒன்று குறிப்பிடவேண்டும். சில பெரிய வீட்டுப் பிள்ளைகளிடம் ஒரு குடும்பகர்வம் இருக்கும். வேறு சிலரிடம் தங்கள் குடும்பத்தைப்பற்றிப் பேச ஒரு கூச்சம் இருக்கும். இவ்விருசாராரும் சந்தித்தால் மமதை ஒருபுறம்; தாழ்வு மனப்பான்மை ஒருபுறம்; பார்க்கவே அருவருப்பாக இருக்கும்; மனித கௌரவத்திற்கே ஒரு தூஷணையாகத் தோன்றும் இவரது நடத்தையும். இதே போல்தான் பாஷாபிமானிகள் இடையேயும், லண்டன் தமிழனிடம் நாம் முதல் முதல் கவனிப்பது இவை தான். தனது மொழிப்பரம்பரையில் அவனுக்கு கர்வமும் கிடையாது, தாழ்வு மனப்பான்மையும் கிடையாது. நம்மில் பெரும்பாலரும் சாதாரண குடும்பத்தவர். நம் குடும்பத்தைப்பற்றிப் பெருமையடித்துக் கொள்ளவும் ஒன்றுமில்லை; வெட்கித் தலைகுனியவும் அவசியம் இல்லை. அந்தக் குடும்பத்தில் பிறந்தது உண்மை; ஆனால் அதை நம் பூர்வஜன்மத்து தபோபலன் என்றோ, விதியின் சோதனை என்றோ கருதவேண்டியதில்லை. அது, காரணம், அர்த்தம், விளைவு ஒன்றும் இல்லாத ஒரு நிதர்சன உண்மை. இந்தப் பக்குவ மனம் லண்டன் தமிழனுக்கு உண்டு. தன் நாட்டையும், தன் மக்களையும் விட்டுப் பிரிந்து வாழ நேரிட்டிருக்கும் சந்தர்ப்ப நிர்ப்பந்தமே, இந்தப் பரிணமத்திற்கும் காரணம்.

ஆனால் லண்டன் தமிழனுக்கும், உதாரணமாக, டெல்லித் தமிழனுக்கும் என்ன வித்தியாசம்? டெல்லியில் இருப்பவரும் தமிழ் நாட்டைவிட்டு, தமிழ் மக்களைவிட்டுப் பிரிந்து வாழவேண்டியிருக்கிறது. இவர்களும் லண்டன் தமிழன்போல் தானா? இல்லை என்றே நினைக்கிறேன். முதல் வித்தியாசம் அளவில். பிரிவில் பல அளவைகள் உண்டு. கூட்டுக் குடும்பமே இயற்கையாக இருப்பவருக்கு பக்கத்து வீட்டில் வாழ்வதும் பிரிந்து போவதுதான். அது போல் குறிப்பிட்ட தூரம் செல்லும்வரை பிரிவு நம் மனப்போக்கை மாற்றுவது இல்லை; இன்னும் பார்க்கப் போனால் சிறிய தூரங்கள் மனப்பண்பிற்குச் சாணை ஏற்றி இன்னும் கூர்மையானதாகத்தான் செய்யும். பிரிக்கும் தூரம் அதிகரிக்க அதிகரிக்க இந்தக் கூர்மை மங்கி, கத்தி எழில் மிகுந்த கலைப்பொருளாக மாறுகிறது. குடும்பத்தில் பல தலைமுறைகளாக இருக்கும் ஒரு அபூர்வ ஆபரணத்திற்

கும், தினசரி காய்கறி நறுக்க உதவும் அரிவாள்மணைக்கும் வித்தியாசம் உண்டல்லவா ?

அளவைத் துறையிலேயே லண்டனுக்கும் டெல்லிக்கும் இடையே இன்னொரு வித்தியாசமும் உண்டு. என்னதான் வட இந்தியா என்றாலும் டெல்லியில் தமிழரின் எண்ணிக்கை கணிசமானது. ஆகையால் டெல்லியில் தமிழர் சமூகம் என்று ஒன்று உண்டு. இந்த சமூகத்திற்கும் உட் பிரிவுகள் இருப்பதும் இயற்கையே. ஆனால் ஒப்பிட்டுப் பார்க்கையில் லண்டனில் தமிழர் வெகு சிலர். அவர்களை ஒரு தனிச்சமூகம் என்று குறிப்பிட முடியாது. சமூகத்தன்மை இல்லாமையில், உட்பிரிவுகளுக்கும் இடமில்லை

மேலும் சில இடங்களுக்குச் சென்றால் நம் நடையுடைபாவனைகளை, நம்வீட்டுப் பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ள அவசியம் இல்லை. நம்முடைய நடையுடை பாவனைகளும் நம் பழக்க வழக்கங்களும் மாறாவிட்டால் நம்மிடையே இருக்கும் வேறுபாடுகள் மறைவதில்லை. லண்டனுக்குச் சென்றுவிட்டால் நடையுடை பாவனைகள், வீட்டுப் பழக்கவழக்கங்கள் எல்லாம் மாறியாக வேண்டும் மாறின பிறகு எல்லோர் வாழ்க்கை முறையும் லண்டன் தேவைக்கு ஏற்ப அமைந்து வித்தியாசம் வேறுபாடு தென்படாத ஒரேமாதிரியாகி விடுகிறது. இதுவும் நான் குறிப்பிட்ட குடும்ப அன்யோன்யத்திற்கு அனுகூலமான சௌகர்யமாக அமைகிறது.

சந்தர்ப்பம் கிடைத்தவர் யாவரும் இந்த அப்பியாசம் பெற வேண்டும். மொழிப்பற்றுதலுக்கும், பண்பாட்டுப் பெருமிதத்திற்கும் ஒரு எல்லையுண்டு. தேச பக்தியே ஒரு பழங்காலத்து வினோதமாகி வரும் இன்றைய உலகில், தமிழில் இல்லாதது எங்கும் இல்லை, தமிழர் செய்யாதது எவரும் செய்யவில்லை என்று உளறுவது பேதமை. நம் போன்ற சாதாரண மனிதர் அப்பேதமையிலிருந்து அடையப்போகும் பயன் யாதுமில்லை. காலத்தோடு முன்னேறாமல் பின்தங்க நேரிடும் ; அதுமட்டுமல்ல. எவ்வித தீவிரப் பற்றுதலாலும் மனத்தின் அடிவானம் குறுகிப் போகத்தான் செய்யும். வேறொரு பாஷையும் தெரியாத ஒரு தமிழன் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாடுவதைப்போன்ற விசனிக்கத்தக்க விஷயம் வேறொன்றும் கிடையாது.

முடியுமானால் கட்டாயம் எங்காவது கண்காணாத தேசத்திற்கு கொஞ்சகாலம் போய் வாருங்கள். லண்டன்தான் போகவேண்டும் என்றில்லை. எங்கு வேண்டுமானாலும் போய்ப் பாருங்கள் கொஞ்ச காலம். திரும்பிவர மறந்துவிடக்கூடாது. போன இடத்திலும் ஒரு குட்டி மதராஸோ, தஞ்சாவூரோ, கும்பகோணமோ, திருநெல்வேலியோ சிருஷ்டித்துக் கொள்ளக்கூடாது. அந்தக் கண்காணாத தேசத்திற்குச் சென்று, உங்கள் நடையுடை பாவனைகளை முற்றும் மாற்றிக்கொண்டு சிறிது காலம் வாழ்ந்து பாருங்கள். மன ஆரோக்கியத்திற்கு நல்ல அப்பியாசம். ஐயாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து பார்த்தால் நம் சண்டை சச்சரவுகளும், அல்பப் பெருமிதங்களும் என்ன குழந்தைத்தனமாகத் தோன்றுகிறது என்று பார்த்து வாருங்கள்.

ஒரே ஒரு யோசனை. போனால் மனைவி குழந்தைகளுடன் போய் வாருங்கள். போகிற இடத்தில் இல்லறமின்றி வாழ முடியாது என்று சொல்லவில்லை. மனைவி, குழந்தைகளிடமிருந்தும் அவ்வப்போது விடுமுறை தேவை. கலியாணமானவர் விட்டுவிட்டு பிரம்மசரியம் அப்பியசிப்பது போன்ற ஆரோக்கியம் வேறில்லை. நான் சொல்லக்கூடியது இதுதான். என்மனைவி குழந்தைகளுடன் நான் லண்டன் சென்றிராவிட்டால், அந்த நாட்டையும் அந்த வாழ்க்கையையும் இவ்வளவு அருமையாக ரசித்து அனுபவித்திருக்கமுடியாது என்று எனக்குத் தோன்றுகிறது.

—'சுடர்' [தில்லித் தமிழ்ச் சங்க வெளியீடு]

மாணவனின் கேள்வி

ஒரு பள்ளிக்கூடத்தை சோதிக்க கல்வி அதிகாரி ஒருவர் வந்தார். வெகுநேரம் மாணவர்களை கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். முடிவில் மாணவர்களை நோக்கி "உங்களில் யாருக்காவது என்னைக் கேள்வி கேட்கவேண்டுமா" என்று கேட்டார்.

"நீங்கள் எந்த வண்டியில் ஊருக்குத் திரும்பப்போகிறீர்கள்" என்றான் ஒரு மாணவன்.

நீர் என்னும் அற்புதம்

பெ. நா. அப்புஸ்வாமி

நாம் வாழும் பூமி அற்புத மானது; அற்புதங்கள் நிரம்பியது. ஆயினும், அதிலுள்ள அற்புதங்களை நாம் பெரும்பாலும் உணருவதில்லை. ஏனென்ருல், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்களை உணருவதற்கு ஏற்றவையாக நமக்கு ஐம்பொறிகள் இருக்கின்றன. ஆனல், அற்புதம் என்னும் உணர்ச்சியை நாம் அறிந்து கொள்வதற்கு நமது உடலில் யாதொரு தனிப் புலனும் இல்லை.

இதற்கு ஓர் உதாரணமாக 'நீர்' என்னும் பொருளை எடுத்துக் கொள்ளுவோம். இதன் பெயரைக் கேட்ட உடனேயே 'இதில் என்ன அற்புதம் இருக்கிறது?' என்றுதான் எண்ணத் தோன்றும்.

நீர் என்பது அபூர்வமாகவோ, அருகியோ காணப்படும் பொருள் அன்று. நமது பூமியின் மேற்பரப்பில் முக்கால் பங்கு நீராக அமைந்திருக்கிறது. பசிபிக், அட்லாண்டிக் போன்ற மிகப் பெரிய ஆழ் கடல்கள் இல்லாமலிருந்தால், நமது பூமியானது எங்கும் ஒன்றரை மைல் ஆழத்தில் ஆழ்ந்து கிடக்கும்.

நீரானது கடலில் இருப்பது; நிலத்தில் இருப்பது; வானிலும் இருப்பது. அது மூன்று வகையாய் உருவெடுத்துத் தோன்றுகிறது. அது கட்டிப் பொருளாகவும், திரவப்பொருளாகவும், வாயுப் பொருளாகவும் உரு மாறிக் காட்சியளிக்கிறது. ஆதலால், காளமேகப் புலவரின் பாட்டைச் சற்றே மாற்றி,

'காரென்று பேர்படைத்தாய்
  ககனத்து றும்போது;
நீரென்று பேர்படைத்தாய்
  நெடுந்தரையில் வந்த
    தற்பின்;
ஊரெங்கும் கடுங்குளிரால்
  உறைந்துபனிக்கட்டியெனப்;
பாரெங்கும் பேர்படைத்தாய்;
  பல்பேரும் பெற்ருயே'

என்று அதை புகழ்ந்துகூறலாம்.

நீலவானத்தினிடையே தூய பஞ்சிழையைப்போல் மெல்லென மிதக்கும் வெண்மேகம் நீர். காலை வேளையிலும், மாலைப் பொழுதிலும் பன்னி

றச் சோதியோடு விளங்கும் மேகங்கள் யாவும் நீர். மின்னியும், இடி இடித்தும், மழை பொழிந்தும், உலகத்தை அச்சுறுத்தி மகிழ்விப்பதும், குளிர்விப்பதும் நீர். வானத்திலே நவரததினங்களால் இழைத்த அழகிய தோரண வளையம் போல் விளங்கும் வானவில்லை அமைப்பதும் நீர். தேவலோகத்திலிருந்து உதிரும் வெண் தாமரை இதழ்களோ எனமெல்லென உதிர்ந்து நிலத்தின்மீது வெள்ளிபோன்ற பனிப் போர்வையைப் போர்த்துவதும் நீர். தரையில் படிந்து, கற்பாறைபோல் உறைந்து, தெள்ளிய படிகம்போல் விளங்குவதும் நீர். ஆறும் நீர்; அலையும் நீர்; கடலும் நீர்; அருவியும் நீர்; ஆவியும் நீர்; 'மூங்கில் இலை மேலே தூங்கும் பனிநீரும்' நீர்.

நமது பூமியிலுள்ள எல்லா உயிர்களுக்கும் இன்றியமையாதது நீர். அவ் வுயிர்களுக்கு மூலாதாரமாக உள்ளதும நீர். இவ்வுலகிலே உயிர்கள் தோன்றியது நீரிலே. இப்பொழுதும் பெரும்பான்மை உயிர்கள் நீரிலேதான் வாழக் காண்கிறோம்.

உலகில் உயிர் தோன்றுமாறு வழி வகுத்ததும் நீர். ஆதியிலே முழுதும் பாறையாக இறுகிக் கிடந்த இவ்வுலகின் மேற்பரப்பைக் கோடானுகோடி வருஷங்களாகப் பலவகையாய்த் தாக்கியும், தகர்த்தும், கரைத்தும், மண்ணுக்கி வளம்பெறச் செய்ததும் நீர். அற்ப உயிராகிய அமீபா முதல் சிறந்த உயிராகிய மனிதன்வரையுள்ள ஒவ்வொரு பிராணியின் உடலிலும் நீர் முக்கால் பகுதியாக உள்ளது. நமது இரத்தம், தசை, எலும்பு முதலிய ஒவ்வொரு பகுதியிலும் நீர் இருக்கிறது.

நீரில்லா நிலம் பாழ், தாவரங்கள் யாவும் தங்களால் இயன்றவாறு, வேராலோ, தண்டாலோ, இலைகளாலோ நீரை ஏற்று உயிர் வாழ்கின்றன. நீரில் கரைந்துள்ள பொருள்களை ஏற்று வளர்ச்சி பெறுகின்றன.

நமது வாயுமண்டலத்தில் மறைந்து கிடக்கும் நீரானது சூரிய வெப்பம் நம்மை வறுத்து விடாமல், குடைபோல் காப்பாற்றுகிறது. பிரபஞ்ச வெளியின் குளிர் நம்மை விறைத்து விடாமல், போர்வைபோல் பாதுகாக்கிறது.

நம்மைக் காப்பதும் நீர். நம்மை அழிப்பதும் நீர். நமது அடிமையும் நீர். நமது அரசனும் நீர். நமது உணவை வெப்பத்தால் சமைப்பதும் நீர். நமது உணவைக் கெடாமல் குளிர்ச்சியால் பாதுகாப்பதும் நீர்.

இந்த விந்தைப் பொருளின் அமைப்பையும் பிறப்பையும் கவனிப்போம். மூன்று வகையாக அவதரித்துத் தோன்றும் இந்த அற்புதப் பொருளானது இரண்டு வாயுக்களின் சேர்க்கையால் அமைந்தது. அவற்றுள்

ஒன்று ஆக்ஸிஜன். மற்றென்று ஹைடிரஜன் ஆக்ஸிஜன்நிறமும், மணமும்,சுவையும் அற்றது. பல பொருள்களோடு நட்புக்கொண்டாடும் இயற்கையை உடையது. உயிருக்கு இன்றியமையாதது. இதை நீரின் தந்தை என்று ஒருவாறு கூறலாம். ஹைடிரஜனும், ஆக்ஸிஜனைப் போல், நிறமும், மணமும், சுவையும் அற்றது. நட்புச் சுபாவம் மிகுந்தது. உயிரை அளிப்பது. இதை நீரின் தாய் என்று ஒருவாறு கூறலாம். இரண்டும் இணை சேரும்போது, சோதி உதயமாகிறது. நெருப்புத் தோன்றுகிறது. அளவிறந்த வெப்பம் உண்டாகிறது. இச் சேர்க்கையால் பிறப்பது குளிர்ச்சியே உருவாகிய நீர். வெப்பத்தைத் தணிக்கும் நீர். நெருப்பை அவிக்கும் நீர்.

நாம் நீரைப் பருகுகிறோம். நீரை உண்கிறோம். உருளைக் கிழங்கில் நூற்றுக்குக் கிட்டத் தட்ட எண்பது பங்கு நீர்; பாலில் இருப்பதைவிட தக்காளியில் அதிக அளவில் நீர் இருக்கிறது. நீரை நமது உடலில் எங்கும் புக விடுகிறோம்; எங்கும் அதைத் தாங்குகிறோம். அதை நமது உடலில் இயற்றுகிறோம். உடலினின்று அதைப் பலவகையாய் அப்புறப் படுத்துகிறோம். நீரானது உடலின் உள்ளே புகுவது அவசியம்: தங்குவது அவசியம்: வெளிப்படுவதும் அவசியம்.

நீரானது உயிரையும், உணவையும், ஒளியையும் சக்தியையும் அளித்துவருவதால், நமது முன்னோர்கள் அதைப் பாராட்டினார்கள். அதை வியந்து கொண்டாடினார்கள். உபநிஷதம் முதலிய வடமொழி மறைகளும், தமிழ் மறையாகிய திருக்குறளும் அதை அமிர்தம் என்றே குறிப்பிட்டன. அதன் இயல்புகளை மேன்மேலும் அறிந்துள்ள நாம், அவர்களைக் காட்டிலும் அதிக அளவில், அதன் அற்புதங்களை எண்ணி, மகிழ்ந்து பாராட்டுவோமாக.

—'சுடர்' (தில்லித் தமிழ்ச் சங்க வெளியீடு)

நேரம் குறைந்தது மனிதனுக்கு.
பழியோ, காலத்திற்கு.

காலம் கெட்டுக் கிடக்கிறது

•

காலம் கெட்டுக்கிடக்கிறது என்று எல்லோருமே சொல்லுகிறார்கள். எங்குமே பேசப்படுகிறது. காலம் எப்படிக் கெட்டது? அது ஒரு பண்டமா ஊசிக் கெட்டுப் போவதற்கு? காலமாவது கெடுவதாவது என்றால், காலம் கெட்டுக்கிடக்கிறது என்று பல குரல்கள் கேட்கின்றன.

"இந்த இருட்டு நேரத்திலே ஒண்டியாய்ப் போகாதே. காலம் கெட்டுக்கிடக்கிறது" என்று பாட்டி தன் வீட்டுக் குழந்தைகளைப் பார்த்துச் சொல்கிறாள்.

"காலம் கெட்டுக்கிடக்கிறதற்குத் தகுந்தாற்போல் நீ வீட்டைப் பூட்டாமல் இப்படிப் போட்டுவிட்டுப் போகலாமா" என்று மனைவியைப் பார்த்துப் புருஷன் கேட்கிறான்.

"குழந்தையைத் தனியாக விடாதே, காலம் மோசமாகிக் கொண்டுவருகிறது." இப்படிப் பல பேச்சுக்கள் இந்தக்கெட்டுப் போன காலத்தைப் பற்றி. இந்தக் காலம்தான் என்ன? இப்படி எல்லோருமே கவலைப்படும் படி கெட்டுப்போவானேன்! அது என்ன திடப் பொருளா? அல்லது திரவப் பொருளா? அல்லது கண்ணுக்கே படாத வாயுப் பொருளா? ஊஹூம்! அது எதிலுமே சேர்ந்ததாக இல்லை. விஞ்ஞானப் படிப்பு, காலம் என்ன என்பதைக் காட்டுவதாக இல்லை. காலத்தைப் பற்றிப் பேசும் பாடம் எது? சரித்திரம் ஒன்றுதான். அதில் புகுந்தால் காலத்தைப் பற்றிய துப்புத் துலங்கும் என்று சரித்திரத்தைப் புரட்டினேன்.

அங்கு இருண்டகாலம், கற்காலம், உலோக காலம், பொற்காலம், குழப்பமான காலம் என்ற குறிப்புகள் காண்கின்றன. காலம் கெடுவதற்கு முன் இருண்டுகூடக் கிடந்திருக்கிறது என்று தெரியவந்தது. கற்காலம் என்றால் என்ன என்பதைப் பார்த்தேன். மனிதன் கற்களையே ஆயுதமாக உபயோகித்து

வந்ததனல் அதை கற்காலம் என்று கூறப்படுகிறது. உலோக காலம் என்பதும் அப்படித் தான். அந்தந்தப் பொருள்கள் புழக்கத்துக்கு வந்தபொழுது அதன் பெயரை அந்தக் காலத் துக்கு வைத்திருக்கிருர்கள்.

பொற்காலத்தில் எல்லாம் சீரும் செழிப்புமாகஇருந்ததாம். சண்டையோ, கொள்ளையோ எதுவுமே கிடையாதாம். அரச னது அரசாட்சி செங்கோல் வழுவாது நடந்ததாம். அதற்குப் பொற்காலம் அதாவது மிகச் சிறந்த காலம் என்று அர்த்தம். இதுமாதிரி சரித்திரத்திலே இங் கொன்றும் அங்கொன்றுமாகக் காண முடிந்தது. குழப்பமான காலங்களில் ஒரே குழப்பமாக இருந்திருக்கவேண்டும். கற் காலத்தையும், உலோக காலத் தையும் பிரமாதமாய் வர்ணித்த சரித்திர ஆசிரியர்கள் இதைப் பற்றி எதுவுமே அதிகமாக எழுதவில்லை. அந்தக் காலத்தைப் பற்றி சரித்திர ஆசிரியர்களுக் குத் தெரியாமல் போனதனலா அல்லது அந்தக் காலமே குழப்ப மாகத்தான் இருந்ததா என்பது இன்னும் ஆராய்ச்சிக்குப் பிடி படாத விஷயம்.

ஆனல் அப்பொழுது ஒரு நிலையான ஆட்சியில்லை. கடைசி குப்த மன்னனுக்குப் பிறகு எந்த வம்சம் வந்தது? எந்த அரசன் சிம்மாசனத்தில் இருந்தானென்று தெரியவில்லை. கொள்ளை இருந்தது; கொலை இருந்தது; குழப்பம் நிறைந் திருந்தது; இம்மாதிரியான சரித்திர பக்கமெல்லாம் புரட்டி னேன். எனக்கு வேண்டிய இந் தக் கெட்டுப்போன காலத்தைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. ஒருவேளை அந்தக் குழப்பமான காலத்தைப் பற்றிப் பக்கங்களி லேயே விட்டாயிற்ரேவென்று மறுபடியும் அந்தப் பக்கங்களைப் புரட்டினேன். நாட்டில் ஒரே அராஜகம் நிறைந்திருந்தது. நிலை யான ஆட்சியில்லை. கொலையும் கொள்ளையும் மலிந்துகிடந்தது. அடிக்கடி அன்னியர்கள் படை யெடுத்துவந்தார்கள். எங்குமே எல்லாமே குழப்பம்! இந்தப் பகுதியிலும் குழப்பம் அதிகமா யிற்றே யொழிய காலம் கெட்ட வரலாறு தெரியவில்லை. ஆகவே சரித்திரப் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நாற்காலியில் சாய்ந்தேன். வெளித் திண்ணை யில் பக்கத்து வீட்டு அண்ணு சாமியும் எதிர்வீட்டு முத்தண் ணுவும் பேசிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது.

"காலம் வரவர சுத்தமாக கெட்டுப்போயிட்டுது சார்"

"ஏன் என்ன சமாசாரம்?"

"இதோ இந்தப் பேப்பரைப் பாருங்கோ. செங்கற்பட்டுக்குப் பக்கத்தில் நடுவழியில் நாலு திரு டர்கள் ஒரு பஸ் வண்டியை அப்படியே நிறுத்திப் பெண் கள் கழுத்திலிருந்தது, கையி லிருந்தது எல்லாவற்றையுமே பிடுங்கிக்கொண்டு ஓடியிருக்கி ருர்கள். இவ்வளவும் பட்டப் பகலிலாம்.

"அட என்ன அக்கிரமம், ஐயா, இப்படியும் நடக்குமா?"

"இங்கே பாருங்கோ. நான் சொன்னால் நம்பமாட்டீர்கள் பேப்பரிலே பாருங்கோ."

முத்தண்ணா பேப்பரை நீட்டினார். அண்ணாசாமி பேப்பரில் மூழ்கினார். என்னுடைய சிந்தனை அவர்கள் சம்பாஷணைக்காக காத்துக் கிடப்பதுபோல் அந்தத் திண்ணைப் பேர்வழிகளிடமே ஒட்டிக்கொண்டது. அவர்கள் பேச்சு மீண்டும் தொடங்கியது.

"என்னாலே இதை நம்பமுடியலே சார்"

"ஏன் நம்பமுடியாது?"

"என்னய்யா இருபது ஆண்பிள்ளைகள் இருந்த வண்டியில் ஒரு நாலு காலிப் பயல்கள் மிரட்டிக் கொள்ளையடிப்பதென்றால் நடக்கக்கூடிய விஷயமா? கதையாயல்லவா இருக்கிறது."

"அட, நீர் ஓர் மனுஷனய்யா. எதெடுத்தாலும் நம்பிக்கை யில்லாத விவகாரம்தான். பேப்பரிலே கொட்டை எழுத்திலே போட்டிருக்கிறான் பாரும். கொஞ்சம் கண்ணாடியை துடைச்சுப் போட்டுப் பாரும்."

"தெரியுது, தெரியுது. ஆனால் நான் சொல்வது என்னவென்றால் நாலு பயல்கள் இருபது ஆண்பிள்ளைகள் இருக்க, பெண்டு பிள்ளைகள் கத்தக் கத்த நகைகளைப் பிடுங்கிக்கிட்டுப் போறதுன்னா அவ்வளவு ஆண்பிள்ளைகளும் என்னவாயிருந்தார்கள்" என்று ஆத்திரமாய்ப் பேசினார் அண்ணாசாமி.

"அவர்கள் எல்லோரும் சும்மா பார்த்துக்கொண்டுதான் நின்றுகொண்டிருந்தார்கள்."

"அவர்களும் ஆண் பிள்ளைகளா? ஒருத்தரா, இரண்டு பேரா? இருபது பேரல்ல!"

"இருபது பேர்கள்தான். இருந்து என்ன செய்யறது. எல்லாம் போக்கிரிகள் காலமாகத்தான் போய்விட்டது. பாருங்கோ இன்னும் மற்ற பக்கமெல்லாம், கொலை, திருட்டு, விபசாரம் இப்படித்தான்."

"வரவர பேப்பரிலே இது மாதிரிப் பிரசுரம்தான் அதிகமாகிக்கொண்டு வருகிறது. பேப்பர்களுக்கு இப்படித்தான் செய்திகள் அகப்படும்போலே இருக்கு."

"பேப்பர்காரர்கள் இப்படிதான் போடவேண்டுமென்பதில்லை சாமி. இப்படி நடப்பது அதிகரித்துக்கொண்டே போகிறது."

"என்னமோ, காலம் சுத்தமாக கெட்டுப்போச்சு சார்."

வெளியே அவர்கள் பேசிக்கொண்டிருந்த சம்பாஷணையில் எனக்கு வேண்டியது கிடைத்துவிட்டது. காலம் ஏன் கெட்டது? எப்படிக் கெட்டது என்பது தெரிந்துவிட்டது.

அநியாயம் நடக்கிறது. தர்ம விரோதமான செயல்கள் நடைபெறுகின்றன. இதுபோன்றவைகளால் காலம் கெடுகிறது. ஆனால் இந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காலமா காரணமாக இருக்கிறது? இல்லை. அங்கே காலத்தின் கூட்டாளியாகவந்து கொண்டிருக்கும் நாம்தான். கொலை நடப்பதோ கொள்ளை நடப்பதோ. பொய்யோ, சூதோ, வழிப்பறியோ எல்லாம் மனிதன்தான் செய்கிறான். அவனிடையேதான் நடக்கின்றன. இந்த தீய சக்திகள் அதிகரிக்கும் பொழுது தர்மமே தத்தளிக்க வேண்டியதாயிருக்கிறது. நல்லவர்கள் சோதனைக்குள்ளாகிறார்கள். தீமையை எதிர்த்து அழிக்கும் மனப்பண்பு நம்மிடம் விரியும்பொழுது இதுமாதிரியான செயல்கள் நம்மிடம் தலைகாட்டுவதில்லை. அங்கே காலம் பொன்னைக் காண்கிறது. தொண்டுக் கிழவி துணையின்றி ஒரு கூடை நிறையப் பொன்னைப் பயமின்றி தூக்கிச் செல்லும் காலம் வருகிறது.

காலம் ஏன் கெடுகிறது? மனிதனால்தான். மனிதன் கெடுகிறான்; அதனாலே காலமும் கெடுகிறது. புராண காலத்திலாகட்டும் இதிகாச காலத்திலாகட்டும், அவற்றிற்கும் பின்பு வந்த காலத்திலாகட்டும், காலம் கெட்டது எப்படி? இரணியனோ இராவணனோ, கௌரவர்களோ இருந்து நல்லவர்கள் நடுங்கும் காரியத்தைச் செய்தார்கள். நீதி, தர்மங்கள் அவர்கள் காலடியில் துவைக்கப்பட்டன. அவர்கள் செய்த பாபங்கள் பூமிக்கே தாங்கமுடியாத பாரமாகப் போய்விட்டது. அவர்கள் ஒழியும்பொழுது பாவங்களே ஒழிந்தன; காலமே மாறியது.

ராமன், கிருஷ்ணன் போன்ற இதிகாச கர்த்தாக்கள் அதர்மத்தை ஒழிக்கப் போரே புரிந்தார்கள். புத்தர், இயேசு, அசோகர் போன்ற ஞானிகள், அரசர்கள் காலத்தையே தங்கள் வாழ்வாலும் வாக்காலும் மேம்படச் செய்தார்கள். லிங்கன், காந்திஜி போன்ற பெரியார்களின் செயல்களால் காலமே பொன் மெருகேறியது.

காலத்தைப் பொன்னாக்க பெரியோர்கள்தான் வரவேண்டுமென்பதில்லை. நாமும் பெருமையுள்ளதாகச் செய்யலாம். ஆனால் காலம் கெடாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது மிக முக்கியம்

—"உதயன்"

மதிப்புச் செலுத்துவது மனிதனுக்கா பொருளுக்கா ?

மரியாதை மறைந்தது

●

காப்பி ஹோட்டல்களுக்குச் சென்ருல் ஒரு கப் காப்பிக்காக கால் மணி நேரம் காத்துக் கொண்டிருக்கவேண்டியது சகஜம். நீங்கள் சென்று காலியான ஒரு நாற்காலியில் உட்காருகிறீர்கள். நீங்கள் உட்காருவதை அருகில் நின்று ஒரு ஹோட்டல் சிப்பந்தி பார்த்துக் கொண்டிருக்கிருன். ஆனல் அவன் உடன் உங்களிடம் வந்து ''உங்களுக்கு என்ன வேண்டும்'' என்று கேட்பதில்லை. நீங்கள் உட்கார்ந்தவுடன் ஒரு கப் காப்பி கொண்டு வா என்று கூறியதை அவன் காதிலும் வாங்கிக் கொள்ளவில்லை. எதோ சிந்தனையில் ஆழ்ந்துகொண்டே யிருக்கிருன். ஐந்து நிமிஷ நேரம். பிறகு இம்மாதிரி நிற்பது நியாயமில்லை என்று அவனுக்கே தோன்றியவுடன் உங்களிடம் வந்து ''என்ன சார் வேண்டும்'' என்று வெகு அலட்சியமாகக் கேட்கிருன்.

உங்களுக்குத் தேவை என்னவென்று நீங்கள் அறிவிக்கிறீர்கள். பத்து நிமிஷங்கள் ஆனதும் ஒரு கப் காப்பி உங்களிடம் வந்து சேருகிறது. அதில் சர்க்கரை குறைவு, ''சர்க்கரை கொண்டுவா'' என்று சொல்ல வாயெடுத்தவுடன் ஹோட்டல் சிப்பந்தி மறைந்து விடுகிருன். அவன் திரும்பியும் உங்கள் கண்ணுக்குத் தோன்றி அவனிடம் சர்க்கரையை கொண்டு வரச்சொல்லி சர்க்கரை வந்து சேரும்போது சூடாக இருந்த காப்பி பச்சைத் தண்ணீராகிறது !

இம்மாதிரி நிலைமை, சுதந்திரம் கிடைத்த இந்தியாவில்தானிருக்கும் என்று சிலர் குறைகூறுகின்றனர். மேல் நாட்டுநிலைமைகளும் ஏறக்குறைய இம்மாதிரியேதான் என்று சில தகவல்களிலிருந்து தெளிவாகிறது.

ஒரு கனடா பத்திரிகையாளர் இங்கிலாந்தில் சமீபத்தில் சுற்றுப்பிரயாணஞ் செய்து கொண்டிருந்தார். ஒரு ரயில்வே ஸ்டேஷனில் வண்டி நிற்கும்போது, வண்டியில் இணைத்துள்ள

போஜன வண்டிக்கு டீ அருந்த சென்றார். அங்கு உட்கார்ந்ததும் மேஜைமீது விரித்திருந்த துணி மிகவும் அழுக்கடைந்திருந்ததைக் கண்டார். பத்து நிமிஷங்கள் கழித்துத் தன்னிடம் வந்த சிப்பந்தியிடம் "இந்தத் துணியை மாற்றக்கூடாதா" வென்று கேட்டார்.

"அதெல்லாம் முடியாதுசார்" என்று அவன் பதில் கூறினன். பிறகு அவர் நன்கு கவனித்ததில் அநேக குற்றங்குறைகளைக் கண்டார். ஒருவர் உபயோகித்த கப்—சாஸரை கழுவாமலே இன்னொருவருக்கு அதே கப்—சாஸரில் டீ கொடுப்பதைக் கண்டார். ரொட்டிக்கு உபயோகிக்கும் ஜாம் அதன் டப்பாமீதெல்லாம் சிந்தியிருந்தது. சிப்பந்தியின் கைகளில் அழுக்கு நிறைய படிந்திருந்தது. அவன் ஆடைகளோ கேட்கவேண்டாம்.

சர்க்கார் நிர்வாகத்தில் நடக்கும் போஜன வண்டியைப் பற்றிக் குற்றங்குறைகளை சர்க்காருக்கு சுட்டிக் காட்டினுல் என்ன நடக்குமென்பதை இவர் நன்கு உணர்ந்திருந்ததால் அந்தக் குற்றங் குறைகளைப் பற்றி ஒன்றும் கவலைப்படவில்லை.

மரியாதையிலும் பொதுஜன சேவையிலும் தரம் குறைந்திருப்பது சர்க்காரின் நிர்வாகத்திலுள்ள ஸ்தாபனங்களில் மட்டுந்தானு, இல்லாவிடில் இவை தேசமெங்குமே பரவியுள்ளதாவென்று இவர் செல்லுமிடங்களிலெல்லாம் ஆராயத் தொடங்கினுர். இந்த ஆராய்ச்சியின் விளைவால் இவர் மிகவும் அதிசயமடைந்தார்.

எங்கு சென்ருலும் எந்தத் திசையை நோக்கினுலும் பொதுஜனங்கள் மரியாதையிலும் பொதுஜன சேவையைப் பற்றி முதலாளிகள் ஆர்வத்திலும் தரம் குறைந்துபோயிருப்பது உண்மைதானென்று இவருக்கு நன்கு புலப்பட்டது. நூற்றுக் கணக்கான கிளைகளுள்ள ஒரு வியாபார ஸ்தாபனத்திற்குச் சில சாமான்கள் வாங்கச் சென்றார். இவர் வாங்கின சாமான்களையெல்லாம் ஒரு சிறிய காகிதப் பையில் போட்டுக்கொடுத்தாள் கடைச் சிப்பந்தி.

காகிதப் பை நாலைந்து இடங்களில் கிழிந்தாய் விட்டது. சாமான்கள் பத்திரமாய் வீடு போய்ச் சேராதென்று இவருக்குத் தோன்றியதனுல் கடை சிப்பந்தியிடம் ஒரு பெரிய காகிதப் பையைக் கேட்டார்.

"பெரிய காகிதப் பை இங்கே கிடையாது, தேடி எடுப்பதற்கு எனக்கு இப்போது நேரமில்லை எனக்கு டீ அருந்த நேரமாகிவிட்டது" என்றுசீறியவண்ணம் சிப்பந்தி கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள். இவர் மிகக் கோபங்கொண்டு கடை மானேஜரிடம் புகார் செய்தார். கடைமானேஜர் "நான் என்ன செய்யட்டும் அவளை வேலையிலிருந்து

நீக்கி வேருெருத்தியை வைத்தால் அவளும் நாளைக்கு இம்மாதிரிதான் செய்யப்போகிருள்'' என்ருர்.

மற்ருெருதினம் இவர் லண்டனில் பாலடை கட்டி வாங்க ஒரு கடைக்குச் சென்ருர் அவர். விரும்பிய பொருள் கடையில் ஒரு இடத்திலிருப்பதைக் கண்டார். அருகேயிருந்த ஒரு சிப்பந்தியைக் கூப்பிட்டு அந்தப் பொருளைக் கேட்டார். சிப்பந்தி தான் நின்றுகொண்டிருந்த இடத்திலிருந்து அசையவேயில்லை. பத்து நிமிஷங்களாகியும் பேச்சு மூச்சில்லை. திரும்பவும் இவர் சிப்பந்தியைக் கூப்பிட்டவுடன் அது நான் வேலை செய்யும் ''இடமில்லை சார்'' என்று எரிந்து விழுந்தான்.

ஒரு ஹோட்டலில் டீ அருந்திக்கொண்டிருந்த சிப்பந்தி ஒருவனிடம் ''மணி என்ன'' என்று கேட்டதற்கு ''மணி என்னவென்று கூறுவது என் வேலையல்ல'' என்று சிப்பந்தி மரியாதையின்றி சொன்னது மேல் நாடுகளிலெங்கும் பரவியுள்ள ஒரு கதையாகும்.

பிரிட்டனில் சுற்றுப் பிரயாணஞ் செய்து கொண்டிருக்கும் பத்திரிகையாளருக்கு இந்தக் கதை ஞாபகம் வந்தது.

ஒரு தினம் காலையில் இவர் ஹோட்டலுக்குச் சென்று தான் விரும்பிய சிற்றுண்டிகளுக்கு 'ஆர்டர்' செய்தார். சிப்பந்தி ரொட்டிக்குப்பதிலாகக் கேக்கை கொண்டுவந்தான். ஆரஞ்சு ரஸத்திற்குப் பதிலாக தக்காளி ரஸத்தைக் கொண்டு வந்தான். காப்பிக்குப் பதிலாக டீயைக் கொண்டுவந்தான். கொண்டு வந்த பொருள்களையெல்லாம் திரும்பி எடுத்துச் சென்று தான் ஆர்டர் செய்தபிரகாரம் சிற்றுண்டிகளைக் கொண்டுவரச் சொன்னார்.

சிற்றுண்டிகளைச் சாப்பிட்ட பிறகு சிப்பந்தியை அருகில் அழைத்து ''வாடிக்கைக்காரர்களின், தேவைகளைச் சரியாகப் புரிந்துகொண்டு கவனிக்கும் மரியாதை உனக்கில்லை; அதனால் உனக்கு இனும் கொடுக்கமாட்டேன்'' என்று கூறிப்போய் விட்டார்.

அடுத்த தினம் காலையில் இவர் அதே ஹோட்டலுக்குச் சென்ருர். முந்திய தினம்தான் உட்கார்ந்த இடத்திலேயே அமர்ந்து அதே சிப்பந்தியிடம் தனக்கு வேண்டிய சிற்றுண்டிகளை 'ஆர்டர்' செய்தார். அன்று அந்தச் சிப்பந்தி மிகச் சிரத்தையுடனும் மரியாதையுடன் ருசிகரமான சிற்றுண்டிகளை யளித்தான். இதன் பலனைக் கொழுத்த சன்மானத்தையுமடைந்தான்.

எல்லாத்துறையிலும் பொது ஜன சேவையின் தரம் மிகவும் குன்றிவிட்டதின் இரகசியம் இப்போது புலப்பட்டுவிட்டதல்லவா!

மரியாதையாக ஒரு வார்த்தை சொல்வதற்கும் அன்புடனும்

தன் கடமைகளைச் செய்வதற்கும் பிரதிபலனை எதிர்பார்க்கின்றனர். கடமையென்பதே மனிதரின் அகராதியிலிருந்து மறைந்துவிட்டது. சம்பளம் வாங்குமிடத்தில் தன் முதலாளிக்கும் அவருடைய வாடிக்கைக்காரர்களுக்கும் சிப்பந்திகள் மரியாதைசெலுத்தவேண்டுமென்ற கடமையை அறவே மறந்துவிட்டனர். புதிதான ஒரு நகரத்திற்குச் சென்று ஒரு இடத்திற்குச் செல்லும் வழி எது என்று கேட்டால் கிடைக்கும் பதிலைப் பற்றி யோசியுங்கள். இடம் தெரியாத மனிதர்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆர்வம் துளியாவது அதில் தெரிகிறதா?

இம்மாதிரிக் கேள்விக்குப் பதில் கூறாமலே சென்றுவிடுவதுதான் சகஜம். தன்னாலாகும் சேவை செய்வது, நயமாகப் பேசுவது, தன் கடமையைச் சற்றும் களங்கமில்லாமல் நிறைவேற்றுவது, பிறனுக்குதவி செய்வது தன்னலத்தைவிடப் பெரிதென்றுக் கருதுவது இவையெல்லாம் தான் விவேகமுள்ள சமூகத்திற்கு அறிகுறிகள்.

ஒரு காலத்தில் இந்தியாவில் வழிப்போக்கர்கள் எந்த வீட்டில் குடிப்பதற்கு ஜலம் கேட்டாலும் இனிமையான வார்த்தைகளைக் கூறி அவற்றைவிட இனிப்பான பாலையும் கொடுத்து வந்தார்களாம். தகுந்த விலை கொடுத்தாலும் ஹோட்டல்களில் கூட மரியாதையுடன் அருந்துவதற்கு இனிமையான பானம் கிடையாது என்ற நாளும் வந்துவிட்டது. இதைப் பற்றி வருந்துவோருக்கு ஆறுதலாகக் கூறவேண்டிய விஷயம் ஒன்றேதான். இந்த நிலைமையால் பாதிக்கப்பட்டிருப்பது நம் நாடு மட்டுமல்ல. மரியாதையிலும் சேவையிலும்தரம் குன்றுதலுக்காளாயிருப்பது உலகம் முழுவதுமே ஆகும்.



தொழிலில் முன்னேற்றம் வேண்டுபவர்களுக்கு.

இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கிடைக்கும் வழி

●

உலகத்தில் உழைத்துப் பிழைப்பை நடத்துகிறவர்களில் பெரும்பாலும் தங்கள் வாழ்நாள் முழுவதும் எளிய நிலையிலேயே கழிப்பது சகஜம். கல்லூரிகளில் படித்துத்தேறிப்பட்டம் பெற்றுங்கூட அநேகர் எளிய வாழ்க்கையே வாழ நேரிடுகிறது.

சாதாரண மனிதரைப்போல எளிய ஸ்திதியில் வாழ்க்கையை ஆரம்பித்து வெகு சீக்கிரம் முன்னேற்றமடைந்து பேரும் புகழும் பெறுபவர்களுமிருக்கிறார்கள். இவர்களைப் பற்றி சாதாரணமாய் எளிய வாழ்க்கையிலேயே யிருப்பவர்களுக்கு ஒரு விந்தையான மனப்பான்மை உண்டு.

இவர்களடைந்திருக்கும் அந்தஸ்தும், செல்வமும் இவர்களது அதிருஷ்டத்தினால் கிடைத்ததென்றும் இவ்வளவு அந்தஸ்துக்கும் சுபிட்சத்திற்கும் இவர்களுக்குத் தகுந்த யோக்கியதையில்லையென்றும் சதாரண மனிதர்கள் கூறுவது சகஜம்.

"நேற்றுவரையிலும் எங்கள் காரியாலயத்தில் சாதாரண குமாஸ்தாவாக இருந்தான். அவனுக்கு எவ்வளவு தான் திறமை இருக்கமுடியும்? என்று பெரிய மனிதர்களின் சாதனையை எளிய மனிதர்கள் தூற்றுவார்கள். வாழ்க்கையில் வெற்றியடைந்த அநேகரைச் சந்திக்கச் சந்தர்ப்பங்கிடைத்தவர்கள் இம்மாதிரி குறைகூறவே மாட்டார்கள். மனிதன் ஒரு துறையில் முன்னேற்றமடைவதெப்படி, அதற்கென்ன காரணமென்பதை இவர்கள் நன்கறிவார்கள். கம்பெனியில் வேலையாயிருக்கும் ஒரு சாதாரண குமாஸ்தாவைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். இவர் வேலை தன் காரியாலயத்திலிருந்து வெளியூர்களுக்

குச் செல்லும் கடிதங்களின் கணக்குகளை வைத்துக்கொள்வதோ அல்லது ஒரு குறிப்புப் புத்தகத்தை தினந்தோறும் எழுதுவதோ ஆகும். வெளியே போகும் கடிதங்களை எழுதவும் கணக்கு வைத்துக் கொள்வதும் குறிப்புப் புத்தகத்தை நன்றாக எழுதுவதுந்தான் அநேக வருஷங்களுக்குப் பின்பும் தெரியும்.

காரியாலயத்திலுள்ள அநேக விதமான வேலைகளில் இந்த இரண்டையும் தவிர வேறொன்றையும் இவர் கற்றுக்கொள்ள முயற்சிக்கமாட்டார். பெரிய இயந்திரத்தில் ஒருமூலையிலுள்ள சிறிய ஆணியைப்போல் இம்மாதிரி ஆட்கள் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழித்து விடுவார்கள்.

ஆனால் முன்னேற்றமடைவோர்கள் இம்மாதிரிப் மனப்பான்மை கொண்டவர்கள் அல்ல. தாங்கள் அலுவல் பார்க்கும் காரியாலயம் என்ன தொழில் செய்கிறது. இதற்கு என்னென்ன பொருள்கள் விலைக்கு வாங்கப்படுகின்றன. இவற்றின் விலையில் ஏற்றத்தாழ்வுகள், பொருள்களை வாங்கி காரியாலயம் என்ன செய்கிறது; என்ன பொருள் விற்கிறது? எங்கு விற்கிறது, சுமாராகக் காரியாலயத்திற்கு எவ்வளவு சதம் லாபம் கிடைக்கலாம் என்பன போன்ற தனக்குக் சம்பந்தமேயில்லாத அநேக விஷயங்களைச் சிந்தனை செய்து ஆராய்ந்து தங்கள் அறிவை விருத்தி செய்து கொள்வார்கள். இதிலிருந்து இந்த மனப்பான்மையுள்ளவர்களுக்கும் கடிதமோ, குறிப்புப் புத்தகமோ எழுதும் குமாஸ்தாக்களுக்கும் வித்தியாசம் என்னவென்று நன்கு புலப்படுகிறது.

கடிதங்களை அனுப்பிக்கொண்டும் குறிப்புப் புத்தகத்தை தினந்தோறும் எழுதிக்கொண்டுமிருக்கும் குமாஸ்தா, கண்ணில் மறைப்புகளோடு வண்டியை இழுத்துச்செல்லும்குதிரையைப் போல் இவர்கள் செய்யும் அற்பமான வேலைமட்டுந்தான் தெரியும். அதனால் தான் வாழ்க்கையில் முன்னேற்ற மடையாமலே இருந்துவிடுகிறார்கள்.

சாதாரண குமாஸ்தாவின் கூட்டாளியாகவே வாழ்க்கையை ஆரம்பித்தாலும் வெகு சீக்கிரம் உயர்ந்த பதவியையடையும் குமாஸ்தாவிற்கு தன்னுடைய குறிப்பிட்ட அற்பவேலை மட்டுமின்றி மற்றுமுள்ள அநேகர் செய்யும் வேலைகளும் தெரியும். ஏனென்றால் காரியாலயத்தின் அமைப்பு முழுவதும் இவர் மனக் கண்முன் தோன்றுகிறது.

இதையொட்டின மற்றும் ஒரு முக்கியமான விஷயமும் கவனிக்கத்தக்கது. சாதாரணக் காரியாலயக் குமாஸ்தா தனக்குக் கொடுத்திருக்கும் சிறிய வேலையை முடித்துவிட்டால் அடுத்தபடியாய் என்ன வேண்டு

மென்பதைத் தானகப் புரிந்து கொள்ளமாட்டான்.

தன் மேலதிகாரியின் தூண்டுதலின் பேரில் தான் அடுத்த அலுவலைப் பற்றிச் சிந்திப்பான். வெகுகாலமாகத் தன் மேலதிகாரியின் உத்தரவை எதிர்பார்த்தே வேலை செய்துகொண்டிருப்பவர்களுக்கு மேலதிகாரியின் உத்தரவில்லா விட்டால் வேலை செய்யவே ஒன்றும் தோன்ருது. உத்தரவு கொடுக்கும் மேலதிகாரிகள் ஒரு நாள் இல்லாவிடில் இவர்கள் வேலை அரைகுறையாய் நின்றுவிடும்.

இம்மாதிரி ஆட்களுக்கு வாடிக்கைக்காரர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்தால் அதற்கென்ன பதிலெழுதுவதென்று கூடத் தெரியாது. இதற்கெல்லாம் காரணம், இவர்கள் தொழிற்சாலையின் அலுவலை முதலிலிருந்து முடிவுவரை கற்றுக்கொள்ளாதிருப்பதுதான்.

ஊழியஞ்செய்து பிழைப்பவர்களில் சிலருக்கு அவர்கள் செய்யும் வேலைகளைத் தவிர வேறு அநேக விஷயங்களை அறிந்துகொள்ள ஆவலிருக்கும். அவர்கள் வேலைசெய்யும் தொழிற்சாலைகள் படிப்படியாக எப்படி உயருகிறது; அதன் வேலைகள் எப்படி அமைந்துள்ளதென்பதைப் பற்றி நன்கு தெரியும். தங்கள் மேலதிகாரிகள் ஏதாவது கூறினல் அதன் சாதக பாதகங்களை உடனடியாய் யோசித்து பதிலளிப்பது அவர்களுக்கு எவ்வளவு உதவியாயிருக்கும்?

சாதாரண நிலையிலிருந்து சற்று உயர்ந்தால் வேலையின் பொறுப்பு அதிகரித்துவிடுகிறது. பொறுப்பு ஏராளமாக இருக்கும் வேலையைச் செய்யும் போதுதான், மேற்பார்வையிடும் உழைப்பாளியின் உண்மைத் திறமை வெளியாகிறது. தான் செய்யும் முக்கிய வேலைகளிலிருந்து முதலாளிக்கு லாபமோ நஷ்டமோ ஏற்படுகிறதென்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தன் தீர்மானங்கள் முதலாளிக்கு லாபம் அளிப்பவையானல், தான் மேற்பார்வை உத்தியோகத்திற்கு லாயக்குள்ளவனென்பது தெளிவாகிறது. தன் தீர்மானங்கள் மூலம் நஷ்டம்ஏற்பட்டால் தான் பொறுப்பேற்க லாயக்கற்றவனென்று ஏற்படுகிறது.

மாதம் ஆயிரக்கணக்காய்ச் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தரைப் பற்றி மேற்கூறியவற்றையெல்லாம் நாம்யோசனை செய்யவேண்டிய விஷயம். காரியாலயத்தின் லாபநஷ்டங்களைப் பற்றியும் இவர் தலைமீது எவ்வளவு பொறுப்பிருக்கிறதென்பதையும் மறக்கக்கூடாது.

2000 ரூபாயோ அல்லது 3000 ரூபாயோ சம்பளம் வாங்கும் ஒரு உத்தியோகஸ்தரின் அறைக்குள் நுழைந்து அங்கு

நடக்கும் நிகழ்ச்சிகளைக் கவனியுங்கள். காரியாலயத்தின் உதவி மானேஜர் உள்ளே வருகிறார். மானேஜர் சில கேள்விகள் கேட்கிறார். அதற்கெல்லாம் பதிலளித்த உதவிமானேஜர் வெளியே சென்றதும் இன்னொருவர் இவரைப் பார்க்க வருகிறார். அவரிடம் சில நிமிஷங்கள் பேசிவிட்டு அவரை வெளியில் அனுப்பிவிடுகிறார்; உடனே டெலிபோனில் ஆயிரக்கணக்கானரூபாய் லாபமோ நஷ்டமோ ஏற்படக்கூடிய ஒரு வியாபாரத்தைப் பற்றி ஒரு வியாபாரி பேசுகிறார்; தன் காரியாலயத்திற்காக அந்த வியாபாரத்தில் ஈடுபடலாமென்று பதில் அளிக்கிறார்மானேஜர். உடனே பாங்கியிலிருந்து வெளிநாட்டு வியாபாரத்தைப் பற்றி ஒரு கேள்வி; ஒரு நிமிஷங்கூட யோசிக்காமல் மானேஜர் பதிலளிக்கிறார்; பிறகு ஒரு குமாஸ்தா மானேஜரின் கையெழுத்துக்காக அநேக கடிதங்களையும் தஸ்தாவேஜுகளையும் கொண்டுவருகிறார். தஸ்தாவேஜுகள் மூலமாக லக்ஷக்கணக்காய் காரியாலயத்திற்கு லாபமோ நஷ்டமோ ஏற்படலாம்; பத்தே நிமிஷத்தில் எல்லாவற்றிற்கும் கையெழுத்திடுகிறார் இம்மாதிரி இவர் வருஷக்கணக்காய் வேலை செய்கிறார்.

முதலாளியின் கவலைகளையும் தலைவலிகளையும் இம்மாதிரி ஏற்றுக்கொண்டு வருஷக்கணக்காய்ப் பொறுப்புடன் வேலை செய்யும் ஒரு உயர்தர உத்தியோகஸ்தருக்கு முதலாளி ஆயிரக்கணக்காய் ஏன் சம்பளமளிக்கமாட்டார்? வேலைகளையெல்லாம் இமைப்பொழுதில் இம்மாதிரி முடிப்பதற்கு எப்படி சாத்தியமாகிறது? அநேக ஆயிரம் ரூபாய்கள் லாபமோ நஷ்டமோ ஏற்படலாமென்ற வியாபாரங்களைப் பற்றிச் சற்றுக்கூட சிந்திக்காமல் எப்படி முடிவுக்கு வருகிறார்?

இந்த விஷயத்தைப்பற்றி ஒரு மானேஜர் கூறுகிறார். "கம்பெனிக்கு ஏராளமாக லாபமோ நஷ்டமோ வரலாமென்ற வியாபாரத்தைப் பற்றி என் மனத்தில் முதலாக என்ன தோன்றுகிறதோ அதன்படி நான் தீர்மானிக்கிறேன் இப்படி தீர்மானஞ் செய்வதும் பத்து தினங்கள் முழுவதும் கணக்குப்பார்த்து பிறகு தீர்மானிப்பதும் ஒன்று போலதான் என்று எனக்கு அநேக வருஷ அனுபவம்மூலமாய்த் தெரியும்! சில வியாபாரங்களில் நஷ்டம்தான் ஏற்படுகிறது; ஆனால் அநேக வியாபாரங்களில் லாபமும் ஏற்படுகிறது."

அனுபவமும் ஞானமும்தான் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் முதலாளிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் முக்கிய மூலதனமாகும். இவை யிரண்டுமிருப்பவர்களுக்கு வருமானம் ஏன் அதிகரிக்கிறது என்று கேட்பதில் அர்த்தமில்லை. வியா

பாரத்தில் முக்கியமான அம்சம் என்ன வென்ருல் உள்ளவசதிகளை வைத்துக்கொண்டு அவற்றின் தகுதிக்கு மேலான லாபம் சம்பாதிப்பதென்பதை அறிந்து கொள்வதுதான் அனுபவத்தின் மூலம் அனுபவத்தை செயலாக்குவதற்கு அபார ஞானம் தேவை.

உங்களுடன் ஏழ்மை நிலையிலிருந்த ஒரு குமாஸ்தா உங்களை விட எவ்வளவோ மடங்கு உத்தியோக உயர்வு அடைந்து விட்டால், அவர் அதிருஷ்டசாலி, திறமையில்லாதவரென்றெல்லாம் குறை கூறுகிறீர்கள்! இம்மாதிரி குறை கூறுவதில் கவனத்தையும்நேரத்தையுஞ்செலுத்துவதைவிட அவர் முன்னேற்றமடைந்ததற்குக் காரணங்களென்ன வென்பதை உங்களால் முடியுமானுல் ஆராய்ந்து அவ்வழிகளை நீங்களும் கையாளுவதுதான் நலம்.

டிக்கட்டு அனுப்பியவர்

புதிதாய் மணம்புரிந்துகொண்ட தம்பதிகளுக்கு ஏராளமான விலைமதிப்புள்ள சன்மானங்கள் கிடைத்தன.

விவாகமான மறுதினம் இத்தம்பதிகளுக்கு ஒரு சினிமாவுக்கு இரண்டு இலவச டிக்கட்டுகள் தபாலில் வந்தது. இதையனுப்பியவர் தன் பெயரைக் குறிக்காமல் "இதையனுப்பியவர் யாரென்று யூகியுங்கள்" என்று டிக்கட்டுடன் வைத்திருந்த குறிப்பில் காணப்பட்டது.

டிக்கட்டுகளை அனுப்பியவர் யாரென்று தம்பதிகளால் யூகிக்க முடியவேயில்லை. டிக்கட்டில் கண்டிருந்த தினத்தன்று சினிமா காட்சிக்குச் சென்றனர். சினிமா பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தவுடன் திகிலடைந்தனர் தம்பதிகள். பூட்டை உடைத்துத் திருடர்கள் வீட்டுக்குள் புகுந்து இவர்களுடைய திருமணப் பரிசுகளையெல்லாம் கவர்ந்து சென்றுவிட்டார்கள். மூலையில் ஒரு சீட்டு அகப்பட்டது. அதில் இவ்வாறு எழுதியிருந்தது. "டிக்கட்டுகளை அனுப்பியவர் யாரென்பது இப்போது உங்களுக்குத் தெரியும்."

வாரந்தோறும் ஒரு கோடி ரூபாய் களுக்கு மேல் வியாபாரிகளுக்கு நஷ்டம் விளைவிக்கும் கூட்டம்.

லண்டன் நகரத்துப் பகல்திருடிகள்

●

மேல் நாடுகளில் திருடர்கள் கையாளும் வழிகள் சில மிகவும் விந்தையானவை. இரவு வேளைகளில் எல்லோரும் நித்திரைக்குச் சென்ற பிறகு வீட்டுக்குள் புகுந்து பொருள்களை திருடிக் கொண்டுபோவது பழைய வழியாகும். இருபதாம் நூற்றாண்டுத் திருடர்கள் கையாளும் வழி வேறுவிதம்.

உதாரணமாக லண்டன் நகரத்தில் ஒரு பெரிய கடைக்குள் சென்று பார்ப்போம். நம் நாட்டில் சில வீடுகளில் வைத்திருக்கும் விடி விளக்கைப் போல் ஒரு மின்சார விளக்கு கடையில் ஓர் அறையில் எப்போதும் எரிந்துகொண்டேயிருக்கும். இந்த விளக்கு, கடைக்குள் வரும் திருடர்களைப் பிடிக்கும் பொறுப்புள்ளவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகும்.

கடைகளிலிருந்து பொருள்களைத் திருடிக்கொண்டு போவோர்களில் பெரும்பாலும் ஸ்திரீகளே. இந்தத் திருடிகள் மூலமாய் வருஷந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய் விலை மதிப்புள்ள பொருள்கள் திருட்டுப்போய் விடுகின்றன.

இந்த ஸ்திரீகள் கையாளும் தந்திரங்கள் அநேகம். கடைச் சிப்பந்தியை ஏமாற்றிப் பொருள்களைத் திருடவே முடியாது. ஆகையினால்தான் இந்தத் தந்திரங்களைக் கையாளவேண்டியிருக்கிறது. இம்மாதிரித் திருட்டு வேலையிலீடுபட்டிருக்கும் ஒரு ஸ்திரீ எல்லாக் கடைகளுக்கும் போவதில்லை. ஒரே கம்பெனியின் நிர்வாகத்திலுள்ள கிளைக் கடைகளுக்குத்தான் போவாள். ஒரு கிளைக் கடைக்குச் சென்று அநேகஜதை ஜோடுகளைக் கால்களில் அணிந்துபார்ப்பாள். திடீரென "ஒரு புதுரக ஜோடு கொண்டுவா" எனச் சிப்பந்தியிடம்

கூறுவாள். சிப்பந்தி ஜோடுகளைக் கொண்டுவருவதற்காகத் திரும்பும்போது ஒரு இடது கால் ஜோடை மட்டும் தன் பையில் போட்டுக்கொள்வாள். சிப்பந்தி புது ரக ஜோடுகளைக் கொண்டுவரும் போது தான் மற்ளுெரு நாள் வந்து வாங்கிக் கொள்வதாகக் கூறி விட்டுக் கடையிலிருந்து வெளியேறுவாள்.

உடனே மற்ளுெரு கிளைக்கடைக்குச் சென்று ஒரு வலது கால் ஜோடைத் திருடிவிடுவாள். பிறகு இதே கம்பெனியின் மூன்ருவது கிளைக்கடைக்குச் சென்று தான் திருடிய ஜதை தன் கால்களுக்குச் சரியாயில்லை யெனக் கூறி ஜோடுகளின் கிரயத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு சென்று விடுவாள்.

இம்மாதிரித் திருட்டுகள் செய்வதற்காகவே அநேக ஸ்திரீகள் கொண்ட கூட்டுறவு சங்கமொன்றிருக்கிறதாம். சனிக்கிழமை மாலை வேளைகளில் கடைகளில் கூட்டம் ஏராளமாய் இருக்கும் போதுதான் இந்த ஸ்திரீகள் கடைகளில் திருடுவதற்குச் செல்வார்கள். ஒரு ஸ்திரீ திருட்டுப் பொருள்களை வாங்கி பத்திரமாய்ச் சேமிப்பதற்காக வெளியே காத்திருப்பாள். நாலைந்து ஸ்திரீகள் கடைகளின் உள்ளே செல்வார்கள். கடைக்குள் செல்லும் ஸ்திரீகள் திருட்டுச் சாமான்களை பத்திரமாய் வைத்துக்கொள்வதற்காக 'ஓவர் கோட்', 'பெல்ட்' முதலியவைகளை அணிந்திருப்பார்கள்.

கடைகளுக்குள் நுழைவதற்குமுன் கடையில் நடப்பவற்றை யெல்லாம் வெளியே நின்றுகொண்டு உன்னிப்பாய்க் கவனிப்பார்கள். இம்மாதிரி திருட்டு வேலைகளைக் கூட்டுறவு முறையில் நடத்துபவர்களுக்கு ஏராளமான பொருள்கள் குவிகின்றனவாம். கடைகளில் போதிய அளவிற்குப் பாதுகாப்புகளிருந்தும் இவர்கள் அமோக விலைமதிப்புள்ள பொருள்களைத் திருடிச்சென்று விடுகிருர்கள்.

கடைகளில் இவ்வித பகற்கொள்ளைகளிலீடுபட்டுள்ள ஸ்திரீகளில் சிலர் வாழ்க்கை வசதிகள் சரிவர இல்லாதவர்கள்தான். ஆனல் பெரும்பாலோர் திருடிப் பிழைக்கவேண்டிய நிலையிலுள்ளவர்களேயல்ல. இவர்களெல்லாம் தேவையான பொருள்களைப் பணம் கொடுத்து வாங்க வசதியுள்ளவர்களே.

நல்ல பொருள்களைக் கண்டால் எந்த மனிதரும் அவற்றை அடையவேண்டுமென்ற ஆசைகொள்வது சகஜம். கடைகளில்

பகற்கொள்ளைகளிலீடுபடும் ஸ்திரீகளனைவரும் இந்த ஆசையை அடக்கமுடியாதவர்கள் தான்.

திருட்டுப்போகும் பொருள்களில் நூற்றுக்கு 75 சதவீதம் கடைகளுக்குத் திரும்பக் கிடைத்துவிடுகின்றன. ஆனாலும் இந்தத் திருடிகளைக் கவனிப்பதும் இவர்களைத் தொடர்ந்து சென்று பொருள்களைத் திருடாமல் பாதுகாத்துக்கொள்வதும் கடை முதலாளிகளுக்குப் பெரும் சோதனையாகவும், பணச் செலவுக்குக் காரணமாகவுமிருந்து வருகிறது.

இந்தத் திருட்டு வேலைகளில் ஈடுபடும் ஸ்திரீகளனைவரும் 40 அல்லது 50 வயதானவர்களே. வாழ்க்கையில் இவர்களுக்குக் கிடைக்காத ஓர் இன்பத்தை இந்தத் திருட்டுமூலம் இவர்கள் பெறுகிறார்களென மனோதத்துவ நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

போலீஸார் வசம் அகப்பட்டுக்கொண்ட ஒரு ஸ்திரீ தன்னைப் பேய் பிடித்துக் கொண்டதென்றும் அதனால்தான் திருட நேர்ந்ததென்றும் கூறினளாம்.

ஒரு தோல்பையைத் திருடியதற்காகக் கைதான ஒரு ஸ்திரீ தன்னுடைய பை ரயில் பிரயாணத்தின் போது திருட்டுப்போனதாகவும் அதற்கு நஷ்ட பரிகாரமாகக் கடைக்குச் சென்று ஒரு பையைத் திருடியதாகவும் கூறினள்.

பெரிய கடைகளில் பொருள்களைப் பாதுகாப்பதற்காக உளவறிவோர்களை வைத்திருக்கின்றனர். இவர்களில் அநேகர் ஸ்திரீகள். அநேகர் போலீஸ் உளவறியும் இலாகாவிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்.

கடைகளில் உளவறியும் வேலைகளில் ஈடுபட்டவர்கள் இந்தத் திருடர்கள் யாரென்று அறிந்து கொள்வதற்காக, வழக்கு விசாரணைக்களுக்கெல்லாம் செல்வார்கள். இப்படிச் செல்வதால் திருடர்கள் யார் யார் என்று புலனவதோடு அவர்கள் கையாளும் வழிகளையும் அறிந்துகொள்ள சாத்தியமாகிறது.

கடைகளில் திருடும் ஆண்களும் ஸ்திரீகளும் எதற்குமஞ்சாதவர்கள். உளவு வேலைகளில் ஈடுபட்ட அநேகரை இவர்கள் சித்திரவதைசெய்துள்ளார்கள்.

———

ஒற்றைக் கண்ணன்

●

ஞானக்கண் உடையோருக்கு ஊனக்கண் எதற்கென்பது வேதாந்திகளின் கருத்து. ஆனால் ஊனக்கண்களில் ஒன்றை இழப்பது பெரும் துரதிருஷ்டம் என்பது தான் பொதுவான அபிப் பிராயம். நம் நாட்டில் சகஜமாயுள்ள "கிட்டி" ஆட்டம் போன்ற சில விளையாட்டுகள் மூலம் சிறுவர்கள் கண்களுக்கு அடிக்கடி ஆபத்து நேருவதுண்டு. இம்மாதிரி ஒரு கண் போனால் அது தலைவிதி, பொறுக்காமல் வேறென்ன செய்வது என்றெல்லாம் வேதாந்தம் பேசி மேல்நாட்டு முறைகளில் தக்க பரிகாரம் தேடாம லிருப்பதால்தான் இது ஒரு பெரிய துரதிருஷ்டமாயிருந்து வருகிறது.

மேல் நாடுகளில் இரண்டு கண்களுமே பறிகொடுத்த பின்ன ரும் அநேக துறைகளில் பிரபல ஸ்தானம் பெற்ற பெரியோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஹெலன் கெல்லர் என்ற அமெரிக்க மாது இதற்கு ஓர் உதாரணம்.

ஏதாவது காரணத்தால் ஒரு கண்ணையோ அல்லது இரண்டு கண்களையோ இழந்தால் மனிதனுக்கு மனோதிடம் தான் தேவை. ஒரு கண் இருந்தால் இரண்டு கண்கள் உள்ளவர்கள் போலவே சரிவர வாழ்க்கை நடத்தலாம். சிறிது காலத்திற்குச் சற்று சிரம மாய்த் தோன்றினாலும் பிறகு ஒரு கண்ணை வைத்துக்கொண்டு சமாளிப்பது சகஜமாகிவிடும்.

இரு கண்களால் பார்ப்பதற்கும் ஒரு கண்ணால் பார்ப்பதற் கும் முக்கிய வித்தியாசமென்னவென்றால் பொருள்களின் தூரத் தைப் பற்றிய மதிப்பு இரு கண்களுக்குத் தோன்றுவதுபோல ஒரு கண்ணுக்கு சரிவரத் தெரியாது. ஆனால் பழக்கத்தில் இந்தக் குறையையும் சற்று சரிகட்டிவிடலாம். ஒரு கண் போனதால் வாழ்க்கையிலுள்ள லட்சியத்தை மனிதன் கைவிடவேண்டாம்.

உழைப்பையும் குறைக்க வேண்டாம். பிரபல ஆங்கிலக் கவியான மில்ட்டனுக்கு நாற்பதாவது வயதில் ஒரு கண் ஊனமாயிற்று. அதற்குப் பிறகுதான் இவருடைய கவிதைகளில் மிகச் சிறந்ததெனக் கொண்டாடப்படும் அநேக காவியங்களை இயற்றினர்.

சமீபத்தில் இந்தியாவில் வைஸ்ராயாயிருந்த லார்டு வேவலுக்கு ஒரு கண்தான் இருந்ததென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவர் பிரிட்டிஷ் ராணுவத்தில் ஒரு பிரபலத் தளபதியாயிருந்தார்.

அயர்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஒரு பிரபல எழுத்தாளருக்கு அறுபது வயதுக்கு மேல் ஒரு கண் போய்விட்டது. இதைப்பற்றி இவர் பின்வருவாறு எழுதுகிறூர். "ஒரு கண் இருப்பதைவிட இரண்டு கண்கள் இருப்பது மேன்மை; இதை என் அனுபவத்தின் மூலம் அறிவேன். ஒரு மரத்தின் கிளையை வெட்டுவதில் என்னுடைய திறமையை நான் என் நண்பர்களுக்குக் காண்பித்தேன். வெட்டும் பாகத்தை ஒரு கையால் பிடித்துக்கொண்டு மற்ருெரு கையால் வெட்டாமல் ஒரே கையால் கிளையை வெட்டித் தள்ளிக்கொண்டிருந்தேன். திடீரென்று வெட்டப்பட்ட மரக்கிளை என் கண்ணை நோக்கிப் பாய்ந்தது. அதை நான் மற்ருெரு கையால் பிடித்திருந்தால் கண்ணில் விழுந்திராது. இரு கண்களும் இல்லாவிட்டாலும் ஒரு கண்ணுவது எனக்கிருப்பதை ஒரு பெரும் பாக்கியமாய்க் கருதுகிறேன்" இந்தச் சம்பவம் எல்லோரும் கவனிக்கவேண்டியது.

ஒரு கண் மட்டுமிருந்தால், அது இரு கண்களின் வேலையைச் செய்ய நேரிடுகிறதென்றும், அதனல் அந்த ஒரு கண்ணுக்கும் தீங்கு ஏற்படுமென்ற கொள்கை மிகத் தவருகும். இரு கண்களிருப்போருக்கு, ஒவ்வொரு கண் செய்யும் வேலையைத்தான் ஒரு கண்ணே உடையவர்களின் கண்ணும் செய்கிறது.

ஞான சம்பத்து

கு. ப. சேது அம்மாள்

●

தன் உயிர்க்குயிராகிய பார்த்தனுக்கு நாளைக்கு நேரவிருக்கும் பேராபத்தைத் தடுப்பதெப்படி?

இந்த யோசனையில் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தார் கிருஷ்ணன். தமையனை ஒவ்வொரு இடமாகத் தேடிக்கொண்டு அங்கு வந்த சுபத்திரை "எங்கெல்லாம் தேடிக்கொண்டு வருகிறேன். இங்கா இருக்கிறீர்கள், அண்ணா!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப்பார்த்து "வா அம்மா, உட்கார். என்ன வேண்டும் உனக்கு?" என்று பரிவோடு கேட்டார் ஸ்ரீதரன்.

சுபத்திரை தமையனை வணங்கி, "அண்ணா..." என்றாள். மேலே பேச இயலாமல் வார்த்தை தடைப்பட்டது.

"என்ன சமாசாரம் குழந்தாய்?" மீண்டும் பரிவோடுகேட்டார் பரந்தாமன்.

"எல்லாம் அறிந்தும் என்ன சமாசாரம் என்று கேட்கிறீர்களே அண்ணா,...மாங்கல்யமாவது இருக்கத் தாங்கள் பிரயத்தனம் செய்யவேண்டாமா..." என்று விக்கியபடி கேட்டாள் சுபத்திரை.

திடுக்கிட்டார் முரளிதரன். நாளை யுத்தத்தில் அபிமன்யு மாளவிருப்பது இவளுக்கு எப்படித் தெரிந்தது?

"அண்ணா, எப்படி எனக்குத் தெரிந்தது என்று பிரமிக்கிறீர்கள். தங்களுடன் பிறந்ததற்கு இந்த ஞானமாவது வேண்டாமா எனக்கு? அபிமன்யுவை இழந்த பிறகு தன் உயிரை வைத்திருப்பாரா எனது நாதன்?"

"சுபத்திரே, அதைத்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்..."

"யோசிக்க நேரமில்லை, அண்ணா. அதோ சூரியன் அஸ்தகிரியில் இறங்குகிறான். தாமதிக்காதீர்கள், எழுந்திருங்கள்..."

"எழுந்து?"

"தங்கள் மனத்தில் தோன்றிக்கொண்டிருப்பதை அறிகிறேன். யுத்தம் முடியும் தருணம் நெருங்கிவிட்டது..." என்று கூறித் திரும்பும் சமயம் அங்கே வந்த ருக்மிணி, "என்ன விசேஷம் சுபத்திரே—எனக்குத் தெரியாமல் உன் தமையனுருடன் என்ன ரகஸ்யம்!" என்று ஹாஸ்யமாகக் கேட்டாள். வேதனை நிறைந்த அந்த மனநிலையிலும் புன்முறுவலுடன் "ஆம் தேவி, எங்களுக்குள் எவ்வளவோ ரகஸ்யங்கள் இருக்கும். அதையெல்லாம் உங்கள் காதில் போடக்கூடாது!"

என்று கூறிவிட்டு "போய் விட்டு சற்றுப் பொறுத்து வருகிறேன் தேவி!" என்று ருக்மிணியிடம் விடைபெற்றுக் கொண்டு சென்றாள் சுபத்திரை.

அவள் மறைந்ததும், "ப்ரியே, சுபத்திரை இந்தச் சிறிய வயதில் இவ்வளவு ஞானியாகி விட்டது பேராச்சரியமாக இருக்கிறது..."

"என்ன சொல்லுகிறீர்கள், பிரபோ?" என்று கொஞ்சம் பீதியுடன் கேட்டாள், ருக்மிணி.

"ஒன்றுமில்லை. வெறும் உண்மையை!" என்று சிரித்தார் பகவான். ஆனால் அவர் முகத்தில் வியாகூலம் பிரதிபலித்ததைக் கண்ட ருக்மிணி அரண்டுபோய் நின்றாள்.

"தேவி, தாமதிக்க நேரமில்லை. ஆயினும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். நாளை யுத்தத்தில் அபிமன்யு வீர சுவர்க்கம் புகவிருக்கிறான்..."

"ஹா, ஐயோ," என்று பதைத்தாள் ருக்மிணி.

"ஆம்! ரணதீரனும், பிரதாபசாலியுமான புத்திரனை இழந்த அர்ஜுனன் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள..."

காதுகளைப் பொத்திக்கொண்டவாறு "நாத இதைத் தவிர்க்க வழியில்லையா?"

"தேவி, அபிமன்யு மரணத்தைத் தடுக்க இயலாது. அதை நிச்சயமாக அறிந்த சுபத்திரை, ஏதாவது உபாயம் செய்து அர்ஜுனன் உயிரைக்காத்து ஆக வேண்டும் என்பதைச் சொல்லி வந்தாள். அதையும் இப்பொழுதே செய்தால்தான் உண்டு..."

"இருங்கள், அபிமன்யு முடிவைப் பற்றி சுபத்திரை அறிவாளா பிரபோ?"

"அறிந்து கொண்டதோடுமட்டுமல்ல; தேவி, மகத்தான புத்திர சோகத்தை—அவன் யுத்தத்தில் மடியப்போவதை முன்னதாக அறிந்து—அவன் ரணரங்கம்புகு முன் தன் தாயிடம் உத்தரவு பெற வந்து வணங்கி நிற்கும் போது அவள் உள்ளம் என்ன பாடுபடும்? புத்திரனிருக்கும் போதே--அவன் இறந்துபோகப் போகிறான் என்பதை அறிந்து கொண்டு—அதை மனசுக்குள்ளேயே புதைத்துக்கொண்டு—தன் துக்கம் பெரிதல்ல—தான் தெய்வம் என வழிபடும் தன் நாதனுடைய உயிரைக் காப்பாற்றவேண்டும் என்ற பிரதிக்ஞையுடன் என்னை நாடி வந்து அர்ஜுனன் உயிரைக்காக்க, என்னவாவது செய்து எனக்கு மாங்கல்ய பிக்ஷை கொடு என்று மன்றாடவந்தவளை-நீ, விஷயமறியாமல் பரிஹாஸம் செய்தாய்! அதையும் ரஸித்தவள் போல பதில் சொல்லிவிட்டுப் போகும் அவளுடைய ஞான ஸம்பத்தை எப்படிப் புகழ்வது தேவி?"

"நாத, இதெல்லாமிருக்கட்டும். அபிமன்யுவைக் காக்க வழி தேடுங்கள்......முன்பு..."

"அது பிரயோஜனமில்லை தேவி...அபிமன்யுவின் ஆயுள் மிக அற்பமானது..."

"ஐயோ......கர்ப்பவதியான உத்தரை என்ன ஆவாள்?"

"ஒன்றும் ஆகமாட்டாள்! அர்ஜுனனுக்குப் பேரன் பிறப்பான்!"

"பேரன் பிறப்பது இருக்கட்டும். அபிமன்யு மாண்டபிறகு, பார்த்தன் உயிர்வைத்திருப்பாரா?—அனைவரும் கூட்டோடு கைலாசமாகி விடுவார்களே பிரபு...ஆ! இதற்கா யுத்தம் மூண்டது? சுபத்திரே, என் கண்மணீ—இந்தக் கதிக்கா...... அர்ஜுனனை வரித்து மணந்து கொண்டாய்?......" என்று சுபத்திரை மீது வைத்த அளவற்ற பாசத்தால் துடிதுடித்துக் கண்ணீர்பெருக்கினாள் ருக்மிணீ.

பரந்தாமன் இரக்கத்துடன், "தேவி, சாந்தியடைவாயாக. காலகதியை மீற யாரால் முடியும்? சுபத்திரை அதை நன்கு அறிந்து திடமடைந்துவிட்டதுதான் எனக்கு அடங்காத ஆச்சரியம். இனி நான்— அர்ஜுனனுடைய உயிர் நிலைக்க வழி செய்யவேண்டும். உத்தரவு கொடு தேவி, திரும்பி வந்து உனக்கு யாவும் தெரிவிக்கிறேன். நாழியாகிவிட்டது. அதோ யுத்தபேரிகைகள்...அர்ஜுனன், பாசறையை அடையு முன்பு அவனைப் பதப்படுத்தி ஆகவேண்டும்." என்று கூறிவிட்டு பரபரப்புடன் எழுந்து தொலைவில் நடந்து செல்லும் அர்ஜுனனை நாடிச் சென்றார் பரந்தாமன்.

(தொடரும்)

அச்சமும் கவலையும் தவிர்

●

அச்சமும் கவலையும் மக்களின் பெரிய பகைகளாகும். அச்சத்தைத் தவிர உலகத்திலேயே அச்சமடைய வேண்டியது வேறு ஒன்றும் இல்லை. அச்சத்தை ஒழித்துவிட்டால் மக்கள் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். வாழ்ந்திருக்கவேண்டிய உறுதி அச்சங் காரணமாக, சாகவேண்டிய உறுதியாக மாறிவிடுகிறது. வாழ்க்கைக்கு வழி, துணிவும் நம்பிக்கையுமே ஆகும். அவ்வாறே அச்சம் சாவுக்கு வழியாய் இருக்கிறது. அச்சமுள்ளவர்கள் அநாவசியமாகத் தாங்களே கற்பனை செய்து கொள்ளும் கவலைகளாலும், தொல்லைகளினாலும் வருந்திக்கொண்டிருப்பார்கள். உடம்பின் ஒவ்வொரு பகுதியின் வேலையும் மனிதனது கருத்துக்கேற்ப நடைபெறுகிறது. அச்சத்தாலும் கவலையாலும் வருந்துவோர் ஒவ்வொரு நாளும் தங்கள் உடம்பில் அசுத்தமான நஞ்சை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்த நஞ்சு பெருகி உடம்பில் பலவீனமான பாகங்களில் சேர்ந்து க்ஷயரோகம், தலைவலி, அஜீரணம், கட்டிகள் முதலியனவாக உருவாகின்றன. பல நச்சுப் பிராணிகளில் இதற்கு உதாரணம் காணலாம். ''போவா'' என்ற பாம்பு சாதாரண சமயங்களில் வெள்ளை நிறமாக இருக்கிறது. அதற்குக் கோபம் உண்டாகும்போது அல்லது ஏதேனும் இடையூறு ஏற்படும்போது அதன் தோல் மிகுந்த சிவப்பாக மாறி விடுகிறது. பச்சோந்தியின் நிறம் அதன் குண வேறுபாடுகளுக்கேற்ப மாறுகிறது.

விஷ ஜந்துக்கள் சாதாரண காலங்களிலும் ஒருவகை நீரை உற்பத்தி செய்துகொண்டிருக்கின்றன. அவை தீமையற்றவை. ஆனால் ஒவ்வொரு பிராணியும் அச்சத்தினாலோ, கவலையினாலோ தன்னைப் பாதுகாக்குமாறு ஒரு வகையான நஞ்சை உற்பத்தி செய்கின்றது. ஆனால் அந்த நஞ்சு ஒரு காலத்தில் தீங்கற்றதாயிருக்கு

தற்காப்பின் பொருட்டு, மாறிய நீரேயாகும். நல்ல பாம்பினிடம் அது அச்சமடையும் வரை அதில் எவ்வித விஷமும் இல்லை. அது போலவேதான் மக்கள் நிலையும். நல்ல பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக அச்சங் காரணமாக மக்கள் நச்சுத்தன்மை உள்ள பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள். அதுவே அவர்களுக்குக் கேடாய் முடிகிறது.

பித்தர்கள் இருவகையினர் ஆவர். ஒரு வகையினர் கவலையும் சோர்வும் கொண்டவர்கள். அதன் பயனை அவர்கள் குளிர்ந்த உயிரற்ற கண்களில், வெளிறிய முகங்களில், சுருங்கிய கன்னங்களில், உறுதியற்ற நடையில் காணலாம். மற்றொரு சாரார் தங்களைப் பற்றி உயர்வாக நினைத்துக்கொண்டிருப்பவர்கள். அவர்கள் நடை கம்பீரமாக இருக்கிறது. அவர்கள் பலசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களது கன்னங்கள் கொழுமையாய் இருக்கின்றன. அவர்கள் நெடுநாள் வாழ்கிறார்கள். கவலையுள்ளவர்கள் தைரியசாலிகளாக மாறிவிடலாம். அப்பொழுது அவர்களது உடம்பு அதற்கு ஏற்றவாறு மாறிவிடும். உள்ளம் மாறினால் உடம்பும் மாறுகிறது. அச்சத்தை ஒழித்துத் துணிவைக் கொண்டால் அதற்கேற்ப ஆக்கையும் மாறுகிறது.

ஒரு மனிதன் அச்சமடையும்பொழுது அவன் ஹிருதயம் படபடவென்று துடிக்கிறது. உடம்பின் யந்திரம் முழுமையும் வேலை நடைபெறாமல் நின்றுவிடுகிறது. உதாரணமாக குழந்தைக்கு அதன் தாய்ப்பால் செழுமை அளிக்கிறது தாய்க்கு ஏதாவது கவலை ஏற்படட்டும், அல்லது மனத்தில் பயம் ஏற்படட்டும். தாய்ப்பால் குழந்தைகளுக்கு நஞ்சாக மாறிவிடும். சில சமயங்களில் அவ்வித நஞ்சுக்குச் சமானமான பாலைக் குடித்துக் குழந்தைகள் மரணமடைந்த சம்பவங்கள் இல்லாமல் இல்லை.

குழந்தைகளுக்குப் பலவிதமான பேய்க் கதைகளைச் சொல்லும் பொழுதும் அவர்களிடம் அச்சம் குடிகொள்கிறது. குழந்தைப் பருவத்தில் அவர்களிடம் அச்சத்தை ஊட்டுகிறோம். அவர்கள் வளரும்பொழுது, அச்சம் பெருகி வளர்ந்து இறுதியில் நரம்புத் தளர்ச்சியில் முடிகிறது. அச்சம் குழந்தைகளைக் கூச்சமுள்ளவர்களாயும் செய்கிறது. அவர்களது இளமையைக் கெடுத்துவிடுகிறது. அவர்களிடம் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது. மக்களி

டம் இருனுல் ஊக்கம், ஞாபக மறதி, உறுதி முதலிய வன்மைக் குணங்களைக் குறைத்துவிடுகின்றன. வாழவேண்டிய மனம் சாக வேண்டியதாக மாறிவிடுகிறது. வெற்றியுடன் வாழ்வதற்கும், தோல்வியுடன் சாவதற்கும் உரிய இயற்கை மக்களிடம் அமைந்திருக்கிறது.

மனுநூலின் அறிவு மக்களை வாழ்விக்கச் செய்யவல்லது. அது அவர்கள் உள்ளத்தில் ஊக்கம், ஞாபக சக்தி, உறுதி இவற்றை அளிக்கிறது. உடம்பில் அது சுகத்தையும் பலத்தையும் உயிரையும் உறுதியையும் உண்டாக்குகிறது. தொழிலிலும் அது செழுமையளிக்கிறது. உலகத்தில் ஒருவன் செய்யக்கூடிய சிறந்தவேலையைச் செய்யுமாறு தூண்டுகிறது.

உலகத்தில் மிகச் சிலர்தான் வெற்றியுடன் செல்கின்றனர். மற்றவர்கள் பின்னே நிற்கின்றனர். வெற்றியுடன் செல்லும் கூட்டத்தில் மக்கள் சேரவேண்டும். மக்களிடம் மறைந்துகிடக்கும் சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வாழ்க்கையின் நோக்கத்தை மறந்துவிடக்கூடாது. உள்ளத்தையும் உடம்பையும் கட்டுப்படுத்தியிருக்கும் கட்டுகளை உதறித்தள்ளவேண்டும். பெரிதும் அன்பு செய்யவேண்டும். எதையும் வெறுக்கவேண்டாம். உலக நலத்துக்குமாறுபட்ட நோக்கங்கள் எவற்றையும் கொள்ளாதீர்கள். மனத்தின் விதிகளை நன்று அறிந்துகொள்ளுங்கள். அதற்கேற்ப உலக விஷயங்கள் பணிந்து நடக்கும்.

—எம். கே. எஸ்.



மூன்று பெண்டாட்டிக்காரர்கள்

●

அமெரிக்காவில் மார்மண் என்ற ஒரு வகுப்பார்கள் வசிக்கிறார்கள். இவர்களுக்கும் மற்ற அமெரிக்கர்களுக்கும் வித்தியாசமென்னவென்றால், இந்த வகுப்பைச் சேர்ந்த ஆண்கள் எல்லோரும் இரண்டு மூன்று மனைவிகளை மணந்துகொள்வது சகஜம். மேல்நாடுகளில் ஒரு மனைவிக்குமேல், இன்னொரு மனைவியை மணந்துகொள்வது சட்ட விரோதமாகும். ஆனால் மார்மண் இனத்தாரின் வழக்கமோ மேற்கூறியவாறு ஆகும்.

இரண்டு மூன்று மனைவிகளிருந்தால் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளுக்குக் கணக்கேது? இரண்டே மனைவிகளுள்ளவர்கள் ஒரு நாள் ஒரு மனைவியுடனும் மற்றொரு நாள் மற்றொரு மனைவியுடனும் வாழ்க்கை நடத்தலாம். மூன்று அல்லது நான்கு மனைவிகளை மணந்தவர்கள் எந்தெந்தக் கிழமை எந்தெந்த மனைவியுடன் வாழவேண்டுமென்று கணக்கிடவேண்டியதுதான்.

சிலர் தாம் மணந்துகொள்ளும் மனைவிகளைப் பக்கத்துப் பக்கத்து வீடுகளில் வாழ வசதி செய்திருப்பார்கள். சிலர் ஒவ்வொரு மனைவியை ஒவ்வொரு ஊரில் வசிக்க ஏற்பாடு செய்திருப்பார்கள். இம்மாதிரி செய்பவர்களுக்கு ஊர் ஊராகச் சென்று அலைந்து கொண்டிருப்பதே தலைவிதியாகும். சிலர் எந்தெந்த மனைவி வீட்டிற்கு எப்போது போக அவசியம் நேருகிறதோ அப்போது தான் செல்வார்கள். ஒரு மனைவியின் வீட்டில் யாருக்காவது தேக அசௌக்கியமோ, மற்ற அசந்தர்ப்பமோ ஏற்பட்டால் அடுத்த மனைவியின் வீட்டுக்குப் போகவேண்டிய தினம் தப்பிவிடும்.

ஒரு மார்மண் மாது தன் தந்தையின் வாழ்க்கையைப்பற்றி இவ்வாறு எழுதுகிறாள்: "எனது தந்தை ஒவ்வொரு மனைவியுடன் ஒவ்வொரு வாரம் தங்குவார். காலையில் எழுந்திருந்ததும் அடுப்பை

மூட்டிக் காலை உணவைத் தயாரித்து மனைவியையும் குழந்தைகளை யும் எழுப்பி அவர்களுக்கெல்லாம் உணவளித்து அவ்வீட்டி லுள்ள மாடுகன்றுகளுக்கும் தீனிபோட்டுவிட்டு அடுத்த மனைவி யின் வீட்டிற்குச் செல்வார். அவ்விடமும் இவ்வாறே அடுப்பை மூட்டி உணவைத் தயாரித்து மனைவியையும் குழந்தைகளையும் எழுப்பி ஆகாரம் கொடுத்துவிட்டு மாடுகளுக்கும் தீனி கொடுத்த பின்பு அடுத்த மனைவியின் வீட்டிற்குச் செல்வார். காலையில் எந்த மனைவியின் வீட்டிலிருந்து புறப்பட்டாரோ அந்த மனைவியின் வீட்டிலே இரவில் தங்குவார். இவர் ஆடைகள் ஏதாவது கிழிந்து போயிருந்தால் ஒவ்வொரு மனைவியும் மற்ற மனைவிகள்தான் தைக்கட்டுமே என்று விட்டுவிடுவார்களாம்.

மூன்று மனைவிகளை மணந்த ஒருவர் மூன்றுபேர்களும் தனித் தனியாக சௌகரியமாக வாழ வசதி செய்திருந்தார். இவர் ஒவ் வொருவருடனும் ஒவ்வொரு வாரம் தங்குவார். மாதாகோயில், நடனகேளிக்கைகள், விருந்து முதலியவற்றிற்குச் செல்லும்போது அந்த வாரம் எந்த மனைவியுடன் தங்குகிறாரோ அந்த மனைவியுடன் செல்வார். மற்ற மனைவிகள் இந்த இடங்களுக்குச் சென்றாலும் அவர் பக்கத்தில் உட்காரக்கூடாது. தன்னுடைய மோட்டார் காரில் இவர் பிரயாணஞ் செய்யும்போது எல்லா மனைவிகளையும் அழைத்துச் சென்றாலும் அவர் பக்கத்தில் உட்காரும் உரிமை அந்த வாரத்திய மனைவிக்குத்தான் உண்டு. அந்த வாரத்திய மனைவிக்கு உடல் நலமில்லாமல் வீட்டிலேயே தங்க நேரிட்டால் அவளுடைய இடம் காலியாகத்தானிருக்கும். வேறு மனைவி களுக்கு அங்கு உட்கார உரிமை கிடையாது. இவர் மனைவி களுக்குச் சன்மானப் பொருள்களை வாங்கிக் கொண்டுவரும்போது மூன்று பொருள்கள் வாங்கிவருவாராம். எந்த மனைவிக்கு எந்தப் பொருள் சேரவேண்டுமென்று மனைவிகள் சீட்டுப்போட்டே தீர்மானிப்பார்களாம்.

CONSULT

K. M. S. PRESS

1-C 17, DINROZE ESTATE

MOUNT ROAD

MADRAS-2

FOR

ALL HIGH CLASS

JOB WORKS

AND

BOOK WORK

IN

ENGLISH & TAMIL

நீதித்துறையும் நீண்ட ஆயுளும்

நீதி ஸ்தலத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. எல்லா தேசத்திலும் பிரபல நியாயவாதிகளும், நீதிபதிகளும் வயது முதிர்ந்தவர்களே அதிகமாக இருக்கிறுர்கள்.

இங்கிலாந்திலுள்ள பிரபல நீதிபதிகள் அநேகரும் எண்பது வயதுக்கு மேல் வாழ்ந்து வந்திருக்கிறுர்கள். இங்கிலாந்தில் அமலிலிருக்கும் சட்டங்களைப் பற்றி ஒரு பிரசித்திபெற்ற நூலை எழுதியுள்ள ஹால்ஸ்பெரி என்பவர் தொண்ணூற்றெட்டு வயதுவரையிலும் வாழ்ந்திருந்தார்.

1944-ஆம் ஆண்டில் காலஞ் சென்ற கனடாவின் பிரதம நீதிபதியாயிருந்த முலாக் என்பவர் இறக்கும்போது நூறு வயதாம்.

இந்தியாவிலும் முதிர்ந்த வயதடைந்த பிரபல நீதிபதிகளும் நியாயவாதிகளும் பலர் இருந்திருக்கின்றனர்.

நீண்ட ஆயுள், நீதித்துறையைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் கிடைக்கும் பாக்கியமாகும். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த விக்டோரியா ஹைகோர்ட்டின் வாசகசாலை அதிகாரி ஒருவர் ஐம்பத்து மூன்று ஆண்டுகள் அந்த வாசகசாலையில் அலுவல் பார்த்தாராம். அவருக்குப்பின் வந்தவரும் அந்த வேலையில் சுமார் நாற்பதாண்டுகளாக இருந்து வருகிறுராம். இங்கிலாந்தில் ஒரு வக்கீல் குமாஸ்தா அறுபத்தெட்டரை ஆண்டுகள் இந்த வேலையிலீடுபட்டிருந்தாராம். இன்னெருவர் எண்பது வருஷங்கள் இந்த வேலையைக்கவனித்து வந்தாராம்.

ஆஸ்திரேலியாவில் ஒரு ஹைகோர்ட்டில் சுத்தஞ் செய்யும் வேலையிலீடுபட்டிருந்த இரு சகோதரிகள் தொண்ணூற்றேழு ஆண்டுகள் இதே வேலையைச் செய்துவந்தார்களாம்!

மிருகங்களுக்கும் மரணச் சடங்குகள்

ஜப்பான் தேசத்தில் மனிதர்கள் மாண்டால், சவச்சடங்குகள் செய்வதுபோலவே, நாய், குதிரை, பூனே, ஆடு, குரங்கு முதலிய மிருகங்கள் இறந்து போனலும் சவச்சடங்குகளேச் செய்கிருர்கள். டோக்கியோ நகரத்தருகேயுள்ள ஒரு மயானத்தில் முப்பதாயிரம் மிருகங்கள் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கின்றன.

புத்த மதத்தின் முக்கியமான ஒரு கோட்பாடு எல்லா ஜீவ ராசிகளிடத்திலும் ஒன்று போலவே அன்புகாட்டுவதாகும். இதையொட்டியே தான் ஜப்பானியர்கள் மனிதர்களுக்குரிய சவச்சடங்குகளே மிருகங்களுக்கும் அனுஷ்டித்து வருகிருர்கள்.

ஒரு நாயோ குதிரையோ மாண்டால் இவற்றின் சவச்சடங்கின் செலவு மூன்றல்லது நான்கு ரூபாய்கள் வரை ஆகும். முன் காலத்தில் இறந்துபோன மிருகங்களே எரித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது கரிக்குப்பஞ்சமாயிருப்பதால் இறந்து போன மிருகங்களேப் புதைத்தே விடுகிருர்கள்.

இறந்த மிருகத்தை மயானத்திற்குக் கொண்டுவந்தவுடன் வெண்மையான ஆடைகளே அணிந்துகொண்டுமயானத்தைச் சேர்ந்தவர்கள் குழியைத் தோண்டுவார்கள். புரோகிதர் புத்தமத மந்திரங்களே ஜெபிப்பார். மாண்டுபோன மிருகத்தின் ஆத்மா சாந்தியடையுமாறு ஆண்டவனேப் பிரார்த்திப்பார். பிறகு மிருகத்தைக் குழியில் அடக்கஞ்செய்து அதன் மீது கல்லே நாட்டுவார்கள்.

மிருகங்கள் உயிரோடிருக்கும் போது இவற்றிற்குச் செல்லப் பெயர்கள் இருப்பது வழக்கம். இவை மாண்டவுடன் இவற்றிற்கு வேறு பெயர்கள் கொடுத்து அந்தப் பெயர்களேத் தான் கல்லில் பொறித்து வைக்கிருர்கள்.

மனிதன் மாண்டால் உறவினர்கள் அழுவதுபோலவே. ஜப்பானியர்கள் மிருகங்கள் மாண்டுபோனல் அழுவார்கள்.

அடக்கஞ் செய்த நாருவது தினத்தன்று புத்ததேவருக்குப் பிரார்த்தனேயும் நிவேதனமுஞ் செய்து மிருகங்களே அடக்கஞ் செய்த இடத்தில் விளக்கேற்றி வைப்பார்கள்.

பைத்தியக்காரர்களுக்கு ஒரு சுவர்க்கம்

•

பெல்ஜியம் தேசத்தில் விசேஷமான நகரம் ஒன்று உள்ளது. அந்த நகரவாசிகளனைவருமே பைத்தியக்காரர்களும் அவர்களுக்கு சிஷ்ருஷை புரிபவர்களுமே. அநேக நூற்றுண்டுகளாக இந்த நகரம் பைத்தியக்காரர்களுக்குப் பிரத்யேக வசதியளிக்கும் நகரமாக விளங்குகிறது. இங்கு பைத்தியக்காரர்களுக்குச் சிகிச்சை செய்யும் முறைகளை, வைத்தியப் பிரபஞ்சத்தார் மிகவும் உயர்தரமானவை என்று பாராட்டியுள்ளார்கள்.

இந்த நகரத்திற்குச் செல்பவர்களுக்கு, இதற்கும் வேறு நகரங்களுக்கும் வித்தியாசமொன்றும் தோன்ருது. ஏனென்றுல் பைத்தியக்காரர்கள் தனியாக ஆஸ்பத்திரியில் இராமல் பொது மக்கள் மத்தியிலேயே நடமாடுகிருர்கள். மூளைக் கோளாறிறுல் பாதிக்கப்பட்டவர்களை இந்த நகரத்தார் அன்போடு வரவேற்று அவர்கள் நோயைக் குணமாக்குவதற்கு மிகுந்த சிரத்தையெடுத்துக் கொள்கிருர்கள்.

இந்த நகரத்தின் ஸ்திரவாசிகள் அனைவரும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். வெகு நாளைய பழக்கத்தால் பைத்தியக்காரர்களின் சேஷ்டைகளையும் குணுதிசயங்களையும் பற்றி நன்கு அறிந்தவர்கள். சாதாரண மனிதர்களுடன் தொழில்களிலும் ஈடுபடுவது பைத்தியத்தைக் குணமாக்க ஒரு சிறந்த வழி என்று கருதுபவர்கள்.

இந்த இடத்திலுள்ள நகர சபைவெளியூர்களிலிருந்துவரும் பைத்தியக்காரர்களை வரவேற்பதற்கும் அவர்கள் தங்கி நோயைக் குணமாக்கிக் கொள்வதற்கும் தகுதியான இருப்பிடங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் பொறுப்பெடுத்துக் கொள்ளுகிறது. இந்த நகரத்தில் ஸ்திரமாய் வசிக்கும் நாலாயிரம் குடும்பத்தார்களில் சுமார் இரண்டாயிரத்திற்குமேல் பைத்தியக்காரர்களை சம்ரக்ஷிப்பவர்கள். நாணயம் பொருந்திய கண்ணியமான குடும்பத்தினர் என்று நகர சபையின் அங்கீகாரம் பெற்றுல்தான் பைத்தியக்

காரர்களை ஏற்றுக்கொண்டு சம்ரக்ஷிக்கலாம். பைத்தியக் கார நோயாளிகளை நகரசபையார் அந்த நகரத்தில் தங்குவதற்கு அனுமதி கொடுத்தால் நோயாளியின் விருப்பப்படி எந்த வீட்டிலாவது தங்கிக் கொள்ளலாம். அந்த வீட்டு குடும்பத்தினர் ஈடுபடும் தொழிலில் நோயாளிகளும் ஈடுபடலாம். நோயாளிகளின் குடும்பத்தினர் நோயாளிகளைப் பராமரிக்க செலவாகும் பணத்தை அவர்களை ஏற்றுக்கொள்ளும் குடும்பத்தார்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். இப்படிக் கிடைக்கும் பணத்தில் ஒரு விகிதத்தை இவர்கள் நகரசபைக்கு கொடுப்பார்கள். இவ் விகிதமூலம் சேரும் பணத்தை அகதியான பைத்தியக்கார நோயாளிகளுக்காக செலவிடுகிருர்கள் நகரசபையார்.

சமாளிக்க முடியாத முரட்டுத்தனமான பைத்தியக்கார நோயாளிகளை இந் நகரத்தில் சேர்ப்பதில்லை. இந்த நகரத்தைச் சேர்ந்தவர்கள் அவரவர்கள் ஊர்களிலுள்ள பைத்தியக் கார ஆஸ்பத்திரிகளில் தான் சிகிச்சை பெறவேண்டும்.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C. MATERIALS

Prices Moderate

நீர் அற்புதமான அமிர்தம். ஆனால் அறிவற்றவர்களால் நஞ்சாகவும் மாறிவிடுகிறது.

ஜல-தோஷங்கள்

நீர் அமிர்தத்திற்குச் சமானம் என்று "நீர் என்னும் அற்புதம்" என்ற கட்டுரையில் படித்தீர்கள். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும் என்ற பழமொழியை மறக்கக்கூடாது. நீரை அருந்துவதால் நித்திரையில்லாதவர்களுக்கு அயர்ந்த நித்திரை வருமென்றும் ஜலதோஷத்தை தவிர்க்கலாமென்றும் பருமனாயிருப்பவர்கள் இளைக்கலாமென்றெல்லாம் நினைப்பது மூடநம்பிக்கையாகும்.

உண்மையில் அளவுக்கு மீறி நீரை அருந்தினால் நித்திரை கெடுவதோடு அஜீரணம் முதலிய நோய்களும ஏற்படுகின்றன. அளவுக்கு மீறி நீரை அருந்துவதால் போதையும், ஏன் மரணமும் கூடச் சம்பவிக்கலாம்.

நீர் இல்லாமல் ஜீவராசிகள் உயிர் வாழ முடியாதென்பது வாஸ்தவம்தான். ஆனால் அதை உபயோகிப்பதிலும் சில கட்டுப்பாடுகள் இல்லாவிடில் நீரினால் தீங்குதான் விளையும்.

அபரிமிதமாய் நீரை அருந்துவது ஆரோக்கியத்தை அளிக்கிறதென்று சிலர் கருதுகிறார்கள். சிலர் தினந்தோறும் நாலைந்து தடவைகள் காப்பி, டீ அருந்துவதைத் தவிர ஆகாரவேளையில் நீர் அருந்திக் கொண்டேயிருப்பார்கள். ஆகாரத்திலும் 'சூப்' முதலிய நீரான ஆகாரவகைகளும் உண்டு. இதைத் தவிர ஆரஞ்சு முதலிய பழரஸங்கள், பால், இவற்றையும் தினமும் அருந்துவதுண்டு. இவ்விதமாக அநேக ரூபங்களில் நீரை உட்கொள்வதால் மூத்திரப்

பைகளுக்கு வேலை அதிகமாகிறது. அதனால் தேகம் பலவீனமடைகிறது.

'கோடைகாலத்தில் குடங்குடமாய் யாவரும் நீர் அருந்துவது வழக்கம். பாலைவனவாசிகள் கூட கொஞ்சம் கொஞ்சமாய்த் தான் நீர் அருந்துவார்கள். அப்படிச் செய்வது தான் ஆரோக்கியமாகு மென்பது இவர்கள் கருத்து. சென்ற வருஷம் அமெரிக்காவிலுள்ள ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளிகள் அநேகருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு 'க்யூ' வரிசையில் நின்று கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். ஆஸ்பத்திரியில் நர்ஸ் சோதித்ததில் இவர்களுக்கு ஒரு நோயும் இருப்பதாகத் தெரியவில்லை. பிறகு டாக்டர் வந்து சோதித்தார். டாக்டர் முதலில் இவர்களைக் கேட்டகேள்வி "நீங்கள் அளவுக்கு மீறி நீரை அருந்தினீர்களா" என்பதாகும்.

"ஆம்" என்று அவர்கள் பதிலளித்தனர்.

"நீரை அளவுக்கு மீறி அருந்தியதால் ஏற்பட்ட போதைதான். இவர்களைப் பாதிக்கும் நோய் என்று டாக்டர் கூறினார்."

இம்மாதிரி போதை ஏற்படுவதற்கு காரணம் என்ன? கோடைகாலத்தில் நமது தேகத்திலிருந்து வியர்வை மூலமாகக்கணக்கற்றஅளவு நீரும் சில உப்புச் சத்துக்களும் வெளியாகின்றன. குடங் குடமாய் நீரை அருந்துவதால் தேகத்தில் நீர் தான் சேருகிறது. உப்பு சேருவதில்லை...உப்பும்நீரும் அவை இருக்கவேண்டிய அளவில் தேகத்தில் இல்லாவிடில் போதையும் மரணமும் நேரிடலாம்.

ஆகார வேளையில் நீர் அதிகமாய் அருந்துவதால் மலச்சிக்கல் ஏற்படாதென்று சிலர் நம்புகின்றனர். இது மிகத்தவறான நம்பிக்கையாகும். உட்கொள்ளும் ஆகாரத்தோடு தாராளமாய் நீரும் செல்வதால் வயிற்றில் ஊறும் ரஸங்கள் அபரிமித நீரால் கரைந்து ஆகாரத்தை ஜீரணிக்கக் காரணமான சக்திகுறைந்து விடுகிறது. இதனால் அளவுக்குமீறிய அஜீரணத்தையும் மலச்சிக்கலையுந்தான் விளைவிக்கும்.

அருந்தும் நீரிலும், இதர பானங்களிலும் ஐஸ் கட்

டியை உபயோகப்படுத்துப வர்களுக்கு இதனுல் ஏற் படும் தீங்கென்னவென்பது தெரியாது.

ஐஸைப்போல் மிகவும் குளிர்ந்த நீரை தேகத்திற் குத்தகுந்த அளவில் சூடாக்குவது வயிற்றின் வேலை. இந்த அனுவசிய வேலையில் வயிறு ஈடுபடுவ தால் தேகத்திற்குபலவீனம் ஏற்படுகிறது. இதனுல் தான் கோடை காலங்களில் தேகம் பலவீனமாயிருக்கிறதென்று தாராளமாய்ப் பானவகை களை அருந்துவோர் கூறுவ தற்குக் காரணம்.

குஸ்திச் சண்டையிலீடு படுபவர்கள் நீரையும் இதர பானங்களையும் அதிகமாய் அருந்தமாட்டார்கள்.

பானங்களை அதிகமாய் அருந்துவதால் வயிற் றுக்கு அனுவசிய வேலை ஏற்படுகிறதென்றும் அத னுல் அவர்கள் தொழிலுக் குத் தீங்கு ஏற்படுமென்ப தையும் இவர்கள் நன்கு அறிவார்கள்.

தாராளமாய்த் தண்ணீர் அருந்துவதால் சரும வியா திகள் நீங்கிவிடுமென்ற நம் பிக்கை மிகத் தவருனது.

தேகத்தில் அதிகப்படி யான நீர் சருமத்தில் தங்கி ஏற்கனவேயுள்ள — வியா தியை அதிகரிக்கிறது.

நீரில் கலந்துள்ளதும் ஆரோக்கியத்திற்கு மிக அவ சியமாயுமிருக்கும் ரஸாயனப் பொருள்கள் தேகத்தில் சேருவதற்கு அளவுக்குமீறி நீரை அருந்துவதேயாகும் என்றும் ஒரு மூடநம்பிக்கை நிலவி வருகிறது.

தேக ஆரோக்கியத்திற் குத் தேவையான ரஸாயனப் பொருள்கள் உட்கொள்ளும் ஆகாரத்திலேயே ஏறக் குறைய அடங்கியிருக்கின் றன. அளவுக்குமீறி நீரை அருந்துவதனுல் இந்த ரஸாயனப் பொருள்கள் தேவைக்கு மேல் சேர்ந்து அங்கங்கே தங்கி சதைகளை யும் நரம்புகளையும் அறுத்து விடுகின்றனவென்று சரும வியாதி நிபுணர்கள் கூறு கிருர்கள்.

மேற்கூறியவற்றிற்கெல் லாம் அர்த்தம் நீர் அருந்தக் கூடாதென்பதல்ல. தேக ஆரோக்கியத்திற்கு நீர் மிக அவசியம். ஆனுல் வெளியே வெள்ளம்வந்தால் எவ்வாறு தீங்கு விளைகிறதோ அவ்

வாறே தேகத்திலும் வெள்ளம் ஏற்படும் அளவுக்கு நீரை அருந்தினால் தீங்குதான் ஏற்படும். போதிய அளவுக்கு நீர் அருந்தாவிட்டால் மனிதனுக்குப் பொறுக்கமுடியாத தலைவலி, காது மந்தம், குருடு முதலிய கோளாறுகள் ஏற்படுகின்றன. மூளைக்கோளாறு கூட உண்டாகலாம்.

ஆகாரம் சரிவர சாப்பிடுவோர்கள் ஏறக்குறையத் தேவையான நீரையும் ஆகாரத்தோடேயே அருந்துகிறார்கள். இதைத் தவிரக் குறைந்த அளவில் தனியாக நீரையும் இதர பானங்களையும் அருந்தலாம். நினைத்தபோதெல்லாம் நீரோ பானமோ அருந்தாதிருப்பது பூரண ஆரோக்கியத்தை விரும்புவோரின் கடமையாகும்.

இன்னும் பச்சை தான்

கூண்டுகளிலிருந்து ஒரு பச்சைக்கிளியும் ஒரு சிவப்புக் கிளியும் தப்பித்து பைத்தியக்கார ஆஸ்பத்திரி காம்பவுண்டிலிருந்த மரத்தின்மீது உட்கார்ந்தன. கிளிகளின் சொந்தக்காரர் ஆஸ்பத்திரி அதிகாரியிடம் கிளிகளைப் பிடித்துத்தருமாறு கேட்டுக்கொண்டார். ஆஸ்பத்திரி அதிகாரி சரியென்று சொல்லி, ஒரு குரங்குபோல் நடிக்கும் ஒரு பைத்தியத்தைக் கூப்பிட்டு மரத்திலிருந்த கிளிகளை பிடிக்குமாறு கூறினார்.

அந்த 'குரங்குப் பைத்தியக்காரன்' மரத்தின்மீது தாவி ஐந்தே நிமிஷத்தில் சிவந்த கிளியைப் பிடித்துக் கொண்டுவந்து கொடுத்தான். "மற்றொன்று எங்கே என்று அதிகாரி கேட்டதற்கு, அது இன்னும் பச்சையாய்த்தானிருக்கிறது சார், இன்னும் சிவந்து பழுக்கவில்லை" என்றான்.

GANZON BROS.

DRESS SPECIALISTS
3, THOPE STREET
TRIPLICANE MADRAS-5.

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railyways & Public Bodies, Ready-to-Wear Garments Manufacturers and Exporters.

★

IN the hands of the Master-Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship - Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter century, to the present day.

[ஓர் உண்மை சம்பவம்]

பழிக்குப் பழி!

●

பாகிஸ்தானம் இந்தியாவிலிருந்து பிரிவதற்கு முன்பு முக்கியமான அரசாங்க நிர்வாக அதிகாரிகள் பெரும்பாலும் ஆங்கிலேயர்களே. ஜில்லாக்களில் ஆட்சி செலுத்தும் ஆங்கிலேயர்களை அரசர்களுக்குச் சமானமாகவே பொதுஜனங்கள் கருதிவந்தனர். ஜில்லா அதிகாரிகள் வசித்துவந்த கட்டிடங்கள் இந்த அதிகாரிகள் எவ்வளவு படாடோபத்துடன் வாழ்க்கை நடத்திவந்தார்களென்பதற்கு இன்றும் அத்தாட்சியாக விளங்குகின்றன. அன்று இந்தியாவில் சேர்ந்திருந்த மேற்குப் பஞ்சாபில் ஒரு நகரத்தில் ஜில்லா அதிகாரியாக இருந்த ஒரு ஆங்கிலேயரைப் பற்றிய கதை இது:

அதிகாரிக்கென்று ஏற்பட்டிருந்த பிரம்மாண்டமான மாளிகையில் இவரும் இவருடைய யௌவன மனைவியும் உல்லாசமாக வாழ்ந்து வந்தார்கள். அரசியல் ஆதிக்கத்தின் ஒரு முக்கியமான அம்சம் ஆதிக்கத்தைச் செலுத்துவோருக்கு அவர்களின் அடிமைகளைப் பற்றின மனப்பான்மையே ஆகும். ஆங்கிலேயர்களில் ஆண்கள் இந்தியாவைப் பற்றியும் இந்தியர்களைப் பற்றியும் சிறிது ஞானமுடையவர்கள். ஆங்கில ஸ்திரீகளுடைய மனத்தில் இந்தியாவைப் பற்றிக் குடிகொண்டிருந்த பேதமையான கருத்துக்களுக்கு அளவேயில்லை. ஆங்கில ஸ்திரீகள் பாம்பு, மகாராஜா மந்திராவாதி என்ற மூன்று இனத்தார்களைக் கொண்டதுதான் இந்தியா தேசம் என்றே கருதிவந்தார்கள். ஆகவே எந்த இந்தியரைக் கண்டாலும் அவர்களுக்கு மனத்தில் வெறுப்பும் பீதியும் தான் ஏற்படும்.

தங்களிடம் சம்பளம் பெற்று ஊழியம் புரியும் இந்தியர்களைப் பற்றி வெறுப்பிருந்தும் அவ்வளவு பயமில்லாததற்குக் காரணம் அவர்களைப் பலாத்காரமாக அடக்கியாள வசதி பெற்றிருந்ததால்

தான். மேற்கூறிய ஜில்லா அதிகாரி தினந்தோறும் காலையில் தன் மனைவியுடன் மோட்டாரில் ஆபீஸுக்குப் புறப்படுவார். கணவனை ஆபீஸில் இறக்கிவிட்டு மனைவி மார்க்கெட்டுக்குச் சென்று வீட்டுக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக் கொண்டு திரும்புவாள்.

இம்மாதிரி தினமும் போகும்போதும் வரும் போதும் தன் வீட்டு வாசலில் வாடிக்கையாய் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரனை மிகவும் வெறுப்புடன் கவனித்து வந்தாள். இவன் தேகம் முழுவதும் அணிந்திருந்த விபூதி, ருத்திராட்ச மாலை, தலையிலிருந்த சடை, கையிலேந்திக் கொண்டிருந்த கமண்டலம், தடி, கபாலம் முதலியவையும் இவளுக்கு அருவருப்பைத் தந்தன.

"பிச்சை போடுங்கோ பிச்சை போடுங்கோ" என்று பார்ப்பவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த இவனுடைய ஓலம், ஒரு பிச்சைக்காரனின் விண்ணப்பமாக இவள் மனத்தில் படவேயில்லை. ஒரு பேயின் கூக்குரலைப் போல் இவளுக்குப் பயமளித்தது.

இந்தப் பிச்சைக்காரனைப் பற்றி இவள் தன் கணவனிடம் இரண்டொரு முறை புகார் செய்தாள். ஆனால் அதை அவர் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஒரு நாள் காலையில் இவள் வீட்டுக்கு வந்ததும் தன் வீட்டுச் சிப்பந்திகளிடம் பிச்சைக்காரனை வீட்டு வாசலிலிருந்து துரத்தும்படி உத்தரவிட்டாள். அதன்படியே அவர்கள் பிச்சைக்காரனைத் துரத்திவிட்டார்கள்.

ஜில்லா அதிகாரி மனைவியின் மனம் ஒருவாறு நிம்மதியடைந்தது. பிச்சைக்காரனைத் துரத்தியபின் நாலைந்து தினங்கள் ஆபீஸுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் சென்று கொண்டிருந்தாள்.

ஒரு நாள் வழக்கம்போல் கணவன் மாலையில் வீட்டுக்கு வந்தான். அன்று குதூகலத்தோடு விருந்தினருடன், கணவனும் மனைவியும் சினிமா பார்த்துவிட்டு இரவு உணவருந்தியபின் நித்திரைக்குச் சென்றார்கள்.

அன்று பௌர்ணமி இரவு. பூரணசந்திரனின் ஒளி இரவைப் பகலாக்கிக் கொண்டிருந்தது. இரவு சுமார் இரண்டு மணி இருக்கும். ஜில்லா அதிகாரி வீட்டில் யாவரும் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தனர். உலகமே ஆழ்ந்தநித்திரையிலிருக்கும் சமயம் அல்லவா அது! எங்கும் நிசப்தம் நிலவியிருந்தது. திடீரென ஒரு சப்தம். ஒரு பொருளை கர கரவென்று கரடுமுரடான இடத்தில் இழுக்கும் போது உண்டாகும் சப்தம். அந்த வீடெங்கும் இந்த சப்தங்கேட்டது. தூக்கத்திலாழ்ந்திருந்த ஜில்லா அதிகாரி திகிலடைந்து கண் விழித்தார். கடிகாரத்தில் மணி இரண்டடித்திருப்பதைக்கண்டதும் "இந்த நேரத்தில் என்ன சப்தம்" என்று பீதியடைந்தார். ஜன்னல் வழியே வெளியே நோக்கி சப்தத்தின் காரணத்தை அறிந்துகொண்டார்.

என்ன அதிசயம்! ' அந்த மாளிகையின் ஹாலிலும் வேறு அறைகளிலும் தாழ்வாரத்திலும் விரித்திருந்த தென்னங் கயிற்றுப் பாய்களெல்லாம் தானகவே வெளியே சென்றுகொண்டிருந்தன! மிகத் துரிதமாகவும் சென்று கொண்டிருந்தன. ஒருவர் இவற்றை கயிறுகட்டி இழுப்பதுபோல அவ்வளவு வேகமாகச் சென்றுகொண்டிருந்தன.

ஜில்லா அதிகாரி மிகவும் பயமடைந்தார். இம்மாதிரி நிகழ்ச்சியை அவர் இது வரைக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. மனைவியைத் தட்டியெழுப்பினர். பாய்கள் வெளியே சென்று கொண்டிருப்பதைக் கண்டு ஐயோவென்று அலறினள் மனைவி. அவளுடையசத்தத்தைக்கேட்டு வேலைக்காரர்களெல்லோரும் விழித்துக் கொண்டு அதிகாரியின் அருகே வந்தார்கள். இந்த நிகழ்ச்சியைக்கண்ட இவர்களும் மிகவும் ஆச்சரியமும் அச்சமுமடைந்தார்கள். சற்று ஆறுதலடைந்ததும் அதிகாரி இந்த நிகழ்ச்சியின் காரணம் என்னவென்று விசாரிக்கத் தொடங்கினர். ஒருவருக்கும் ஒன்றுமே விளங்கவில்லை.

"இன்றைக்கோ அல்லது சமீபத்திலோ அசாதாரணமாக ஏதாவது நடந்ததா" என்று மனைவியைக் கேட்டார். சற்று யோசனை செய்து பிச்சைக்காரனை

வீட்டு வாசலிலிருந்து துரத்தியதைக் கணவனுக்கு அறிவித்தாள் மனைவி. உடனே வீட்டு வேலைக்காரர்கள், "நாங்களெல்லோருமாகச் சேர்ந்துதான் அவனைத் துரத்திவிட்டோம். துரைசாணி அம்மாவையும் எங்களையும் அவன் சபித்துக் கொண்டேவெளியேசென்று ஐந்தாறு தினங்கள் ஆகின்றன" என்று கூறினார்கள்.

"பிறகு அவனைப் பற்றி வேறொரு தகவலும் கிடையாதா?" என்று மீண்டும் அதிகாரி கேட்டார்.

"ஒன்றுமில்லை," என்று பதிலளித்தனர் வேலைக்காரர்கள். இத்தருணத்தில் துரைசாணி அம்மாளுக்குப் பணிவிடை செய்யும் வேலைக்காரப் பெண், "இரண்டு தினங்கள் முன்பு நடுப்பகல் வேளையில் அந்தப் பிச்சைக்காரன் இங்கு வந்தான்" என்று கூறினாள்.

"அப்படியா, எதற்காக?" என்று அதிகாரி, மனைவி, வேலைக்காரர்களனைவரும் ஏகக் குரலில் அதிசயத்துடன் கேட்டனர்.

"இங்கு வந்த சமயம் துரைசாணி அம்மாள் நித்திரை செய்துகொண்டிருந்தாள். வேலைக்காரர்களும் அவரவர் வேலைகளை கவனித்துக்கொண்டிருந்ததால் பிச்சைக்காரன் வந்தது அவர்களுக்குத் தெரியாது. என்னிடம் வந்து துரைசாணி அம்மாளின்ஒரு தலைரோமத்தை கேட்டான். எனக்குப் பயமாயிருந்ததால் வீட்டில் விரித்துள்ள கயிற்றுப் பாயிலிருந்து ஒரு இழையை எடுத்து அவனிடம் கொடுத்தேன்" என்றாள்.*

அன்றிரவில் கண்ட நிகழ்ச்சியின் உண்மை அப்பொழுதுதான் விளங்கிற்று. "இவள் கொடுத்த கயிறு இழையை துரைசாணி அம்மாளின் தலைரோமமென்றே நினைத்துக்கொண்டு மாந்திரீகம் செய்திருக்கிறான், பிச்சைக்காரன்" என்று வேலைக்காரர்கள் கூறினர்.

"அது உண்மையில் என் தலைரோமமாயிருந்தால் என் கதி என்னவாயிருக்கும்" என்று பீதியில் மூழ்கிக் கிடந்த துரைசாணி கண்

---

*வெள்ளையர்களின் தலை ரோமம் கயிற்றின் இழையைப்போல் செம்பட்டை நிறமாயிருக்கும்.

ணீர் சிந்தியவாறே கூறி ஞள்.

★

மேற்கூறியுள்ளது ஒரு உண்மைச்சம்பவம். நாடோடி யான வெறும் பிச்சைக்கார னுக்குக்கூட எவ்வளவு பயங் கரமான சக்தியிருக்கிற தென்பதற்கு இது அத் தாட்சியாகும். இவ்விதமான அசாதாரண சக்திகளை நல்ல மனிதர்கள் மட்டும் பெற்று அவற்றை நற்காரி யங்களுக்கே உபயோகித் தால் மாந்திரீகம் மூலமா யும் பொதுமக்கள் நலம் பெற முடியுமல்லவா?

மாந்திரீகம் என்பது சில கோர மனிதரிடம் அகப்பட் டுக்கொண்ட ஒரு பேய்ச் சக்தியாகும் என்று பொது வாக ஒரு அபிப்பிராயமிருப் பதற்கு ஒரு முக்கிய காரணம் இந்த பிச்சைக் காரனைப்போன்றவர்கள் இந் தச் சக்தியைப்பெற்றிருப் பதேயாகும்.

திரட்டு

சிறந்த மாதாந்திர கட்டுரைப் பொக்கிஷம்

1/C 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !

★ பலதரப்பட்ட விஷயங்கள் !

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.

வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

பாம்பு ஆடுவது ஏன்?

•

பாம்பாட்டி மகுடி ஊதும்போது பாம்பு படமெடுத்து ஆடுங் காட்சியைக் கண்டவர்களுக்கெல்லாம் பாம்பாட்டிச் சித்தரின் பாட்டில் பாம்பு மயங்கிக்கிடப்பதாகவே தோன்றும். ஆனால் உண்மையில் பாம்புக்குக் கேட்கும் சக்தி கிடையாது. ஏனென்றால் பாம்புகளுக்கு இயற்கையாகவே காதுகள் கிடையாது. அப்படியானால் பாம்பாட்டியின் மகுடி நாதத்திற்கேற்ப பாம்பு எப்படி ஆடுகிறது? இவ்வாறு ஆடுவதற்கு பாம்பாட்டி பயிற்சியளிக்கிறான்.

நல்லபாம்பை பாம்பாட்டிப் பிடிக்கும்போது அவன் மகுடிக்குத் தகுந்தாற்போல் ஆடவே தெரியாது. இவன் ஊதுவது அதற்குக் கேட்கவும் கேட்காது. ஒரு சிறிய பாம்பைப் பிடித்துக் கூடையில் வைத்து அதன் முன்னால் மகுடியை ஊதத் தொடங்குவான். மகுடியால் அதன் மேல் குத்தினால் பாம்பு படத்தை விரிக்கத் தொடங்குகிறது.

படத்தை விரித்ததும் பாம்பாட்டி படத்தின் இரு பக்கங்களிலும் மகுடியால் மெல்ல அடிக்கிறான். அடித்தவுடன் இரு பக்கங்களிலும் சாய்ந்துகொண்டு ஆடத் தொடங்குகிறது.

இப்படி நாலைந்து தடவை ஊதும்போது அதை அடித்தடித்து பயிற்சியளிப்பதால் பாம்பாட்டி மகுடியை வாயில் வைக்கும்போதே பாம்பு இருபுறமும் நெளிந்து ஆடத் தொடங்குகிறது. பாம்பு ஆடுவதற்குக் காரணம் பாம்பாட்டி மகுடியால் அடிப்பதற்குப் பயந்தேதான்.



உங்களுக்குத் தெரியுமா?



★

ஒரு ராத்தல் எடையுள்ள பட்டுநூல் தயாரிப்பதற்கு பதினாறாயிரம் பட்டுப் பூச்சிக் கூடுகள்தேவை.

★

பழைய காலத்தில் தேன் ஒன்றுதான் இனிப்புப் பண்டமாக இருந்தது. ஆனால் பொருள்களை இனிப்பாக்குவதற்குமட்டுமல்லாமல் வேறுவிதங்களிலும் உபயோகித்து வந்தனர். எகிப்தியர்கள் மாண்டுபோனவர்களின் சவங்களைக் கெடாமல் வெகுநாட்கள் வைத்திருப்பதற்குத் தேனை சவத்தின்மீது தடவி வந்தார்கள். அஸ்ஸீரியாவாசிகள் தேனையும் தேனீயையும் எண்ணெயில் கலந்து காய்ச்சி தலைரோமங்கள் நரைக்காமலிருப்பதற்கு உபயோகித்து வந்தார்கள்.

டென்மார்க்கு தேசத்தவர்கள் மதுபானத்தில் தேனைச் சேர்த்து வந்தார்கள்.

★

குழந்தை பிறந்த நாலாவது தினத்திலிருந்து செவிகள் கேட்கின்றன. ஆனால் கண்களுக்கோ ஆறாவது மாதத்திலிருந்துதான் பூரணசக்திஉண்டாகிறதாம்.

★

சிங்கப்பூர் தீவை ஒரு ஆங்கிலேயர் 20,000 பவுன்கள் விலைகொடுத்து தன் சொந்தச் சொத்தாக வாங்கினாராம். அவர் வாங்கும்பொழுது இத்தீவில் மலேயச் செம்படவர்கள் தான் சிலர் வாழ்ந்து வந்தனர். இப்போது உலகத்திலேயே சிங்கப்பூர் ஒரு முக்கியமான துறைமுகமாகும்.

★

ஐரோப்பிய தேசங்களில் பால்கறக்கும் பசுக்கள் தினமும் 10 அல்லது 15 காலன் வரை நீரைக் குடிக்கின்றனவாம்.

என் கருத்து

★

'திரட்டு' என்னும் தமிழ் மாதப் பத்திரிகையைத் தொடக்க முதல் கிரமமாகப் படித்து இன்புற்று வருகிறேன். அறிவு வளர்ச்சிக்குரிய கல்வித் துறைகள் பலவற்றின் நுட்பங்களைப் பலபடியாகத் தொகுத்து வெளியிட்டு வரும் திரட்டு ஆசிரியர்கள் உழைப்பும் உறுதியும் போற்றத்தக்கன.

இப் பத்திரிகையை வெளியிடுவதில் பெருத்த லாபம் கிடைக்க வழியில்லை என்பதை உலகம் நன்குணரும்; ஆயினும், விஞ்ஞானம், அரசியல், சமூகம், கல்வி ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதுவித்துத் தொகுத்து மக்களது அறிவை வளர்ச்சியுறச் செய்து, நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவி செய்வதே இப்பத்திரிகை ஆசிரியரின் நோக்கமாகும்.

இந்தத் 'திரட்டு'க்கு அன்புடன் உழைக்கும் பிற நண்பரையும் நான் பாராட்டுகிறேன். பல தடைகளுக்கிடையே, திரட்டு ஆசிரியர்கள் இப்பத்திரிகையின் முன்னேற்றத்தைக் கருதிச் செய்யும் முயற்சிகளனைத்தும் இறைவன் திருவருளால் வெற்றி பெறுவதாக! தமிழ் நாட்டார் ஆதரவு இவர்கள் முயற்சிக்கு மேன்மேலும் பெருகுவதாக!

இங்ஙனம்: அன்பன்:

வே. துரைசாமி

தலைமைத் தமிழாசிரியர்,

P. S. High School, P. S. ஹைஸ்கூல், மயிலாப்பூர்,

6—6—1954. சென்னை.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம் நூலகம் சென்னை-600 008 1718 349

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor :- N. S. MANI.

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR

ALL YOUR DRESS

REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107,. Moore Market,

MADRAS - 3

இளநரை
தடுத்து
கூந்தல்
செழிக்க

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54. அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன்,

54, பந்தர் தெரு, சென்னை - 1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room:
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.